1528

T.N.L.A. Debates.

Official Report

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
DIGITIZED

Vol. 5 . No. 2

28.07.1980

1980

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

D
V211,31 N80
N81.6.2
123067

வெளியீடு 10-12-1980] [Issued 10-12-1980

... TAMIL NADU
... HISTORICAL RESEARCH
5-4-1981
1528

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு — OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1980 ஜூலை 28
MONDAY 28TH JULY 1980

தொகுதி V—எண் [illegible]—VOL. V—No. [illegible]

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத்துறை, சென்னை-600 009
Assembly Department, Fort. St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price Rs. 3.15 Paise

D 1
V211,31 N80
N81.6.2
123067
LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

உள்ளடக்கம்.

28—7—1980

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள் 191–222

2. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது செய்யப்பெற்ற செய்தி. .. 222–223

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது. 261–262, 265–266

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

தமிழ்நாடு உடற்பயிற்சி ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம். .. 224–228

4. அரசினர் தீர்மானம்—

விதி 200(3)ஐத் தளர்த்தல் 229

5. கவன ஈர்ப்புகள்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சக்கலைப் பகுதியில் மர்ம நோய் காரணமாகப் பலர் மரணம் அடைந்துள்ளது. .. 229–235

(ஆ) தஞ்சைமாவட்டம், மன்னார்குடி, பட்டுக் கோட்டை பகுதிகளில் தண்ணீர் இன்றி பயிர்கள் வாடுவது. .. 235–236

6. வரவு-செலவுத் திட்டம் 1980-81— வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 36—பாசனம் 237–238, 320

(ஆ) கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு 238–261, 262–265, 266–277, 280–320, 320–321

128-196—A

பக்கங்கள்.

6. வரவு செலவுத் திட்டம் 1980—1981—
வாக்கெடுப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது	237-240
திரு. த. வேணுகோபால்	240-244
திரு. கே. குப்புசாமி	244-249
திரு. ஆர். சுந்தரமூர்த்தி	249-253
திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம்	253-255
திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்	255-260
திரு. வ. சத்தியமூர்த்தி	260-265
திரு. இரா. கருப்பையா	266-271
திரு. எம். பிச்சை	271-273
திரு. எஸ். என். இராமசாமி	274-275
திரு. வே. இரா. ஜெயராமன்.	275-277
திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்	280-285
திரு. த. இராமசாமி	285-288
திரு. இல. பலராமன்	288-291
திரு மு. ஜான் வின்செண்ட்	291-296
திரு. பி. முகமது இஸ்மாயில்	296-298
திரு. கு. பா. பழனியப்பன்	298-302

7. அறிவிப்பு—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது.	277-278

8. அரசினர் தீர்மானம்—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை.	278-280

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்	321
(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்	321
இணைப்புகள்	322-330

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1980 ஜூலை 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன்காப்பு''.

ஏர் உழுதலைக் காட்டிலும், எருவிடுதல் நல்லது. களை எடுத்த பிறகு நீர்ப்பாசனத்திற்கு ஆவன செய்வது தக்கது. பயிர் அழியவொட்டாமல் காப்பது அதனினும் மேலாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 56, 57 மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வேலூர் முத்துரங்கம் கலைக்கல்லூரி.

*வினா எண். 58—திரு. இல. பலராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் வேலூர் முத்துரங்கம் கலைக்கல்லூரியில் பட்ட மேல்படிப்பு (M.A., M.Sc.) போன்ற வகுப்புகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரியில் எம்.ஏ. (M.A.) எம்.எஸ்ஸி. (M.Sc.) வகுப்புகள் ஆரம்பிக்க கருத்துரு ஏதும் இல்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட மேல்படிப்பு துவங்குவதற்கான கருத்துரு இல்லை என்று கூறினார்கள். வட ஆற்காடு

மாவட்டத்திலே அரசினர் கலைக் கல்லூரிகளிலே இப்படிப்பட்ட மேல் பட்டப்படிப்பு இல்லை. ஆகவே, அடுத்த ஆண்டிலாவது துவங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வணிக இயல் மேல் பட்டப் படிப்பு அதாவது எம்.காம்., துவங்கப்பட இருக்கிறது. எம்.ஏ., எம்.எஸ்ஸி., போன்ற மேல் பட்டப் படிப்பு துவங்க வேண்டுமானால், அதற்கான புரபோசலை முன்னதாக யூனிவர்சிடிக்கு அனுப்பிப்பெற, அதற்கான கருத்துருகளை அந்தந்தக் கல்லூரியின் தலைவர்கள் செய்ய வேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ளவர்கள் மேல்நிலை பட்டப் படிப்பு படிக்க சென்னை மற்றும் சிதம்பரம் போன்ற இடங்களுக்குப் போகவேண்டியிருப்பதால், வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டே துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி இல்லையென்றால், அடுத்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் பயன்பெறுகின்ற அளவுக்கு அங்கே இந்த எம்.ஏ., எம்.எஸ்ஸி. படிப்புகளை கல்லூரிகளில் துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தெந்த கல்லூரிகள் முன் வருகின்றவோ, அந்தந்த கருத்துருவின் அடிப்படையிலே பல்கலைக்கழகம், அரசு பரிசீலித்து மேல்நிலைப்பட்டப்படிப்புகளைத் துவக்குகின்றது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த அரசினர் கல்லூரிகளில் எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டப்படிப்பைத் துவக்குவதற்கு யூனிவர்சிடிக்கு ஏற்கனவே கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது? இனிமேல் அனுப்ப என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், சம்பந்தப்பட்ட துறையினர் பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும். அதை பல்கலைக்கழகம் பரிசீலனை செய்து அரசு அதற்கு ஆதரவாக உத்தரவுகளைப் போடும்.

[1980 ஜூலை 28

அரசினர் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.

*வினா எண் 59—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் முதுநிலை பட்டப்படிப்பு துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கேட்டதைப்போல், திருவண்ணாமலைப் பகுதியில், குறிப்பாக தெற்குப் பகுதியில் அரசாங்கக் கல்லூரிகளிலும் தனிப்பட்டவர்கள் கல்லூரியிலும் இந்த மேல் பட்டப்படிப்பு வசதி இல்லை. இதை மனதிலே இருத்தி, அரசாங்க கலைக் கல்லூரியிலே இதற்கான இட வசதி, கட்டிட வசதி இருப்பதால், அங்கே இந்த மேல்நிலைப் பட்டப்படிப்பைத் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அங்கிருக்கின்றவர்கள் பல்கலைக்கழகத்தோடு தொடர்புகொண்டு அதற்கான அனுமதி பெற வேண்டும். அரசு அவர்களுக்கு வேண்டிய ஆதரவைத் தருவதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, 75ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு அங்கிருந்து மேல் பட்டப்படிப்பு துவங்க வேண்டுமென்று அனுப்பப்பட்டது. அது என்ன ஆயிற்று? மற்றும், வட ஆற்காடு மாவட்டத்திலே சட்டக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டது, இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, வட ஆற்காடு மாவட்டத்தை ஏன் இந்த அரசாங்கம் புறக்கணிக்கின்றது என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தையும் புறக்கணிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. இப்போது இருக்கின்ற நிலைமைகளில் அபிவிருத்தியை முன்னேற்றத்தைச் செய்து கொண்டிருக்கிறோமே தவிர, அந்த முன்னேற்றத்தைத் தனிப்பட்டமுறையில் புறக்கணிக்கும் நோக்கம் இல்லை என்பதை கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்து வருகிற நிர்வாகச் சீர்திருத்தங்களைப் பார்த்தாலே தெரியும். வட ஆற்காடு மாவட்டம் பின்தங்கி இருக்கிறது என்று சொன்னால்

ஏற்கனவே பின்தங்கியிருந்த காரணத்தாலே பின்தங்கியிருக்கலாமே தவிர எங்களால் பின்தங்கியதாக ஆக்கப்படவில்லை. பின்தங்கிய பகுதிகள் தற்போது முன்னேறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் அங்கே இருந்து வருகிற ப்ரொபோசல்சை வைத்து பல்கலைக் கழகம் அந்த கல்லூரியைப் பார்த்து அங்கு இருக்கிற வசதிகளைப் பார்த்து அவர்கள் ஒரு முடிவு எடுக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரை நிலைமை—பி.யு.சி.யை எடுத்ததால் பல ஆசிரியர்கள் உபரியாக இருக்கிறார்கள், அவர்களைப் பயன்படுத்துகிற வகையில் புதிய பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதே தவிர, புதிய பிரிவுகளை ஆரம்பிக்கக்கூடாது என்ற நிலைமை இல்லை. இட நெருக்கடி ஏற்பட்டு மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டபோது கூட பொதுவான அறிவுரை கூறியிருக்கிறோம்—புதிதாக என்னென்ன பிரிவுகளை ஆரம்பிக்க முடியுமோ அவற்றை ஆரம்பிக்க உடனடியாக அனுமதி பெற்று ஆரம்பிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழு கல்லூரிகள் இருந்தும் எம்.எஸ்.ஸி., கோர்ஸ் இல்லாததால்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி திருவண்ணாமலையைப் பற்றியது.

திரு. பாபு ஜனார்த்தனன் : அடுத்த ஆண்டிலாவது திருவண்ணாமலையில் மேல் பட்டப்படிப்பு வகுப்புகள் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேள்வியின் நோக்கமே அடுத்த ஆண்டு ஆரம்பிப்பதற்கு அரசு உறுதி வழங்க முடியுமா என்ற அடிப்படையில்தான் கேட்கப்படுகிறது. இந்தப் பிரிவுகளை ஆரம்பிக்கும் முயற்சியை முதலில் அந்தக் கல்லூரி எடுத்துக் கொண்டு, பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டவுடன் அரசு அதற்கான உதவிகளை அளிக்கும் நிலைமை இருக்கிறது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால் நிச்சயமாக அரசு தேவையான உதவிகளைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகிறது.

1980 ஜூலை 26]

நாசரேத் பேரூராட்சிப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

*(வினா எண் 61. திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி நாசரேத் பேரூராட்சிக்கு தாமிரபரணி நதியிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்ட வேலை நடைபெறாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை தொடர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்:

(அ) & (ஆ): நாசரேத் குடிநீர் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டதும் வேலைகள் விரைவில் தொடங்கும்.

திரு. எஸ். என். இராமசாமி: சாத்தான்குளம் தொகுதி நாசரேத் பேரூராட்சிக்கு தாம்பிரபரணி நதியிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வரும் திட்ட வேலையை உடனே துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இத்திட்ட வேலைக்கான பெரும்பாலான தளவாடப் பொருள்கள் பெறப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வேலை துவங்கப்படும். இவ்வேலை 1981ஆம் ஆண்டுக்குள் முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. குப்புசாமி: கிராமப்புறங்களில் குடி தண்ணீர்த் திட்டத்திற்காக ஆங்காங்கே பூமியில் குழாய்கள் போடப்படுகின்றன. அவை ரிப்பேர் ஆகிவிட்டால் ரிப்பேர் செய்வதற்கு மெகானிக்குகள் பிட்டர்கள் இல்லாத நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சாத்தான் குளத்தைப் பற்றியது.

[1980 ஜூலை 28

ஈரோடு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

*வினா எண். 62—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு ஊராட்சி ஒன்றியத்துக் குட்பட்ட வீரப்பன்சத்திரம் பேரூராட்சி, அக்கிரகாரம் பேரூராட்சி, சூரம்பட்டி ஊராட்சி, காசிப்பாளையம் பேரூராட்சி ஆகியவற்றில் குடிநீர் சப்ளை திட்டம் தயாரிக்கப்பட்டு இதுவரையில் பூரணமாக நிறைவேற்றப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கென்ன காரணம்?

(இ) அதை துரிதமாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) (ஆ) மற்றும் (இ): வீரப்பன்சத்திரம், பெரிய அக்கிரகாரம் பேரூராட்சிகளுக்கு 28—4—1980 முதல் குடிநீர் விநியோகிக்கப் பட்டு வருகிறது. காசிபாளையம் பேரூராட்சியிலும், சூரம்பட்டி ஊராட்சியிலும் குடிநீர்த் திட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிவுற்று பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப் படும்.

திரு. கு. ரமணி : இந்தப் பேரூராட்சிகள் அத்தனையும் ஈரோடு நகரத்தைச் சுற்றிலும் இருக்கும்படியான ஓரளவு அபிவிருத்தி அடைந்துள்ள இடங்கள். இந்த இடங்களில் குடிதண்ணீர் திட்ட விஷயத்தில் இவ்வளவு காலதாமதம் ஏற்பட என்ன காரணம்?

[முற்பகல் 9-10]

இரண்டு இடங்களுக்கு, இரண்டு பேரூராட்சிகளுக்கு வழங்கப் பட்டு விட்டது என்று சொன்னார்கள். நல்லது, அதை நாங்கள் வரவேற்கிறோம். இன்னும் இரண்டு இடங்களிலே ஆரம்பிப்பதற்கு இவ்வளவு காலம் ஆகிறதே, ஏன் இவ்வளவு தாமதம் என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 ஜுலை 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இரண்டு முடிந்து விட்டது என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறார்கள். இத்திட்டத்தில் காசிபாளையம்-சூரம்பட்டி பேரூராட்சிகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய, வீரப்பன்சத்திரம்— பெரிய அக்கிரகாரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பிரதான நீரேற்றுக் குழாயிலிருந்து தகுந்த பிரிவு ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன, இதற்காக 27—3—1978-ம் நாளிட்ட அரசாங்க ஆணை எண். 459-ல் ரூ. 53.96 இலட்சம் அமைப்புச் செலவிற்கும், ரூ. 1,67,400 ஆண்டு பராமரிப்புச் செலவிற்கும் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

வீரப்பன்சத்திரம் பெரிய அக்கிரகாரம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் மார்ச் 1975-ல் துவக்கப்பட்டு, பெரும்பாலான பணிகள் யாவும் முடிவுற்று, பொதுமக்களுக்கு 28—4—1980 முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

காசிபாளையம் பேரூராட்சி, சூரம்பட்டி ஊராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் 1978-ம் ஆண்டு துவங்கப்பட்டன.

இத்திட்டப் பணிகள் யாவும் 1981-ம் ஆண்டு மார்ச்சு மாதம் பூரணமாக முடிந்து பொதுமக்களுக்குப் பயனளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பல விவரங்களைத் திரட்டியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தகுந்த விஷயம். ஆனால், எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். நான் மறுபடியும் சொல்கிறேன். காவேரி யாற்றங்கரையில் இருக்கிற இடம் அது. அந்த இடத்திற்கு தண்ணீர் கொடுக்க இவ்வளவு நெருக்கடி ஏன் வந்தது? எதிர்பார்க்கப்படுகிறது என்பதற்குப் பதிலாக இன்னும் இரண்டு மாத காலத்திற்குள்ளே அந்த நீர்த் திட்டத்தை நிறைவேற்றி குடிக்க தண்ணீர் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, எதிர்பார்க்கப்படுகிறது என்பதற்குப் பதிலாக விரைவில் முடிப்பதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொல்லுகிறேன்.

திரு. கோவைத்தம்பி: தலைவரவர்களே, காவேரியாற்றிலிருந்து குழாய் மூலம் குடிநீர் கொண்டு வர, ஈரோடு மாவட்டத்திற்கு—குறிப்பாக ஈரோடு நகரத்திற்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அது எவ்வளவு நாட்களில் நிறைவேறும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஈரோடுக்கு குடிக்கத் தண்ணீர் இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, காவேரியாற்றை ஒட்டியிருக்கும், மிக அருகில் உள்ள ஊர்களுக்கு இரண்டாண்டுகளுக்கும் மேலாக திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இரண்டு மூன்று ஆண்டுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களே நிறைவேற்றப்படாமல் இருந்தால், புதிதாகக் கிணறுகள் வெட்டி தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கும் கிராமங்களுக்கு எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்? ஆகவே, இவைகளை உடனடியாக கால வரம்புக்கு உட்பட்டு செய்து கொடுக்க அரசாங்கம் வேலைகளை ஆரம்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, கேள்வி பெரியார் மாவட்டத்திலுள்ள ஊரைப் பற்றியது. பேரூராட்சியில் அல்லது நகராட்சியில் தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானத்தை அனுப்பி, இன்வெஸ்டிகேசன் சார்ஜஸ்— ஆய்வுப் பணம் கொடுத்து, அந்தப் பணம் கிடைத்த பிறகு ஆய்வு செய்து, அது முடிந்த பிறகு இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் ஆகும், இதைப் பராமரிக்க எவ்வளவு ரூபாய் ஆகும் என்பதைப் பார்த்து, அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள் சொல்லி, பிறகு பணத்தை வாங்கி, அதற்குப்பிறகு வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கால தாமதம் ஆகிறது என்று கருதினால், கூடுமான வரையில் இந்தப் பணிகளை விரைவில் செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்கு நான் ஆணையிடுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கேள்வி பெரியார் மாவட்டத்தைப் பற்றியது என்று சொல்லிவிடக் கூடாது. பொதுவாக இங்கே இருக்கின்ற பிரச்னைகளை எடுத்துக்கொண்டால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அப்படிச் சொல்லக் கூடாது என்று ஆரம்பிக்காதீர்கள், கேள்வி பெரியார் மாவட்டத்தைப் பற்றியது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: இதுபோன்ற குடிநீர்த் திட்டங்கள் பல ஆண்டுகாலமாக முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. சில சமயங்களிலே பாதித் திட்டங்கள்

நிறைவேற்றப்பட்டு பாதி அப்படியே விட்டுவிடப்படுகிறது, இப்படி 2, 3 கேள்விகள் வந்தபோது நான் எடுத்துத் தெரிவித்திருக்கிறேன், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்படாத திட்டங்கள் என்ன என்ன என்று கேட்டு அந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வியாகப் போட்டால் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கப்படும்.

குளித்தலை அரசினர் மருத்துவ மனை.

*வினா எண் 63—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசினர் மருத்துவ மனையில் பிரசவ விடுதி கட்டுவதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) குளித்தலை அரசு மருத்துவ மனையில் பிரசவ விடுதி கட்டுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி பிரசவ விடுதி கட்டவேண்டுமென்று மாவட்ட அதிகாரிகளால் அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்த வரையில் 1975 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதியன்று அரசு ஆணை எண் 812 இன் அடிப்படையிலே 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இது விரிவுபடுத்தப்பட்டது. இது இப்போது 3 லட்சம் பேர்களுக்குப் பயன்படுவதாக உள்ளது. அதற்காக மீண்டும் 100 எம்.ஏ. எக்ஸ்ரே யூனிட்டும்

மற்ற வசதிகளும் செய்யப்பட்டன. 1979 ஆம் ஆண்டிற்குப் பிறகு அங்கே லேபர் வார்டு, ஆப்ரேஷன் தியேட்டர் எல்லாம் வேண்டுமென்பதாக அந்த டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீசர் வாயால் சொன்னார்களே தவிர எழுத்துமூலமாகச் சொல்லவில்லை. எழுதிக்கேட்டு அதைப்பற்றி விசாரித்திருக்கிறோம். அந்தக் குறிப்புகள் வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

திரு. ஏ.டி. கருப்பையா : மூன்று லட்சம் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய முறையிலே இந்த மருத்துவ மனை அமைக்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த மக்களின் தேவைகளைக் கணக்கில் எடுத்து இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, மாவட்ட அதிகாரியிடத்திலே அந்தக் குறிப்புகளை எழுத்துமூலமாக அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அந்தக் குறிப்புகள் வந்தவுடன் விரைவிலே எல்லா வகையான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இடைப்பாடி நகராட்சி மகப்பேறு இல்லம்.

*வினா எண் 64—திரு. இ, கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகராட்சி பொறுப்பி லுள்ள ''நகராட்சி மகப்பேறு இல்லத்திற்கு'' ஒரு பெண் மருத்துவர் நியமிக்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை பெண் மருத்துவர் அங்கு நியமிக்கப்படாமலிருக்க காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) ஆம்.

(ஆ) அங்கு ஒரு பெண் மருத்துவர் முன்பே நியமிக்கப் பட்டுள்ளார். அப்பெண் மருத்துவர் சிறுகச்சிறுக பலமுறை தொடர்ந்து மருத்துவ விடுப்பில் சென்றதால் அதை உடனே நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டது.

1980 ஜூலை 28]

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, ஏறக்குறைய $1\frac{1}{2}$ ஆண்டுகாலமாக அந்த பெண் மருத்துவர் விடுப்பிலே இருந்தார். 20 ஆயிரம் தாய்மார்கள் அந்தப் பகுதியிலே இருக்கிறார்கள். இந்த நிலையில் ஒன்றரை ஆண்டுக்காலமாக அந்தப் பெண் மருத்துவர் விடுமுறையில் இருந்தார் என்றால் அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? மீண்டும் இதுபோன்று நிலைமைகள் ஏற்படாமல் இருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுமாதிரியாக ஒரு பெண் மருத்துவர் அங்கே இருந்தார். அவர் பல முறை ஷார்ட் லீவில் போனார்கள், நீண்டகால லீவாக இல்லாமல், ஷார்ட் லீவ் என்ற அடிப்படையிலே அடிக்கடி போட்டார்கள். டாக்டர் மீண்டும் அங்கே போட வேண்டுமென்று ஏற்பாடு நடக்கிறபோது மீண்டும் அவர்கள் வந்து சேருவார்கள். இப்படி பல முறைகள் லீவில் சென்றதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. 7-7-1980 லிருந்து இன்னொரு பெண் மருத்துவர் அங்கே பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

[முற்பகல் 9.20]

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட மருத்துவமனைகளில் பொதுவாக, கிராமப் புறத்தில் அல்லது பிற்பட்ட பகுதிகளில் டாக்டர்கள் போவது மிகக் குறைவாக இருக்கிறது. காரணம், அவர்களுக்குக் குடியிருப்பு இல்லை யென்றும் அதோடு அவர்களுக்கு விசேஷ சலுகைகள் காண் பிக்கப்படவில்லை என்றும் டாக்டர்கள் கூறுவதனால், அவர் களுடைய குறைகளை அரசு அறியுமா? அவைகளைத் தீர்த்து கிராமப்புறங்களில் இருக்கும்படியான மருத்துவ மனைகளுக்கெல்லாம் டாக்டர்களை உடனடியாக அனுப்பி வைக்க அரசு கவனம் செலுத்துமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கிராமப்புறங் களில் உள்ள மருத்துவமனைகளில் டாக்டர்கள் இருக்க வேண்டுமென்ற கருத்திலேதான், அந்த அடிப்படையிலேதான், இவ்வளவு பெரிய, க்ரானிக்காக இருக்கக்கூடிய, 4-3-1979-லிருந்து பலமுறை லீவ் அப்ளிகேஷன் போட்டு விடுமுறையி லிருந்த டாக்டருடைய நிலைமையை ஆராய்ந்து, புதிதாக டாக்டரை நியமித்திருக்கிறோம். குறிப்பாக, இந்த இடப்பாடி யிலுள்ள முனிசிபல் மெட்டர்னிட்டி சென்டரில் அந்தப் பிரச்னை இல்லை. அவர்களுக்குக் குடியிருக்க அங்கே வீடில்லை என்பதற்காக அவர்கள் விடுப்பில் செல்லவில்லை ஏதோ சொந்தப் பிரச்னை காரணமாக அவர்கள் லீவு

போட்டிருக்கிறார்கள். ஆனால், பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், பெண் டாக்டர்களுக்காக பல குவார்ட்டர்ஸ் கட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு மிக விரைவில், பல்வேறு இடங்களில் அவற்றைக் கட்ட ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இப்படிப்பட்ட சில அரசு அலுவலர்கள், நேர் மாறான முறையில், அரசு மருத்துவர்களிடம் சான்றிதழ் பெற்று லீவ் போட்டு விடுகிறார்கள். அதனால், மக்களும் ஏமாந்து விடுகிறார்கள், அரசு என்ன நினைக்கிறதோ அந்தச் சேவையைச் செய்ய முடியவில்லை. ஆகவே, அப்படி லீவ் போட்டு விட்டால், அவருக்குப் பதிலாக வேறு அதிகாரியைப் போட்டு விட்டு அவரை வேறு இடத்திற்கு மாற்றி, பனிஷ்மென்ட் தரக் கூடிய முறையிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: திட்டமிட்டு, தொடர்ந்து, தவறான வகையிலே, இப்படி உடல்நலமில்லை என்கிற உண்மையற்ற காரணத்திற்காக இப்படி லீவ் போடு கிறவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: பேரவைத் தலைவர் அவர் களே, அந்த இடம், மகப்பேறு இல்லம். பெரும்பாலும் பிரசவத்திற்கு வரக்கூடிய தாய்மார்கள்தான் அங்கே வருவார் கள், இந்தமாதிரி இடங்களில் தாய்மார்களைக் கவனிப்பதற் கான மருத்துவர்கள் இல்லாமல் இருப்பது ரொம்பக் குறைபடக் கூடிய ஒன்று. ஆகவே, அம்மாதிரி மருத்துவமனைகளில் டாக்டர்கள் 10 நாள் அல்லது 1 மாதம் லீவ் போட்டுவிட்டால், வேறு டாக்டர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு ஆவன செய்யும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ் நாட்டிலே பல்வேறு மருத்துவ மனைகள், இடப்பாடி மருத்துவமனையைப்போல டாக்டர்கள இல்லாமல் இருக்கின் றன. படித்து பட்டம் பெற்றவர்களை, சர்வீஸ் கமிஷன் தேர் விலே உடனடியாகத் தேர்வு செய்து வடுகிறார்கள். பிறகு, நிய மனம் செய்யும்போது, இடப்பாடிக்குப் போக மாட்டார்கள். அது மாதிரியுள்ள மற்ற இடங்களுக்குப் போக மாட்டார்கள். ஆகவே படித்து பட்டம் பெற்றவர்களை, உடனடியாக இம்மாதிரி இடங் களுக்கு நியமனம் செய்துவிட்டு, பிறகு அவர்களுடைய சர் வீஸைக் கணக்கெடுத்து, சர்வீஸ் கமிஷனில் செலக்ஷன் செய்து

1980 ஜூலை 28]

தேர்ந்தெடுப்பார்களானால், டாக்டர்கள் எல்லாம் போட்ட உடனே பயந்து கொண்டு மருத்துவ மனைகளிலே போய்ச் சேருவார்கள். அப்படிப்பட்ட முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவரவர்களே, குறிப்பாக இந்த இடப்பாடி மருத்துவமனையில் எழுந்த பிரச்னை வேறு பிரச்னை. அங்கே ஒரு டாக்டர் திட்டமிட்டே 15 நாட்கள் லீவ் போடுவார்கள், பிறகு வந்து சேர்ந்து விடுவார்கள், பிறகு மீண்டும் லீவ் போடுவார்கள். ஆக, இந்தத் தனிப்பட்ட கேஸ் பொறுத்தவரையிலே வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்கமுடியுமா என்று கூட நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன உணர்வினுடைய அடிப்படையிலே, இப்படி தொடர்ந்து திட்டமிட்டு, தமக்கு விருப்பமில்லாத இடத்திற்குப் போக வேண்டாமென்பதற்காக அப்படி செய்து கொண்டிருக்கிற டாக்டர்கள் யாராவது இருப்பார்களானால், அந்த டாக்டர்கள்மீது வேறு என்ன செய்ய முடியுமோ நமக்கிருக்கிற அதிகாரத்தின் வரம்பிற்குட்பட்டு, அந்த நடவடிக்கை எடுத்து, அந்தக் காலி இடங்களை நிரப்ப உடனடி ஏற்பாடு செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜய ரகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கிராமங்களுக்குப் போடக் கூடிய டாக்டர்கள் மருத்துவமனைக்குப் போக மறுக்கிறார்கள்; அதற்காக லீவ் போடுகின்றார்கள் என்று இப்பொழுது சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு இன்சென்டிவ் கொடுக்கக்கூடிய வகையிலே, அதிக சம்பளமோ அல்லது ஃபெசிலிட்டீஸோ அரசாங்கம் கொடுத்தால் அவர்கள் போவதற்கு வசதியாக இருக்கும். அதை அரசாங்கம் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே பணியாற்றக் கூடிய டாக்டர்களுக்கு இன்சன்டீவாக பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே இருப்பவர்களுக்கு சில யோசனைகளைச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். குறிப்பாக பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே—நம்மிடத்தில் 383 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன—கிட்டத்தட்ட 500-க்கும் மேல் காலி இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன எனக்கே கூட அதிர்ச்சியாக இருந்தது. முன்பு 400 இடங்கள் காலியாக இருந்தன. பின்னர் போஸ்ட் கிராஜ்வேட் செலக்ஷனுக்குப் பின்னால் 100 இடங்கள் காலியாகிவிட்டன. இப்போது 500 இடங்கள் காலியாக உள்ளன. இதைப் போக்குவதற்காக இப்படிப் பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு அடுத்து போஸ்ட் கிராஜுவேட் செலக்ஷன் வரும்பே

அதில் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கும்போது ஜாஸ்தியான சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்க, கன்செஷன் கொடுக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பது ஒன்று.

இன்னொன்று, பிரைமரி ஹெல்த் சென்டர்கள் டாக்டர்களுக்கு வீடு கட்டும் திட்டம். அதற்காக பலமுறை பணம் ஒதுக்கப்பட்டு அது சரியான முறையில் நடைபெறவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இப்போது அதை ஒரு கிராஷ் புரோகிராம் என்ற முறையில் எடுத்து, பணம் ஒதுக்கப்பட்டு நல்ல முறையிலே உடனடியாக, சுறுசுறுப்பாக அந்த கிராமப் பகுதிகளிலே, குறிப்பாக பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே இருக்கக்கூடிய மருத்துவர்களுக்கு வசதியான வீடுகளைக்கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்வதற்கான திட்டம் இருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் என்னை சேலம் மு. ஆறுமுகம் என்றே அழைக்க வேண்டுகிறேன். ஏனென்றால் இங்கே இன்னொரு ஆறுமுகம் இருப்பதால் என்னுடைய கேள்வி அவருடைய பெயரிலே பதிந்து விடும்.

தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது கிராமங்களில் போடப்படுகிற டாக்டர்கள் அடிக்கடி விடுப்பில் போவதாகக் கூறினார்கள். ஆனால் இடைப்பாடியைப்பொறுத்தவரையில் அது ஒரு நகராட்சி. அப்படி நகராட்சிப் பகுதியிலே போடப்படுகின்ற மருத்துவர்கள் அடிக்கடி விடுப்பில் செல்வதால், தற்போது படித்துப் பட்டம்பெற்று வேலை இல்லாமல் இருக்கின்ற டாக்டர்களை—சீனியாரிட்டியைக்கூடப் பார்க்காமல் அவர்கள் எங்கே வேலை கொடுத்தாலும் போகத் தயாராக இருக்கிறார்கள் என்ற நிலையில்—அவர்களை இந்த மருத்துவமனைகளில் நியமிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஆறுமுகத்தின் உணர்வுகளோடு நானும் என்னுடைய உணர்வுகளை பகிர்ந்து கொள்கிறேன். Sentime ts—I also share. ஆனால் இப்போது நான் ஏற்கனவே சொன்னமாதிரி, ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். கிராமப் பகுதி மக்களுக்காக இன்னொரு திட்டத்தையும் போட்டிருக்கிறோம். அதாவது ஜுனியர் டாக்டர்கள் என்ற ஸ்கீம் போட்டிருக்கிறோம். சர்வீஸ் கமிஷன் மூலமாக டாக்டர்களைத் தேர்ந்தெடுப்பது ஒரு லாங் டெர்ம் பிராசஸ். ஆறு மாதத்திற்கும் மேல் ஆகும் அல்லது ஒரு ஆண்டு கூட ஆகும். அப்படி இல்லாமல் கிராமப் பகுதி மக்களுக்கு டாக்டர்களை உடனடியாக நியமிப்

1980 ஜூலை 28]

..தற்காக ஜூனியர் டாக்டர்களை நியமிக்க இருக்கிறோம். அது குறித்து சட்ட சபையிலே கூட அறிவித்து இருக்கிறோம். எனவே திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்ன மாதிரி மருத்துவ வசதியை ஏற்படுத்துவதற்கு அது பயன்படும் என்று கருதுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவர்களை நியமனம் செய்கின்றபோது, குறிப்பாக பெண் டாக்டர்களை நியமிக்கும்போது, அவர்கள் தங்கக்கூடிய ஊர் பக்கத்திலேயே நியமனம் செய்தால் நல்லதாக இருக்கும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சங்கரன்கோவிலுக்கு பக்கத்தில் கரிவலம்வந்தநல்லூர் என்ற கிராமத்திற்கு சென்னையில் இருந்து திருமணம் ஆகாத ஒரு பெண் டாக்டரை நியமனம் செய்திருக்கிறார்கள்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இடைப்பாடி மருத்துவமனையைப் பற்றிய கேள்வி. நீங்கள் சங்கரன் கோவில்வரை போய்விடாதீர்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : இது ஒரு முக்கியமான கேள்வி; தயவுசெய்து அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னுரங்கம் அவர்கள் என்ன இதற்கு சிபாரிசு?

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அதைப்போன்று சங்கரன்கோவில் டாக்டரை திருவண்ணாமலைக்கு போட்டிருக்கிறார்கள். ஆக இரண்டுபேரும் ஜாயின் பண்ணவில்லை. இரண்டு இடங்களும் காலியாக இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையை அரசு பரிசீலித்து அந்தந்தப் பகுதியிலே இருக்கிற டாக்டர்களை நியமனம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியிலே இருக்கிற டாக்டர்களை நியமிப்பதில் ஒரு சங்கடம் இருக்கின்றது. அவர்கள் அங்கேயே இருந்து கொண்டு பிரைவேட் பிராக்டிஸ் ஆரம்பித்துவிட்டு, அதற்குப்பிறகு மருத்துவமனைக்கு வரக்கூடிய சௌகரியம் வராமல் போய்விடும் நிலை ஏற்படும். அந்த வகையிலே இல்லாமல் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி—posting without tears என்ற நிலைமையில் வாய்ப்புகள் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்து, அதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, சுமார் 500 போஸ்ட்டுகள் வேகன்டாக இருப்பதாகச் சொன்னார்கள். சுமார் 4,500 டாக்டர்கள் வேலை அற்று இருப்பதாகத் தெரிகிறது. அதிலே தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு 4 சதவீதம்தான் பதவி கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 18 சதவீதம் ஒதுக்கீட்டை அரசாங்கம் கருணையோடு செய்து இருக்கிறபோது, அந்த அளவிற்கு அந்த மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதன்மூலம், விகிதாச்சாரத்தைக் குறைக்காமல் இருப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி கேட்காமல், பொதுப்பிரச்னையாக 18 சதவீதம் ஒதுக்கீடு குறித்து துணைக் கேள்விகள் போடுவது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு நல்ல செய்தி தருகிறேன். நான் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு தாழ்த்தப்பட்டவர்களுக்கு செய்து இருப்பது என்னவென்றால், குறிப்பாக சர்வீஸ் கமிஷன் மூலமாக வரவேண்டியவர்கள் எல்லாம் எங்கெங்கே முதலிடம் பெறவேண்டும் என்று நான் கருதினேனோ அந்த இடங்களில் எல்லாம் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த டாக்டர்கள் வரவேண்டும் என்று எண்ணி, அதை பர்ஸ்ட் பிரபரன்சு என்கிற அடிப்படையில் முதலிடம் அவர்களுக்குத் தரப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து அவர்களுக்கு முதலிடம் கொடுத்து வேலைவாய்ப்புகள் தரப்படும் என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் சேவை மிக அவசியமான சேவை என்பதும், அதுவும் உடனுக்குடன் செய்ய வேண்டிய சேவை என்பதும் எல்லோருக்கும் தெரியும். அதிலும் குறிப்பாக தமிழக மக்கள் தொகையில் பெண்ணினம் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களை கவனிக்கக்கூடிய பெண் மருத்துவர்கள் மிகவும் சொற்பமாக இருக்கிறார்கள். அவர்கள் முறையாக வேலை செய்து கொண்டு இருக்கிறபோது, திடீரென்று மாற்றம் ஏற்பட்டு விட்டால், அவர்களும் திடீரென்று மருத்துவ விடுப்பு எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். இப்படி எந்தவிதமான காரணமும் இல்லாமல் மருத்துவ விடுப்பு எடுத்துக்கொள்பவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அதுகுறித்து அரசாங்கம் பரிசீலிக்குமா?

1980 ஜூலை 28]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, கிராமப் பகுதிகளில் இருக்கும் மருத்துவ மனைகளில் 500 இடங்கள் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். அது மிகவும் ஆபத்தானது. அந்த கிராமப் புற பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் டாக்டர்கள் போடுகிறபோது படித்துவிட்டு வந்தவர்களை எந்த அடிப்படையில் அந்தக் காலியாக உள்ள இடங்களில் அமர்த்தப்போகிறீர்கள்? சர்வீஸ் கமிஷன் மூலமாக வரும் வரையில், அவர்கள் படித்துவிட்ட ஆண்டு சீனியாரிட்டிவைத்து 10(ஏ) (1) அடிப்படையில் நியமிக்கப் போகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி மகப்பேறு இல்லத்திற்கு டாக்டர்கள் நியமிப்பது குறித்து உள்ளது. அதை ஒட்டிய கேள்வியாக துணைக்கேள்வி போட வேண்டும். சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுப்பது என்கிற விவரம் எல்லாம் இந்த வினாவை ஒட்டி வராது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, காலியாக இருக்கும் அந்த 500 இடங்களையும் படித்துவிட்டு வந்தவர்களின் சீனியாரிட்டி அடிப்படையில் நியமனம் செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வியின் அடிப்படையில் தான், 15 நாட்களுக்கு முன்பாக தற்காலிகமாக (டெம்பரரியாக) நியமனம் செய்து இருக்கிறோம். சர்வீஸ் கமிஷன் நியமனம் வரும் வரையில் காத்து இருக்காமல், அந்த 500 பதவிகளையும் நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்று சொன்னாலும், காலியாக இடங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் பணி செய்யவில்லை என்று யாரும் எண்ணிடக்கூடாது. மூன்று டாக்டர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு டாக்டர்கள் இருந்து பணி செய்கிறார்கள். இருந்தாலும் இது வருந்தத்தக்க நிலைமைதான். மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டது போல், தற்காலிகமாக நேரடியாக அரசாங்கம் அந்த ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு டாக்டர் நியமிப்பதற்கு எல்லாவகையான திட்டங்களையும் போட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல்—வாசலூர்பட்டி மினி பஸ் போக்குவரத்து.

*வினா எண். 65—திரு. சீ. சிவப்பிரகாசம்: போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்-வாசலூர்பட்டி வரை விடப்பட்ட மினி ரூட் பஸ் இயங்காத நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) நாமக்கல்-வாசலூர்பட்டி என்ற தடத்தில் மினிபஸ் இதுவரை விடப்படவில்லை, விடுவதற்கான திட்டமும் ஏதும் இதுவரையில் இல்லை. ஆனால் நாமக்கல் வலப்பூர் கிராஸ் என்ற வழித்தடம் நாமக்கல்-வாசலூர்பட்டி என நீட்டித்துக் கொடுக்கப்பட்டு கால அட்டவணை நிர்ணயம் செய்யப்பட்டு, 19-7-1980 முதல் பேருந்து ஓடுவதற்கு வட்டாரப் போக்குவரத்து அதிகாரியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சேலம்-வாசலூர்பட்டிக்கு நாமக்கல் வழியாக ஒரு பேருந்து விடுவதற்காக திருவாளர்கள் அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரி செலுத்தி பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டவுடன் தற்காலிக அனுமதி (T.P.) வழங்கப்படும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிரதம நிலவள வங்கிகள் இணைப்பு.

*கு.கா.வி. எண் 46—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிரதம நிலவள வங்கிகளில் சில வற்றை இணைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதை நிறுத்தி வைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவரவர்களே, இப்படிப் பட்ட வங்கிகள் தவறான முறையில் ஆரம்பிக்கப்பட்டதால், ஆளுநர் ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட குறிப்பு அறிவிக்கப் பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, தனித்து இயங்கும் தன்மை குறைந்த வங்கிகளை ஆரம்பித்த காரணம் என்ன என்பதற்கு என்னிடம் குறிப்பு இல்லை. ஆனால் ஆதார நிலவள வங்கிகளைப் பொறுத்தமட்டில் தனித்து இயங் கும் தன்மை உள்ளவைகளாக இருக்க வேண்டுமென்ற அடிப் படையில் அதை ஆய்வு செய்ய இந்திய ரிசர்வ் வங்கி திரு. மாதவ தாஸ் என்ற ஒரு அதிகாரியின் தலைமையில் ஆய்வுக்குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த நிலவள வங்கிகளுக்கு ஸ்பெஷல் ஆபீசர் என்றும், வேகமாக வசூல் செய்யக்கூடிய அதிகாரி என்றும் நியமிக்கப்பட்டிருப்பது அரசுக் குத் தெரியுமா? அவர்கள் 100 ரூபாய் வசூல் செய்ய 300 ரூபாய் செலவழிக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இந்த முறையை மாற்றி, ஒரு போர்டு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, நிலவள வங்கிகள் மூலமாக வாங்கிய கடன்களை, குறிப்பாக பெரும் விவசாயிகளும் அவர்களை ஒட்டி மற்றவர்களும் கட் டாமல் இருக்கிற காரணத்தால் அந்தக் கடன்களை வசூல் செய் கிற பணி தொடர்ந்து இருந்தாலும் இது செலவினமாகக் கருதப் படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு கூட்டுறவுத் துறையில் வரும்போது கண்டிப்பாக இந்தக் குறைபாட்டை களைய முடியும் என்று அரசு கருதுகிறது. புதிய கூட்டுறவுச் சட்டம் இயற்றிய பிறகு தேர்தல் விரைவில் நடத்தப்பட அரசு தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, கூட்டுறவு நிலவள வங்கிகள் சிலவற்றை இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எந்தளந்த நிலவள வங்கிகளை இணைக்கும் செயற்குறிப்பு இருக் கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மொத்தம் உள்ள 223 வங்கிகளில் 51வங்கிகளைஅப்படி இணைக்க வேண்டுமென்று ரிசர்வ் வங்கியின் ஆய்வுக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பெயர்களை எல்லாம் படிப்பது என்றால் அதிகமாக நேரம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேண்டுமானால், தனியாகத் தருகிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, இந்த நிலவள வங்கிகளில் வசூலாகாமல் இருக்கிற கடன்களை வசூல் செய்ய அங்குள்ள தனி அதிகாரிகள் நிரந்தரமாக டாக்சிகளையும், ஜீப்களையும் அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நாள் ஒன்றுக்கு 200 ரூபாய்க்குமேல் வாடகை கொடுக்கிறார்கள். இந்த முறையில் வசூல் செய்வதால் அரசுக்கு மிகவும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தேர்தல் வரும் வரையில் நிலவள வங்கி கடனை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க அரசு அறிவுரை வழங்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, எந்த ஆதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் இதைக் கூறுகிறார் என்று தெரியவில்லை. கடனை வசூல் செய்ய செல்வதற்கு வாகன வசதி இல்லை என்றால் வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்வது வழக்கம். கடனை வசூல் செய்ய வேண்டியிருப்பதால் வாடகை வாகனங்களை பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, சில நிலவள வங்கிகளை இணைப்பதற்கான செயற் குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு இணைப்பதன் மூலம் என்ன நன்மை; இணைக்காமல் இருப்பதால் என்ன தீமை என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, ரிசர்வ் வங்கியால் அமைக்கப்பட்ட அந்தக் குழு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சில வங்கிகள் இணைக்கப்பட இருக்கின்றன. அவர்கள் தெரிவித்திருப்பது, தனித்து இயங்கக்கூடிய ஒரு ஆதார நிலவள வங்கிக்கு 35 இலட்சம் ரூபாய் நிலுவை இருக்கவேண்டும். 35 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக நிலுவை இருந்தால் தனித்து இயங்கும் தன்மை இல்லை என்று கருதப்படுகிறது. 35 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக நிலுவை இருக்கும் அத்தகைய வங்கிகள் அடுத்து தொடர்ந்து வருகின்ற 3 ஆண்டு காலத்தில் தனித்து இயங்கும் தன்மையைப் பெறாவிட்டால், இத்தகைய இணைப்புக்கு உட்படுத்த வேண்டுமென்று ரிசர்வ் வங்கி கூறியிருக்கிறது.

[முற்பகல் 9-40]

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலவள வங்கிகள் மூலமாக பல மோசடிகள் பினாமிகள் பெயரில் நடந்திருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? ஆகவே, அந்த வங்கிகளைக் கலைத்துவிடுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருப்பது போல் சில வங்கிகளில் சில தவறுகள் நடந்திருப்பது பற்றி பாரதி கமிஷன் சுட்டிக்காட்டி இருக்கின்றது. ஆகவே, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கையே ஒழிய தவறு செய்யப்பட்டதால் அந்த வங்கிகளையே கலைத்து விடவேண்டும் என்பது கொள்கை அல்ல.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நிலவள வங்கிகளின் மூலமாக கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுக்கப்பட்டு பிறகு அவ்வாறு கொடுக்கப்பட்ட கடன் மூலம் மேற்கொள்ளப்பட்ட கிணற்றுப்பணி பலன் அளிக்கவில்லை என்றால் அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டு அது இலட்சக்கணக்கான ரூபாய் சேர்ந்திருக்கின்றதே. அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணம் பலனளிக்காத கிணறுகளுக்காக ஈடு செய்யப்படாமல் இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? ஆகவே, பலனளிக்காத கிணறுகளுக்கு இந்தத் தொகையை ஈடுகட்டி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் பலனளிக்காத கிணறுகளுக்கு அந்தத் தொகையை ஈடு செய்யக்கூடிய நிலைமையில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் உதவியைச் செய்யமுடியும். விரைவாக அதுபற்றி நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய உத்தரவிட்டிருக்கிறோம்.

தூய இருதய தொழுநோய் கட்டுப்பாடு நிலையம், கும்பகோணம்.

*கு. கா. வி. எண். 47—

திரு. ரா. உமாநாத்:

திரு. செ. இராமலிங்கம்:

திரு. எஸ். இராசாராமன்:

திரு. எல். இளையபெருமாள்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-ம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அன்றைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கும்பகோணத்திலுள்ள தூய இருதய தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்தை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று உறுதியளித்துள்ளது உண்மையா?

(ஆ) இது நிறைவேற்றப்பெறாததாலும், தொடர்ந்து ஏற்பட்ட இன்னல்களாலும் அங்கு பணியாற்றுபவர்கள் 20-7-1980 ஆம் நாள் முதல் காலவரையற்ற உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவிப்பு கொடுத்திருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) முன்னாள் சுகாதார அமைச்சர் அவர்கள் எவ்விதமான உறுதி மொழியையும் சட்டமன்றத்தில் அளிக்கவில்லை.

(ஆ) கும்பகோணம் தூய இருதய தொழுநோய்க்கட்டுப்பாடு நிலையத்தின் பணியாளர்கள் சங்கத்தின் தலைவரிடம் இருந்து 18–7–1980 அன்று தகவல் வந்தது.

(இ) இதுபற்றி மாவட்ட அதிகாரிகளின் தகுந்த நடவடிக்கைக்கு என அனுப்பப்பட்டுள்ளது.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவரவர்களே, 18–7–1980 அன்று தகவல் வந்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்றாலும் அந்த மருத்துவமனையில் வேலை செய்து வேலை இழந்த ஒருவர் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது குறித்து அரசுக்கு அதிகாரிகளின் மூலம் தகவல் ஏதும் கிடைத்ததா? மேலும் வேலையற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன். அரசு அவர்களுக்கு உதவி செய்ததா இல்லையா என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

1980 ஜூலை 28]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவரவர்களே,

The Sacred Heart Leprosy Centre is functioning with 800 beds, and the centre is not getting any grant from the Government of Tamil Nadu. Some of the staff members working in the Control Unit are ex-leprosy patients and they are not qualified. The management of the centre initiated disciplinary action against some of the staff working in the Centre since their field work was found to be defective and not up to the mark.

என்ற ஒரு தகவல் வந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் அதற்கடுத்தபடியாக Mr. Rosen Field, Secretary, Suiss Fmmur. என்று ஒரு செயலாளர் இருக்கிறார்கள். நமது முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அவர்களைக் கூப்பிட்டு 1979-ம்ஆண்டு சந்தித்துப்பேசினார்கள். இதுகுறித்து முன்னாள் அமைச்சரவர்கள் எவ்வளவோ பாடுபட்டார்கள். அதன்படி நல்ல வகையில் ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்று யோசனைகளைச் சொன்னார்கள். அவ்வாறு யோசனைகள் சொல்லப்பட்டு ஒத்துக்கொண்ட நிலைமை ஏற்பட்டு பிறகு அதை நிராகரிக்கிறார்கள். நம்மால் அதற்குமேல் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கின்றது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, வருங்காலத்தில் தொழுநோய் உள்ளவர்களை கருணையோடு கவனித்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதால் அந்த மருத்துவமனையை நாம் எடுத்துக்கொள்வதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு தனியார் மருத்துவ மனையை அதிலும் குறிப்பாக சில ஆர்கனைசேஷன் நடத்துகின்ற மருத்துவ மனையை நாம் எடுத்தோமேயானால் அதனுடைய விளைவுகளை நாம் எண்ணிப்பார்த்தாக வேண்டும்.

If we encourage such things, the other voluntary organisations doing the same work will get the same idea.

மற்ற மருத்துவமனைகளிலே பணியாற்றக்கூடியவர்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு எண்ணம் வரும். இப்படி ஒவ்வொரு மருத்துவ மனையையும் அரசாங்கத்தோடு இணைத்துக்கொள்வது என்ற எண்ணம் வந்தால் மிகப் பயங்கரமான விளைவுகள் ஏற்படும். பல்வேறிடங்களிலே இப்படிப்பட்ட மருத்துவமனைகள் இருக்கின்றன. ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் ஆகும். ஒரு இடத்தை எடுத்தால் அதன்பின் அப்படியே 10, 15 இடங்களில் உள்ள மருத்துவமனைகளையும் எடுக்க வேண்டி வரும். அப்போது நம்முடைய நிதி முழுவதையுமே இதற்குத்தான் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மேலும்

நல்ல இயக்கமாக வளர்ந்துகொண்டிருக்கக்கூடிய பெரிய ஸ்தாபனங்கள் அப்படியே கிராக் அடையக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அந்தத் திட்டம் அரசாங்கத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய் என்பது மிகப் பயங்கரமான ஒரு நோய்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஒன்றும் அவ்வளவு பயங்கரமான நோய் அல்ல. நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தொத்துநோய் என்று வைத்துக் கொள்ளலாம். அந்தத் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான மிகப்பெரிய பொறுப்பு அரசாங்கத்தினுடைய பொறுப்பாக ஆகிறது. ஆகவே, அரசாங்கம் அந்த நிறுவனத்தை எடுத்துக் கொண்டால், மற்ற இடங்களிலெல்லாம் இருக்கிறவர்கள் போராட்டம் நடத்தி அந்த நிறுவனங்களையும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவார்கள் என்று சொல்கிற அமைச்சர் அவர்களுடைய வாதம், கருத்து சரியானது அல்ல. ஆகவே, தமிழகத்திலுள்ள அனைத்து தொழுநோய் மருத்துவமனைகளையும் அரசு எடுத்துக்கொண்டு, தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்கள் அனைவருக்கும் துரித நிவாரணம் கிடைப்பதற்கான துரித நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொள்ளுமா? என்று மிகுந்த விருப்பத்துடன் வேண்டி வினவுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன முதல் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தொழுநோய் ஒரு தொத்து நோய்தான். ஆனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் அது பயங்கரமான நோய் என்று சொல்கிற வாதத்தை அறவே ஏற்றுக்கொள்வதற்கில்லை. அது இப்போது மிகமிக எளிதாக நிவாரணம் அடைய சிகிச்சை செய்து, முழுமையாக நிவாரணம் பெற்று சமூகத்தில் அவர்கள் எல்லாவிதப் பணிகளையும் செய்கிற அளவுக்கு நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆகவே இதை பயங்கரமான வியாதி என்று மக்களை மிரட்டுவது, விளைவுகளை சாதகமாக ஏற்படுத்தாது.

அடுத்து இன்னொரு கருத்தை கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தனியார் தொழுநோய் மருத்துவமனைகள் எல்லாவற்றையும் ஏன் அரசு ஏற்று நடத்தக் கூடாது என்று கேட்டிருக்கிறார். இப்படி தனியார்கள் நடத்தும் நிறுவனங்கள் எல்லாம் வாலண்டரி சர்வீஸ் ஆர்கனைசேஷன் என்று சொல்லப்படுகிற, சேவை மனப்பான்மை கொண்டு

வெளிநாட்டிலிருந்து வந்து, எந்தவிதமான பலனையும் எதிர் பார்க்காமல், சேவை மனப்பான்மையோடு செய்கிற நிறுவனங்கள் இப்படிப்பட்ட அமைப்புகள் மிக நல்ல அமைப்புகள். இவைகளை உற்சாகப்படுத்த வேண்டுமே தவிர, அவைகளை அரசு எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இதனால் வீணான பணச் செலவும் ஏற்படும்; சேவை மனப்பான்மையை ஊக்குவிப்பதாகாது. ஆகையினால் இத்தகைய அமைப்புக்களை ஊக்குவிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடமை, மக்களின் கடமையும் ஆகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, போன சட்டமன்றக் கூட்டத்தில் அதாவது, இந்தச் சட்டமன்றம் வருவதற்கு முன்பிருந்த சட்டமன்றக் கூட்டத்தில் இதே தொழுநோய் மருத்துவமனையைப் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. எனக்கு அது நினைவில் இருக்கிறது. அந்த மருத்துவமனையில் இருக்கக் கூடிய ஊழியர்கள், தங்களுடைய பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று உண்ணாவிரதம் இருக்கக்கூடிய ஊழியர்களின் பிரச்னை என்னவென்று அரசு கேட்டறியலாம். மருத்துவமனையை அரசு ஏற்று நடத்தாவிட்டாலும் கூட அங்கே இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு பிரச்னை வந்தால் அதில் தலையிடுவதற்கு அரசுக்கு பொறுப்பு இருக்கிறது. ஏதோ முன்பு சமரசம் பேசப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சமரசப்பேச்சுக்களின் முடிவு என்னவாயிற்று? அவர்கள் கோரிக்கைகள் என்னவென்று கேட்டு அதை நிறைவேற்ற நம்முடைய அமைச்சர் அவர்கள் இதில் நேரடியாகத் தலையிட்டு சுமுகமான முடிவுக்கு கொண்டு வர முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: என்னைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், இதில் அவர்களுடைய ஒத்துழைப்பு எனக்குத் தேவையாக இருக்கிறது. இதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் எனக்குத் தேவை, உதவியும் தேவை. என்னால் இயன்றளவிற்கு அந்த மானேஜ்மென்டை மீண்டும் அணுகி சுமுகமாக ஒரு சமரசம் ஏற்படுத்த, அந்த நல்ல அமைப்பை மீண்டும் நல்ல முறையில் இயங்கச் செய்யப் பாடுபடுவேன்.

'In fact an understanding was reached between both sides and the management went to the extent of getting the clearance from the funding agency for resuming normal functioning of the anstitutions But the labour which heeded to his advice suddenly decided to abstain from attending conciliation meeting. Out of 48 labourers majority of them are agreeable for an amicable settlement except 2 or 3 persons..

என்றிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லவில்லை. இந்த விஷயங்களை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இரண்டு பக்கங்களிலிருந்தும் விட்டுக்கொடுத்து நல்லமுறையில ஒரு சமரசம் ஏற்படுத்த முயற்சிப்போம். அதன்காரணமாக 800 பேர்களுக்கு நன்மை கிடைக்கும். ஆகவே எல்லா உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் எனக்குத்தேவை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: கும்பகோணம் தூய இருதய தொழுநோய் கட்டுபபாடு நிலையத்தில் கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக வேலைநிறுத்தம் காரணமாக அந்த மருத்துவமனை சரியாக இயங்காமல் அங்கே பணியாற்றக்கூடியவர்கள் உண்ணா விரதம் இருப்பது போன்றவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த மன்றத்தில் கூட அது சம்பந்தமாகக கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆக, நீண்ட நாட்களாகவே இப்படிப் பட்டதொரு நிலை இருந்துவருகிறது. இதை சுமுகமான முறையில் தீர்த்து வைக்க அரசு ஏன் முயற்சிக்கவில்லை? ஆகவே, உடனடியாக முயற்சித்து இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமலிருக்கவும், அந்த மருத்துவமனை தொடர்ந்து நடைபெறவும் வழி வகை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அரசாங்கம் முழுமையாக முயற்சித்துக்கொண்டுதானிருக்கிறது. அந்த முயற்சிக்கும் அப்பாற்பட்டு சில வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. நமது முயற்சியில் எந்தவிதமான குறைவும் இல்லை. முழுமையான அளவில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட, ஒரு சமரசம் ஏற்பட அரசு முயற்சிக்கும் என்பதை நான் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

திரு. கி. சட்டநாத கரையாளர்: இந்தத் தொழுநோய் மருத்துவமனை போன்று பல மருத்துவமனைகள் உள்ளன. நம் தமிழ் நாட்டில். அவைகளுக்கு நாம் கிராண்ட் வழங்குவதில்லை என்று கூறினார்கள். அவை சிறந்த சேவை புரிகின்றன என்றும் கூறினார்கள். அந்த மருத்துவமனைகளுக்கு நாம் கிராண்ட் வழங்குவதின்மூலம் அவர்கள் நிர்வாகத்தில் நாமும் ஒரு பங்கேற்றுக் கொள்ளும் முறையில் அவைகளுக்கு கிராண்ட் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இது ஒரு நல்ல யோசனை. நான் சொன்னது சரியாகப் புரியவில்லை என்று நினைக்கிறேன். சொல்வதில் கோளாறு என்னிடம் இருந்திருக்கலாம். இந்த மருத்துவமனைக்கு நாம் கிராண்ட் கொடுக்கவில்லை என்று சொன்னேன். பல மருத்துவமனைகளுக்கு நாம் கிராண்ட் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். கிராண்ட் கொடுப்பதன்மூலம் ஒரு வகையில் நல்ல இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு— சமரசம் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறோம். ஆனால் அந்த

மானேஜ்மென்ட் 'பாயின்ட் ஆப் நோ ரிட்டேர்ன்'என்ற வகையில் இருக்கிறார்கள். மீண்டும் அழைத்து சுமுகமாக முடிக்கலாமா என்று பார்க்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் இந்த மருத்துவமனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை உருவாகுமானால் அனைத்துப் பகுதிகளிலும் இத்தகைய ஒரு நிலை வரும் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அரசாங்கத்தின் பொதுத்துறை கொள்கையை அமைச்சர் அவர்கள் எதிர்க்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கொள்கையில் கொஞ்சம் கூடமந்தம் இல்லை. படிப்படியாக செய்துகொண்டு வருகிறோம். மிக்ஸட் எக்கானமி ஆல் இந்தியா பாட்டேர்ன். தனியார் துறையில் பலயிடங்களிலிருக்கின்றன. இன்னும் ஏதாவது கிரான்ட் கொடுத்து நமக்கு பிடிப்பு ஏற்படுத்தும் நிலைமைகளை உருவாக்கலாமா என்பதைப் பற்றி அரசாங்கம் ஆராயும்.

திரு. ரா. கிருஷ்ணன்: வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய வாலண்டரி ஆர்கனைசேஷன்களை ஊக்குவிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். உண்மைதான். ஆனால் இந்த தொழுநோய் பிடித்தவர்களை, பார்க்க அருவருக்கத்தக்க நிலையில் இருப்பவர்களை இவர்கள் பராமரிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நாம் கவனிக்கவேண்டியது அவசியம்.

They are not qualified.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: ஆக, பல ஆண்டு காலமாக பணியிலே இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட பிரச்சினை வருகிறது. வேலைக்கு அவர்கள் அன்-குவாலிபைட் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே அரசாங்கத்தின் மூலம் அவர்களுக்கு டிரெயினிங் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இருந்தாலும் கூட, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே பல ஆண்டுகளாக பணியாற்றுகிறவர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அன்-குவாலிபைட் என்று சொன்னால், அதைக் காரணமாகச் சொல்லவில்லை. இருக்கின்ற நிலைமையை நான் விளக்கினேன். வேலையை ரெகுலேட் செய்வதிலே சங்கடம் இருக்கிறது. யார் பணம் கொடுக்கிறார்களோ, அவர்கள் ஒரு டார்கெட் வைக்கிறார்கள். இவ்வளவு தூரத்திற்கு இதை வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 100 நோயாளிகள் என்று சொன்னால், இவ்வளவுக்கு வெற்றிகரமாக செய்ய

வேண்டும் என்று டார்கெட் வைக்கிறார்கள். அப்படி டார்கெட் வைக்கப்பட்டு, அது எட்டவில்லை என்று சொன்னால், இன்னும் கொஞ்சம் குவாலிடி ஆப் டிரீட்மெண்ட் அதாவது வைத்திய முறைகளை கொஞ்சம் நல்ல முறையிலே செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். இப்படி கொஞ்சம் கடுமையாக வலியுறுத்தப்படும்போது, அந்த டார்கெட்டை அடைய கொஞ்சம் விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. அதனுடைய விளைவுகள் தான் இங்கே பேசப்பட்டது. ஏற்கனவே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் ஜாஸ்தி செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதுதான் இங்கே இருக்கக்கூடிய நிலைமை. டார்கெட் இல்லாவிட்டால் அங்கே பணம் வராது. இது மிக மிக அவசியம்.

சென்னை நகரில் பல்லவன் பேருந்துகளில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்தல்.

*கு.கா.வி. எண் 48—திரு. மி. வின்சென்ட், திரு. என். பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர் பல்லவன் பேருந்துகளில் 1980-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து ஜூன் 30-ம் தேதி முடிய டிக்கெட் இல்லாமல் பயணம் செய்தவர்கள் எவ்வளவு பேர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்?

(ஆ) அதன் மூலம் அரசுக்கு கிடைத்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) 13,312 நபர்கள்.

(ஆ) ரூ. 36,629.16

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்களில் கூட்டம் அதிகமாக இருக்கின்ற நேரத்தில், பயணிகள் சிலர் டிக்கெட் வாங்குவதற்குச் சிரமப்படுகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு, அதிகமான பஸ்கள் விடப்படுமா? அதைப் போல், டிக்கெட்டுகள் சரிவரக் கொடுப்பதற்கு 2 கண்டக்டர்கள் போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது நாடறிந்த விஷயம். பஸ்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்படும் என்று இதற்கு முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது; அதைப் போல் இரண்டு நடத்துனர்கள் நியமிப்பது பற்றியும் இதற்கு முன்பு அறிவித்திருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, 'கியூ' சிஸ்டத்தை ஏற்படுத்தி, பயணிகள் பஸ்களிலே ஏறுவதற்கு முன்பு டிக்கெட்டுகள் கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு இந்த முறை இருந்திருக்கிறது. இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. இரண்டு நடத்துனர்களைப் போடும்போது, இப்படிப்பட்ட முறை தேவையில்லை என்று கருதிக் கொண்டிருக்கிறோம். தேவை என்றால், நிச்சயமாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 மாத காலத்திலே எவ்வளவு பேர்கள் என்றுதான் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 6 மாதத்தில் 13,000 க்கு மேற்பட்டவர்கள் திருட்டுத்தனமாக பிரயாணம் செய்கிறார்கள் என்று சொன்னால், ஒரு வருடத்தில் எவ்வளவு பேர்கள் வருவார்கள் என்பதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, இதற்குக் காரணம் கண்டக்டர்கள் பற்றாக்குறைதான். எனவே, ஒவ்வொரு வண்டிக்கும் கண்டிப்பாக 2 கண்டக்டர்களைப் போட வேண்டும். உத்தேசித்திருப்பதாக என்று சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உத்தரவு போடாதீர்கள்; கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல்: ஆகவே, அதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்குமா என்று அறிய விரும்புகிறன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உத்தேசித்திருப்பதாக என்று சொன்னால், அதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் என்ற அடிப்படையிலேதான் சொல்லியிருக்கிறேன். இதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட வாய்ப்பில்லை. லாபம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நஷ்டமில்லை, லாபம் என்று சொல்கிறார்கள். அப்படி சொன்னால், இந்த நிலைமையிலே எப்படி லாபம் வரும் என்று

சொல்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து இந்த இரண்டு கண்டக்டர்கள் போடுவதை, உடனடியாக நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அங்கே நடத்துனர்கள் போடுவதன் மூலம் அரசுக்கு லாபம் வரும் என்று சொன்னேன்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே போக்குவரத்து மானியத்திலே அன்றுகூட நான் கூறியிருக்கிறேன். பஸ்களில் பயணம் செய்பவர்கள், பிரயாணிகள் கவனக்குறைவினாலே டிக்கெட்டுகள் வாங்காமல் இருந்தாலோ அல்லது அவர்கள் டிக்கெட் எடுக்காத காரணத்தாலோ கண்டக்டர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, 2 வருஷம் 3 வருஷம் ஆகின்ற நிலைமை இருக்கிறது. அதை, 6 மாத காலத்திற்குள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டு, அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தக்கூடிய திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினா-விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நடத்துனர்களைப் பொறுத்தவரை வேண்டுமென்றே அந்தத் தவறுகள் செய்பவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கவனக் குறைவு என்று சொல்லுவது கூட தவறுதான். அரசாங்கத்தின் வருமானத்தை உத்தேசித்து அவர்கள் கவனக்குறைவாக இருக்கக் கூடாது என்பது அரசின் நோக்கம். கூட்டத்தில் முடியாத நிலையில் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகிற காரணத்தால் இரண்டு நடத்துனர்களைப் போட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: சென்னையிலுள்ள போக்குவரத்துக் கழகத்தில் டிக்கட் எடுக்காமல் பொது மக்களும் தவறு செய்வது கிடையாது, நடத்துனர்களும் தவறு செய்வது கிடையாது. டிக்கட் எடுக்காமல் பிக்பாக்கட்காரர்கள் பயணம் செய்கிறார்கள். கண்டக்டர் போய் டிக்கட் கேட்டால் கண்டக்டரை மிரட்டி அடித்து விடுகிறார்கள். பிளேடினால் 'கீசி' விடுகிறார்கள். அதைத் தடுக்க ஒவ்வொரு பஸ்ஸுக்கும் காவல் துறையிலிருந்து பாதுகாப்பு கொடுத்து அப்படிப்பட்டவர்களைப் பிடித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்லுவது ஓரளவு உண்மைதான். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படுகிறது. இரண்டு நடத்துனர்கள் போடப்படுகிற நேரத்தில் இந்தச் சிரமம் கொஞ்சம் குறையும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, அண்மையில் பாரிசில் ஆந்திரா ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் ஏறியிருந்த பாசஞ்சர்ஸ் அவ்வளவு பேர்களிடமும் டிக்கட் பணம் என்று சொல்லி மொத்தம் இரண்டாயிரம் ரூபாயை வசூலித்துக் கொண்டு இறங்கிப் போய் விட்டார்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. போக்குவரத்துத் துறை அமைச்சர் இதற்குப் பதில் சொல்ல முடியாது.

திரு. மு. அம்பிகாபதி: பாரிஸ் பகுதியில் இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் டிக்கட் எடுக்காமல் போகிறார்கள் என்று சொல்ல முடியாது. கண்டக்டர் தப்பு பண்ணுகிறார் என்றும் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. கே. சுப்பிரயம் கேட்டது நியாயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இப்படிப் பட்ட பஞ்சாயத்து தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி: இதை மனதில் கொண்டு கண்டக்டர்கள் மீது பரிவுணர்ச்சியோடு நடவடிக்கை எடுக்கப்படுமா? இது போன்ற தவறுகள் ஏற்படுமானால் 'ஆக்ஷன்' கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அவர் ஆரம்பத்தில் எனக்குச் சம்பந்தம் இல்லாத கருத்தினைச் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும். கடைசியாகக் கேட்டதற்கு திட்டவட்டமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். கவனக்குறைவு காரணமாக தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படத்தான் வேண்டும். கூட்டம் அதிகமாக இருக்கும் நேரத்தில் முடியாமல் டிக்கட் கொடுக்காமல் விடப்படுகிற சூழ்நிலைகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் இன்னொரு நடத்துனரைப் போட திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. கோவைத்தம்பி: தமிழகம் முழுவதும் போவதற்கு சட்ட மனற உறுப்பினர்களுக்கு இலவச பாஸ் வழங்கப்பட்டிருக் கிறது. டிக்கட் இல்லாமல் போகிறவர்களைப் பரிசோதனை செய்ய எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இலவசமாக, சம் பளம் இல்லாமல் செக்கிங் இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்ற அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இங்கேயே இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. சட்டமன்ற உறுப் பினர்கள் என்றால் பொதுமக்களுக்கு இருக்கின்ற குறைகளை அறிந்து அரசாங்க அதிகாரிகளிடமும், அரசாங்கத்திடமும் எடுத்துச் சொல்ல வேண்டும். ஆகவே, புதிதாக அப்படிப்பட்ட சட்டம் போட்டு உரிமை வழங்க வேண்டிய அவசியமில்லை யென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: பேரவை நாயகர் அவர்களே, டிக்கட் எடுத்தவர்கள், எடுக்காதவர்கள் என்றபேதம் இல்லாமல் சமதர்ம நோக்கோடு விண்ணுலகப் பிரயாணம் செய்வதற்கு அல்லது இயற்கை எய்தும் வகையில் பயணம் செய்வதற்கு கடந்த ஆறு மாத காலத்தில் பல்லவன் எத்தனை பேருக்கு உதவி செய்திருக்கிறான்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி டிக்கட் இல்லாமல் பயணம் செய்பவர்களைப் பற்றியது. விண்ணுலகத்திற்குப் போகிறவர்களுக்கு டிக்கட் கிடையாது. ஆகவே, பிரச்சினை இல்லை.

வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது செய்யப்பெற்ற செய்தி.

திரு. ப. பொன்னுரங்கம்: பாயிண்ட் ஆப் ஆர்டர். பேர வைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமையன்று சட்ட மன்ற உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஏதோ சர்ச்சையினால் கைது செய்யப்பட்டு இதுவரை எங்கே இருக்கிறார் என்று தெரிய வில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1980 சூலை 28]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அவர் கைதாகி விடுதலையாகிவிட்டதாக பத்திரிகையிலே செய்தி வந்துவிட்டது. அவர் ராதாகிருஷ்ணன் நகரில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். அது முடிந்து இரண்டு நாட்களாகி விட்டன. அதிலே பிரச்சினையில்லை.

<u>திரு. ப. பொன்னுரங்கம்:</u> சபைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த தகவல் அவர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை; எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை என்பதாகும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> விடுதலையாகி விட்டார் என்பதாக எனக்குக் கிடைத்த தகவலை நான் சொல்லி விட்டேன்.

<u>திரு. ப. பொன்னுரங்கம்:</u> அதைப்பற்றி தாங்கள் மன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லியாக வேண்டும், எனக்குக் கிடைத்த தகவலின்படி அவர் பெயிலிலும் இல்லை. அப்பீலும செய்யவில்லை, எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை என்பதுதான்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> சட்டமன்ற பேரவை விதி 316இல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்—

"எனினும், ஒரு உறுப்பினர் பிணையில் அல்லது மேல் முறையீடு காரணமாக விடுவிக்கப்பெற்றுள்ளதான தகவல், அந்த உறுப்பினர் கைது செய்யப் பெற்ற செய்தியை பேரவைக்கு அறிவிக்கும் முன்பே கிடைக்கப் பெறின், அவர் கைதான செய்தியையும், அல்லது பின்னால் விடுவிக்கப் பெற்ற செய்தியையும் பேரவைத் தலைவர் பேரவைக்கு தெரிவிக்காமல் இருக்கலாம்."

என்று தான் இருக்கிறது. அவர் விடுதலையாகி விட்டார். இப்போது பிரச்சினையில்லை, அது முடிந்துவிட்டது.

<u>திரு. க. அன்பழகன்:</u> தலைவர் அவர்களே, விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்று தாங்கள் சொல்வதை நாங்கள் செய்தியாகத்தான் தெரிந்து கொள்கிறோம். அவர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தி உறுப்பினர்களுக்குத் தெரிந்து இருக்கிற காரணத்தால் விடுதலை செய்யப்பட்ட சூழ்நிலையில் அதை தாங்கள் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாக இல்லை என்றாலும் தெரிவித்தால் அவையிலே உள்ளவர்களுக்கு நிறைவு தரும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன், அது பத்திரிகையிலே வந்துவிட்டது அதைப்பற்றி அவைக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை என்று விதி தெளிவாக இருக்கிறது.

[1980 ஜூலை 28

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ்நாடு உடற்பயிற்சி ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். ''தமிழ்நாடு உடற்பயிற்சி ஆசிரியர்கள் 23—7—1980 முதல் உண்ணாவிரதம் இருப்பது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்று கேட்டு திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், ஆர். கிருஷ்ணன், கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், என். பழனிவேல், உ. சுப்பிரமணியம், என். எஸ். வி. சித்தன், ப. நெடுமாறன், குமரி அனந்தன், ஜே. எஸ். இராசு, செ. இராமலிங்கம், மு. அம்பிகாபதி, எஸ். சிவசாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, இந்த உடற்பயிற்சி ஆசிரியர்கள் தொடர் உண்ணாவிரதத்தை துவங்கியிருக்கிறார்கள். ஒரு நாள் விட்டு ஒருநாள் உண்ணாவிரதம் இருப்பது வேறு, தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருப்பது வேறு. இவர்கள் தொடர்ந்து கடுமையான உண்ணாவிரதத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களுடைய கோரிக்கைகளை கவனித்து அவைகளை ஏற்றுக் கொள்வதற்கு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, உடற் பயிற்சி ஆசிரியர்கள் கடந்த 4, 5 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். உடற் பயிற்சி மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஒலிம்பிக் போட்டிகள் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே உடல் பயிற்சி மிகவும் முக்கியமானது, தேவையானது. இந்தியாவுக்கு ஒரு தகரப் பதக்கம் கூட கிடைக்காமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது அது மிகவும் அவசியமானது என்பது தெரிகிறது. ஏற்கனவே அரசாங்க ஆணை எண். 1591, 24—8—1979-இல் போடப்பட்ட உத்திரவு அமல் ஆக்கப்படவில்லை என்று தெரிகிறது. மேல் நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் எம்.ஏ.,எம்.எஸ்ஸி. படித்த போஸ்ட் கிராஜுவேட்டாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். என்ஜினியரிங் காலேஜிலே பிஸிக்கல் டைரக்டராக இருக்கிறவர் பி.இ. படித்து இருக்கிறாரா? அதேபோன்று மெடிக்கல் காலேஜில் பிஸிக்கல் டைரக்டராக இருக்கிறவர் எம்.பி.பி.எஸ். படித்து இருக்கிறாரா? ஆகவே அந்த முறையில் இல்லாமல் பிஸிக்கல் டைரக்டராக வருகிறவர்கள் பி.ஏ., எஸ்ஸி., படித்தால்போதும்

[முற்பகல் 10-10]

ஏற்கனவே அரசாங்க உத்தரவு நிறைவேற்றப்படாமல் இருப்பதையும், தனியார் பள்ளிகளிலேயும் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருப்பதையும் பற்றி இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக, அதுகுறித்து இங்கே விவாதம் செய்து அதற்கு முடிவு செய்ய வேண்டும். ஆகவே, இன்றைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: அவையின் நாயகரவர்களே, உடற்பயிற்சி ஆசிரியர்களின் நியாயமான குறைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் முயன்று உடனடியாகக் காரியமாற்றினால்தான் அவர்களுடைய உள்ளம் செம்மையாக இருக்கும். நல்ல உள்ளம் நல்ல உடல் என்பதோடு தொடர்புடையது. அந்த மனத்திருப்தியோடு பாடம் சொல்லிக் கொடுக்கின்ற நிலை ஏற்படாத காரணத்தினால்தான், உடற்பயிற்சியில் நமது நாட்டில் பின்தங்கி, மாஸ்கோ போன்ற நாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெற முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, உடனடியாக அவர்களுடைய குறைகளை அரசு தீர்க்குமா என்று கேட்டுக்கொண்டு, அதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, உடற்பயிற்சி இயக்குநர்கள் என்பவர்கள் பி.ஏ., பி.எஸ்ஸ்., படித்துவிட்டு, பி.எஃப்.இ. படித்தால் கல்லூரிகளில் கூட இயக்குநர்களாகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஹையர் செகண்டரி என்று சொல்லப்படும் மேல்நிலைப் பள்ளிகளில் இன்றைக்குப் பணியாற்றும் அவர்களுக்கு, கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய வாய்ப்பு அற்றவர்களுக்கு, போதிய சம்பளம் கிடைப்பது இல்லை. அதோடு மட்டுமல்ல, எம்.பி.எட். படிக்க வேண்டுமென்ற நிலைமையும் இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இந்தக் கருத்துக்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அநேகமாக முழு விவரங்களையும் அறிந்திருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் இயக்குநர்களின் கோரிக்கை என்னவென்றால், அரசு போட்டிருக்கின்ற ஒரு உத்தரவை, ஏற்கனவே கல்வி இயக்குநர் ஒருவர், இருவர் இருந்து, நல்ல முறையில் ஆய்ந்து தெளிந்து போடப்பட்ட உத்தரவை, ஏற்கனவே கல்வித் துறைச் செயலாளராக இருந்த திரு. ஈ. சி. பி. பிரபாகர் ஒத்துக்கொண்ட உத்தரவை இன்றைக்கு இருக்கின்ற மேல் நிலைக் கல்வி இயக்குநர் அவர்கள் ஏன் அந்த அரசு உத்தரவை மறுக்கிறார்கள் என்ற நியாயமான கோரிக்கையை முன்வைத்து நான்கைந்து நாட்களாக உண்ணா

விரதம் இருந்தார்கள். காலையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். மேற்கொண்டு விவரம் என்னவென்று சம்பந்தப்பட்ட தோழர்களைக் கேட்ட நேரத்தில், அது நேற்றே முடிந்து விட்டது என்ற கருத்தையும் இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி எனக்குச் சரியான விவரம் தெரியவில்லை. ஆகவே, அமைச்சரவர்கள் இதற்கு நல்ல முறையில் விளக்கம்அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். But orders issued by Government are deliberately violated by the Department என்பது தான் ஒரு பெரிய குறையாக இருக்கிறது. தேவைக்கேற்றவாறு, ஒவ்வொரு இயக்குநரின் எண்ணத்திற்கேற்றவாறும் அரசு உத்தரவை மாற்றுவது சரியானதுதானா? அது இந்தத் துறையில் மட்டுமல்ல, எத்தனையோ துறைகளில் இப்படி, போடப்பட்ட ஜி.ஓ. நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்றன என்பதற்கு ஏராளமான சான்றுகள் நான் வைத்திருக்கிறேன். அதோடு இதையும் சேர்த்துவிடாமல், அரசு வெளியிட்ட உத்தரவை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி, நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் மூலமாக உடற்பயிற்சி ஆசிரியர்கள் நல்ல முறையிலே பணியாற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதுபற்றி விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 1591, கல்வி, நாள் 24—8—1979-இல் மேல்நிலைப்பள்ளிகளில் (அரசு மற்றும் தனியார் பள்ளிகள்) உடற்பயிற்சி ஆசிரியர்/இயக்குநர் பதவிகளில் 400 பணியிடங்களை உடற்பயிற்சி இயக்குநர் பதவிகளாக ரூ 600—1,050 என்ற சம்பள விகிதத்தில் உயர்த்தும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களது கல்வித் தகுதி கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டது :—

"பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம். மற்றும் உடற்பயிற்சிக் கல்வியில் பட்டமும் அல்லது அதற்குச் சமமான பட்டயமும் (Diploma)"

இதனைச் செயல்படுத்தும்போது சில சிக்கல்கள் ஏற்படுகிறதென்றும், அதாவது உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றும் அதே தகுதியுள்ள உடற்பயிற்சி இயக்குநர்கள் ரூ. 450—800 என்ற சம்பள விகிதத்தில் ஊதியம் பெறுகின்றனரென்றும், மேல்நிலைப் பள்ளிப் பணியில் அதே தகுதியுள்ள உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு ரூ. 600—1,050 என்ற விகிதத்தில் ஊதியம் வழங்குவது பொருந்தாது என்றும், மேலும் இது நிர்வாகப் பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் உண்டாக்குவதுடன், பட்டதாரி ஆசிரியர்கள் நலனைப் பாதிக்கும் என்றும், எனவே எம்.பி.எட்., பட்டம் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு, அதாவது உடற்கல்வியில் முது நிலைப்பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 600—1,050 என்ற

சம்பள விகிதத்தை அளிக்கலாமென்று பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்து உள்ளார். இப்பரிந்துரை நிர்வாகச் சீர் திருத்தத் துறையுடனும், நிதித்துறையுடனும் கலந்து பரிசீலிக்கப் பட்டு வருகிறது. விரைவில் ஆணை வெளியிடப்படும்.

மேலும் மூன்றாவது ஊதியக்குழுவின் உடற்பயிற்சி ஆசிரியர் களுக்கிடையே இருந்த கிரேடு 1, கிரேடு 2 ஆகிய இரண்டு பிரிவு களையும் இணைத்து ஒரேவிதமான சம்பள விகிதத்தில் மாற்றி யமைக்கலாம் என்ற பரிந்துரையை அரசு ஏற்று ரூ. 350-600 என்ற சம்பள விகிதம் நிர்ணயம் செய்துள்ளது. இந்த கிரேடு 1, கிரேடு 2, உடற்பயிற்சி ஆசிரியர்களிடையே உள்ளிடை முன்னு ரிமை Inter-Se-Seniority பட்டியல் தயார் செய்வதுபற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது.

உடற்பயிற்சி ஆசிரியர்கள், இயக்குநர்கள் பதவிகளில் 400 பணியிடங்களை உடற்பயிற்சி இயக்குநர் இடங்களாக உயர்த்தி வெளியிட்ட ஆணையைச் செயல்படுத்துவதில் சில சிக்கல்கள் தோன்றிருக்கின்றன. அவைகளைக் களைய அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது.

இந்த உடற்பயிற்சி இயக்குநர்களுடைய பிரச்னை அவர்கள் பெற்றிருக்கின்ற தகுதியையும் அவர்கள் எடுக்கின்ற வகுப்பையும் அடிப்படையாக வைத்து, அவர்களுக்கு இந்தப் பதவி உயர்வை நாம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே சம தகுதி உள்ளவர்கள் பி.ஏ., பி.டி. பட்டம் பெற்றவர்கள், புலவர் பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர் களுக்கு நாம் இதுபோன்ற பதவிகளைத் தருகிறபொழுது, என்ன நியாயத்தை வழங்குகிறதோ, அதே அடிப்படையிலே இவர்க ளுக்கும் நியாயம் வழங்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு ஆணை வெளியிட்டதனாலே, ஏற்பட்ட சில விளைவு களை ஆராய்ந்து, அதை முறைப்படுத்தி, சரியாகத் திருத்தி, ஒரு ஆணையை வெளியிடுவது என்பது அரசாங்கத்தினுடைய முக்கிய மான கடமைதான். ஆகவே, அந்த அடிப்படையிலே பார்க்கின்ற பொழுது, இன்றைக்கு இந்தத் தகுதிக்கும் அவர்கள் எடுக்கின்ற வகுப்புக்கும் ஏற்ப, மற்ற ஆசிரியர்களுக்குச் செய்திருக்கிற ஒரு சலுகையை அல்லது ஒரு நன்மையை இவர்களுக்கும் செய்ய நாம் விரும்புகிறோம். அவர்களுக்கு, எம்.பி.இ.எட். பட்டத்தை வலியுறுத்துவதனுடைய நோக்கம் மற்ற ஆசிரியர்களுக்கும் நாம் அதை வலியுறுத்துகிறோம். பி.ஏ., பி.டி. படித்தவர்கள் இப் பொழுது இன்ட்டகிரேடட் டீச்சராக மேல்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலே முழு ஆசிரியர்களாக மாற வேண்டுமேயானால், எம்.ஏ., எம்.எஸ்.ஸி., படிக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதைப் போலவே, பி. ஏ., பி.டி. படித்து, கெசட்டட் பதவி யுள்ள தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்கள் முழுத் தகுதியும்

பெறாத காரணத்தாலே, இப்பொழுது 20 பேர்களை பதவி இறக்கம் கூட நாம் செய்திருக்கிறோம். ஆகவே, மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்த மட்டில், நாம் தகுதியிலே அக்கறையாக இருப்பதற்குக் காரணம், மேல்நிலைப் பள்ளியினுடைய தரம் குறையைக் கூடாது என்பதும், இப்படி தகுதியை நாம் குறைப் போமேயானால், மேல்நிலைப் பள்ளியினுடைய சான்றிதழை பல்கலைக்கழகத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையும், இன்ஜினியரிங் கல்லூரியிலும், மெடிக்கல் கல்லூரியிலும், அந்தச் சான்றிதழை ஒத்துக்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டு விடும். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை நமது மாணவர்களுக்கு வரக்கூடாது என்கிற அடிப்படையிலேதான் நாம் தகுதியைச் சொல்வதில், அதை வலியுறுத்துவதில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட தகுதியை உடையவர்கள், குறிப்பிட்ட வகுப்புக்குச் சொல்லித்தர வேண்டுமென்பதிலே நாம் ஓரளவுக்கு உறுதியாக இருந்து அதைச் செயல்படுத்துவதனால் தான் இப்பொழுதிருக்கிற மேல்நிலைப் பள்ளி வகுப்பிலிருந்து வெளியேறுகிற மாணவர்கள் இங்கேயோ அல்லது வேறு இடத் திற்கோ போனாலுங்கூட, அவர்களுக்கு உரிய மரியாதை தரப் படுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, தரத்தைக் குறைக்கின்ற காரியங்களைச் செய்வதன்மூலமாக, நாம் பொது நன்மைக்கு பாதகம் விளை விக்கின்ற ஒரு காரியத்தைச் செய்தவர்கள் ஆவோமே தவிர, பொது நன்மையை மறந்து நாம் அத்தகைய ஒரு பகுதியினர் கேட் கின்ற கோரிக்கையை அடிப்படையாக வைத்து காரியங்களைச் செய்ய முற்படுவோமானால், பொது நன்மை பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டு, சமுதாயத்தினுடைய முன்னேற்றம் தடைப்படும் என்றுதான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அந்த அடிப்படையிலே பார்க்கின்றபொழுது இந்தக் கருத்துக் களின் அடிப்படையிலே அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. இந்தக் கருத்துக்களை நான் மேலவையில் கூறினேன். அதைக் கேட்ட அந்த ஆசிரியப் பெருமக்கள் இருக்கிற நிலைமை களை நன்கு புரிந்துகொண்ட காரணத்தினலே, என்னோடு வந்து விவாதித்து, மேற்கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளை எந்த அளவுக்குப் பெற முடியுமோ அந்த அளவுக்குப் பெறமுடி யும் என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தாலே, அந்த உண்ணா விரதத்தை அவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

4. அரசினர் தீர்மானம் விதி 200(3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு தீர்மானம் மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 200 உள்விதி (3)ன் கீழ், மானியக் கோரிக்கைகளின் வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப் பெற்ற நாட்களில் கடைசி நாள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள 29—7—1980 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக நிலுவையில் இருக்கும் பொருள்கள் அனைத்தையும் முடிவுறச் செய்ய பேரவைத் தலைவர் உடனடியாக வாக்கெடுப்பிற்கு விடவேண்டும் என்பதைத் தளர்த்தி ''29—7—1980 மாலை 7.00 மணிக்கு உடனடியாக வாக்கெடுப்புக்கு விட வேண்டும்'' என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

5. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலைப் பகுதியில் மர்ம நோய் காரணமாகப் பலர் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. முகமது இஸ்மாயில், பொ. விஜயராகவன், மி. வின்சென்ட், கே. எம். தங்கமணி, டி. மணி, நா. சுந்தரராஜ், இரெ. இராசமாணிக்கம், டாக்டர் கே. சமரசம், ஜே. ஹேமச்சந்திரன், துரைமுருகன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள் திரு. பி. முகமது இஸ்மாயில்.

*திரு. பி. முகமது இஸ்மாயில்: பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் தக்கலைப் பகுதியில் பரவி வரும் மர்மநோய் காரணமாக அங்கு பலர் மரணமடைந்தது பற்றிய'', அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை வட்டத்தில், பாக்கோடு, மூலைச்சல் கிராமங்களில் 11-6-1980 முதல் 3-7-80

வரை 14 பேர் நோயினால் பாதிக்கப்பட்டு, அதில் 10 பேர் இறந்து விட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் மட்டும் 37 வயதானவர், மற்றவர்கள் 7 மாதத்தில் இருந்து 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள். இவர்களனைவரும் நெய்யூரிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் யாவரிடமும் மூளைக்காய்ச்சல் (Encepalitis) என்ற நோய்க்குண்டான அறிகுறிகள் இல்லை. அவர்களுக்கு ஏற்பட்ட நோய் ''Gastritis'' எனப்படும் வயிற்றுக்கோளாறு நோய் என்று கண்டறியப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை எவரும் மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்படவில்லை. இப்பகுதியிலுள்ள கொசுக்களில் மூளைக்காய்ச்சலைப் பரப்பும் கொசுக்கள் இல்லை என கணிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் தடுப்பு நடவடிக்கையாக எல்லா நீர்நிலைகளிலும் குளோரின் எனப்படும் மருந்து தெளிக்கப்பட்டு, இப்பகுதியிலுள்ள வீடுகளில் கொசு ஒழிப்பதற்காக மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக யாரும் பாதிக்கப்படவில்லை.

திரு. பி. முகமது இஸ்மாயில் : தலைவர் அவர்களே, இந்த நோய்க்கான சிகிச்சை அளிப்பதற்காக தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலை இப்போது ஏற்பட்டு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கத்துறையில் நாகர்கோவிலிலே ஒரு பெரிய மருத்துவமனையும், தக்கலையிலே ஒரு மருத்துவமனையும் இருக்கின்றன. இந்த இரண்டு மருத்துவமனைகளிலும் அந்த நோய்க்கான தகுந்த சிகிச்சை அளிக்கும் வசதிகள் இல்லாததனால் அவர்கள் தனியார் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி தனியார் மருத்துவமனைகளுக்குப் போவது என்றால் அது வசதி படைத்தவர்களால்தான் முடியும். ஆனால் இலவசமாக சிகிச்சை பெறுவதற்கு ஏழைகள் அரசாங்க மருத்துவமனைகளைத்தான் நாடிச் செல்ல முடியும். எனவே அரசாங்க மருத்துவமனைகளில் இத்தகைய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் வசதிகள் செய்து தரப்படுமா என்பதை அறிய கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நோய், குறிப்பாக காஸ்ட்ரோ என்டிரைட்டிஸ், என்றால் வாந்தி வரும், பேதி வரும் 'டி ஹைடிரேஷன்' ஏற்படும். அத்தகைய நோயாளிகள் அரசாங்க மருத்துவமனைக்குத்தான் போகவேண்டும். அங்கேதான் அதற்கு வசதிகள் இருக்கின்றன. ஆனால் துர்ப்பாக்கியவசமாக தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை செய்து கொள்கிறார்கள். அங்கே நல்ல முறையில் விரிவான சிகிச்சைக்கு ஏற்பாடுகள் இல்லை. நம்முடைய அரசாங்கத் துறையில் இருக்கின்ற மருத்துவமனைகளில் பல்வேறு இடங்களில் எல்லாவிதமான அமைப்புகளும் இருக்கின்றன. அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லையே என்ற வேதனைதான் என்னுடைய வேதனையே தவிர வேறு ஒன்றும் இல்லை.

1980 ஜூலை 28] [டாக்டர் எச்.வி. ஹண்டே]

இதற்காக ஒன்றும் புதிதாக ஏற்படுத்தத் தேவையில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்க மருத்துவமனைக்கு வராமல் இருந்தது, நம்முடைய மருத்துவமனைகளில் சிகிச்சை இல்லை என்பதற்காக அல்ல. அவர்கள் வரவில்லை அவ்வளவுதான். வந்திருந்தால் பலபேர்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள என்றுதான் நானும் கருதுகிறேன்.

திரு பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது அரசாங்க மருத்துவமனைகளில் இதற்கான போதிய வசதிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். குறிப்பாக இந்தப் பிரச்சினையில் தக்கலை வட்டத்தில் உள்ள அந்தத் தக்கலை மருத்துவமனையில் போதிய வசதிகள் இல்லை என்று அந்தக்கிராமங்களில் பரவலாகப் பொது மக்களின் மத்தியில் எண்ணம் ஏற்பட்டதன் காரணமாகத்தான் அவர்கள் தனியார் மருத்துவமனைக்குப் போகிற சூழ்நிலை இருக்கிறது. அந்த மருத்துவமனைகளில் மக்களை ஈர்க்கக்கூடிய சிகிச்சைகள் இல்லாத காரணத்தினால்தான் மக்கள் தனியார் மருத்துவமனைக்கு செல்கிறார்கள். அதை மாற்றி, அதைச் சீரமைத்து அதற்கு வேண்டிய எல்லாவிதமான நல்ல திட்டங்களையும் அந்த மருத்துவமனைக்கு கொண்டு வருவதற்காக அரசாங்கம் ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் எவ்வளவு செய்தாலும் கூட அங்கே எப்படியோ நம்மை அறியாமலேயே தனியார் துறையினர் தான் நோயாளிகளை ஈர்க்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் இந்த நிலைமை இல்லை. மருத்துவமனையில் இன்ட்ராவீனஸ் குளுகோஸ் இன்ஜெக்ஷன் கொடுப்பதற்கான வசதிகள் இருக்கின்றன. அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. நான் அது குறித்து உடனடியாக விசாரித்து விவரம் தெரிந்து கொண்டேன். அந்த மருத்துவ வசதியை சுலபமாகச் செய்வதற்கான கருவி அங்கே இருக்கிறது. அதை நோயாளிகள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதுதான் நம்முடைய கவலை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, உயிரை பலிவாங்கும் இத்தகைய கொடிய நோய் இந்த மாநிலத்தில் உள்ள ஒரு சில பகுதிகளில் மட்டும் தோன்றி, குழந்தைகளின் உயிரை பறிக்கின்றது. இது சுகாதாரக் கேட்டால் ஏற்படுவதா? பக்தர்கள் சிலர், வரவர விஷ்ணு தன் காத்தல் தொழிலைச் சரிவர செய்வது இல்லை என்றும், சிவன் தன் அழித்தல் சக்தியை அதிகமாகப் பயன்படுத்துகிறார் என்றும் கருதுகிறார்கள். ஆகவே, சிவனின் அனுக்கிரஹம் பெற்று யமதர்மனின் நடமாட்டம் இல்லாமல் செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்செனட் அவர்களின் புது வ்யாக்கியானத்தில் என்னைப் போன்றவர்களுக்கு உடன்பாடு இல்லை இந்த அரசுக்கும் உடன்பாடு இல்லை. நான் முன்பு சொன்னமாதிரியாக அந்த நோய்க்கு மிக எளிதாக வைத்தியம் செய்து இருக்கமுடியும். உடனடியாக 'டிஹைட்ரேட்' ஆகாமல் தடுத்து நிறுத்துவதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு இருந்தால் ஒரு பெரிய இழப்பைத் தடுத்து இருக்கமுடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குமரி மாவட்டத்திலே தக்கலை பகுதியிலே இந்த மர்மமான நோய் கண்டு அதனாலே கிட்டத்தட்ட 10 பேர் இறந்து விட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 14 பேருக்கு அந்த வியாதி கண்டதாகவும் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் 30-க்கும் மேற்பட்டவர்களுக்கு அப்படிப்பட்ட வியாதி கண்டதாகவும், அதிலே அதிகமான பேர்கள் இறந்து விட்டதாகவும் செய்திகள் வந்து இருக்கின்றன.

இப்படி அந்த வியாதி காணுகிறபோதே, ஆரம்பத்திலே அந்த வியாதி சிறிய குழந்தைகளுக்குத்தான் ஆரம்பிக்கும் என்றும், அது ஒரு மர்மமான வியாதி என்றும் அங்கே இருக்கின்ற மாவட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்து இருக்கிறார்கள். அந்த வியாதி ஆரம்பித்தவுடன், அந்த வியாதி கண்டவர்களுக்கு மயக்கம் ஏற்படுவதாகவும் ஜன்னி ஏற்படுவதாகவும், அதனாலே குழந்தைகள், பெரியவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி 10 பேர் அந்தப்பகுதியில் இறந்து இருக்கிறார்கள்.

ஆகவே, இப்படிப்பட்ட வியாதி காணுகிறபோதே அதைக் கட்டுப்படுத்துவதற்கு அங்கே இருக்கும் மாவட்ட மருத்துவத் துறை அதிகாரிகள் முயற்சி எடுத்தார்களா? அப்படி முயற்சி எடுக்காததால்தான் இந்த 10 பேர் இறந்து இருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புவதோடு, இப்படிப்பட்ட புது மாதிரியான நோய்கள் காணுகிறபோது அதைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய மருத்துவத் துறையில் புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னமாதிரி அந்த நோயாளிகள் உடனடியாக தனியார் மருத்துவமனைகளில் அனுமதி பெற்று இருக்கிறார்கள். இவ்வளவு பேர்கள் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்களே என்று அறிந்தவுடன், டி.எச்.ஒ. அவர்கள் அதுகுறித்து விசாரணை செய்து, அதற்குரிய

1980 ஜூலை 28] *[டாக்டர் எச். வி. ஹண்டே]*

நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்த நோய் பரவாமல் இருப்பதற்கான 'பிரவென்டிவ் மெஷர்ஸ்' எடுத்துக்கொள்ளப்பட்டன. ஏற்கனவே தன்யார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 14 பேர்தான் இறந்து போனார்கள். அதற்குப் பிறகு புதிதாக யாரும் அங்கே இறக்கவில்லை. மற்றொரு பேட்ச் இறந்து இருக்கிறார்கள் என்று நிலைமை இல்லை. புதிதாக அந்த நோயால் பீடிக்கப்பட்டவர்கள் யாரும் உள்ளதாக தகவல் இல்லை. ஆகவே, அந்த நோய் வளராமல் தடுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு வேண்டிய அவசர அவசிய நடவடிக்கைகளை டி.எச்.ஓ. அவர்கள் எடுத்துக்கொண்டதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்த மர்ம நோய் தக்கலையில் மட்டுமல்ல; இந்த மாநிலம் முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இல்லாத இடைக்காலத்தில் இருந்திருக்கிறது. காவேரிப்பட்டினத்திலும் அந்த நோய் கண்டு 7 பேர் இறந்திருக்கிறார்கள். இந்த நோய் 'மெனஞ்சடீஸ்' என்றோ அல்லது 'ப்ரெயின் ஃபீவர்' என்றோ தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டமாதிரி காலரா கோளாறா அல்லது வேறு தொற்றுநோயா என்றும் சொல்ல முடியவில்லை. இந்த மர்ம நோய் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இல்லாத இடைக்காலத்தில்தான் வந்திருக்கிறது. அதற்கு முன்பும் இல்லை; பின்னாலும் இல்லை. ஆகவே, இந்த மர்ம நோய் இடைக்காலத்தில் ஏற்பட்ட மர்மம் என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த இடைக்காலத்தில் என்ன ஏற்பட்டது என்ற தகவல் நம்மிடத்தில் இல்லை. இந்த நோய் 'என்கலைஃபிட்டீஸ்' என்கிற மூளைக் காய்ச்சல் அல்ல. ஏதாவது 'இன்ஃபெக்ஷன்' ஏற்பட்டு, வயிற்றுக்கோளாறு வந்திருக்கும். அதை என்னவென்று அறிய நிபுணர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆய்வு செய்து முடிவு தெரிவித்த பின்னால் அறிவிப்பார்கள்.

திரு. டி. மணி : தலைவரவர்களே, இந்த தக்கலை வட்டத்தில் மட்டுமல்ல அந்த நோய் கண்டிருப்பது அந்தப் பிரதேசம் முழுவதும் குறிப்பாக கல்குளம் தாலூகாவில் பல்வேறு கிராமங்களில் அந்த நோய் பரவியிருக்கிறது. இதனால 27 பேர்கள் நெய்யூரில் இருக்கிற தன்யார் மருத்துவ மனையில சேர்க்கப்பட்டிருக்கிறார்கள என்று தகவல் வந்திருக்கிறது. அங்குள்ள சுகாதார அதிகாரியை பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, இது என்ன நோய் என்று இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னதாக தகவல் வந்திருக்கிறது. ஆகவே, கல்குளம் தாலூகா முழுவதிலும்

[திரு. டி. மணி] [1980 ஜூலை 28

அந்த நோய் மேலும் பரவாமலிருக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் உடனடியாக தடுப்பு நடவடிக்கை எல்லா இடங்களிலும் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி அந்த நோயாளிகள் எல்லாம் ஒரே இடத்திலிருந்து வரவில்லை; தக்கலை வட்டாரத்தில் பல கிராமங்களிலிருந்தும் சுற்றுப்புறங்களிலிருந்தும் வந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அந்த வியாதி என்ன என்பது பரிசோதனைக்குப் பின்னால்தான் தெரியும். ஆனால் மேலும் அந்த நோய் பரவாமல் இருக்க உடனடியாக தடுப்பு நடவடிக்கைகள் (பிரிவண்டிவ் மெஷர்ஸ்) தான் எடுக்க முடியும். அது என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க ஸ்டமக் வாஷ் எடுத்து, பரிசோதனைக்காக அனுப்பி இருக்கிறார்கள். இன்னும் ரிசல்ட் வரவில்லை, ரிசல்ட் வந்த பின்னால்தான் என்ன வியாதி என்று சொல்ல முடியும். ரிசல்ட் வருவதற்கு முன்னால் பிரிவன்டிவ் மெஷர்ஸ் எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட நெருக்கடியான நேரங்களில் நோயாளிகள் அரசு மருத்துவமனைக்குச் சென்றால் போதுமான அளவுக்கு வைத்திய வசதி கிடைக்கவில்லை என்றும் நல்லமுறையில் பார்க்கவில்லை என்றும் எண்ணுகின்ற காரணத்தால்தான் நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்கிறார்கள். ஆகவே அரசு மருத்துவ மனைகளை நல்லமுறையில் பராமரிப்பதற்கும் நோயாளிகளை நல்லமுறையில் கவனிப்பதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, எல்லாவகையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மானியக் கோரிக்கையில் கூட எல்லா விவரங்களையும் நான் கூறியிருக்கிறேன். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே பல்லாண்டுகளாக தனியார் மருத்துவமனைகள் ஏராளமாக இருக்கின்றன. நம்முடைய அரசு மருத்துவமனையில் போதுமான வசதிகள் முன்பு இல்லாமல் இருந்தது அதற்கு காரணமாக இருக்கலாம். 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு அரசு மருத்துவமனை அங்கே அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை. இப்போது தீவிர கவனம் செலுத்தப்பட்டு அங்கு போஸ்ட் கிராஜுவேட்ஸ், எம். எஸ்., எம். டி. படித்தவர்களை நியமித்துக்கொண்டிருக்கிறோம். நல்ல உயர்மட்ட டாக்டர்களை அங்கே நியமித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, விரைவில் நம்முடைய

1980 ஜூலை 28] *[டாக்டர் எச். வி. ஹண்டே]*

அரசாங்க மருத்துவ மனைக்கு நோயாளிகள் எல்லாம் வரக்கூடிய நிலைமையை படிப்படியாக ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளில் தண்ணீர் இன்றி பயிர்கள் வாடுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, செ. சிவசாமி ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார்கள். திரு. மு. அம்பிகாபதி அவர்கள்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, ''தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி, பட்டுக்கோட்டை தாலுக்காக்களில் கல்லணைக் கால்வாய், வடவாறு விரிவாக்கக் கால்வாய் ஆகியவற்றிற்குத் தண்ணீர் விடாததால் எழுந்துள்ள நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசன துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, வழக்கமாக மேட்டூர் அணையைத் திறந்து விடும் நாளான சூன் மாதம் 12-ந் தேதி, இந்த ஆண்டும் மேட்டூர நீர்த்தேக்கம் பாசனத்திற்கு திறந்துவிடப்பட்டது. 16—6—1980 ஆம் தேதி அன்று தண்ணீர் கல்லணையை அடைந்து, காவிரி, வெண்ணாறு கல்லணைக் கால்வாய்களில் நீர்விடப்பட்டது. நீர்த்தேக்கத்திலிருந்து வெளியே செல்லும் நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, 5—7—1980 முதல், வெள்ளக் காலங்களில் விடப்படும் அளவிற்கு நீர்விடப் பட்டது. தஞ்சாவூர், மன்னார்குடி மற்றும் பட்டுக்கோட்டை வட்டங்களில், காவிரி–மேட்டூர் திட்டத்தின் ஆயக்கட்டிலுள்ள 2,56,000 ஏக்கர் நிலங்களுக்கு கல்லணைக் கால்வாயும் வடவாறு விரிவாக்கக் கால்வாயும் பாசனமளிக்கின்றன.

பொதுவாக பாசனத்திற்காக தண்ணீர் முழு அளவில் ஆரம்பத்தில் விடுவதில்லை. விவசாயிகள் பயன்படுத்துவதற்கு தேவையான நீர் அதிகமாகும்போது, அதற்கேற்ப நீர்விடுவது அதிகரிக்கப்படுகிறது. வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் இவற்றில் விடப்பட்ட நீரின் அளவு 24—6—1980 முதல் அதிகரிக்கப்பட்டு, தேவைக்கேற்ப முழு அளவு நீர்விடப்பட்டது. கடைக்கோடிப் பகுதிகளையும் நீர் சென்றடைந்துள்ளது. ஆயக்கட்டின் எந்தப் பகுதியிலும் பாசனத்திற்கு நீர்விடுதலில் குறைவு ஏற்படவில்லை. பாசனத்திற்கு தண்ணீர் விடுவது பொதுப் பணித்துறையின் உயர் அதிகாரிகளால் கண்காணிக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, நான் நேற்றுக்கூட மன்னார்குடி சென்றுவிட்டுத்தான் வந்திருக்கிறேன். மன்னார்குடி பகுதியில் காரிக்கோட்டை, மேல்வாசல், சுந்தரக்கோட்டை, நெடுலாக்கோட்டை, பரவாக்கோட்டை, உள்ளிக்கோட்டை, வடுவூர், புதுக்கோட்டை, பைங்காநாடு, திருமக்கோட்டை, பகலையக்கோட்டை, எளவனூர், தென்பரை, ராதாநரசிம்மபுரம் ஆகிய இத்தனை ஊர்களுக்கும் தண்ணீர் பாயவில்லை. அதேபோன்று பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரவர்களுடைய தொகுதியிலுள்ள உலையகுண்டம், கன்னியகுறிச்சி, சளிச்சாங்கோட்டை, வாராஜிக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் பாயவில்லை. இவையெல்லாம் கடைமடைப் பகுதிகளாக இருப்பதால் இந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் பாய்வது மிகவும் சிரமமானதாக இருக்கின்றது. எனவே இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலைமைகளை மாற்றுவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக கல்லணைப் பகுதிகளில் ஆற்றை அகலப்படுத்துவதற்கும் கல்லணைக் கால்வாய், வடவாறுக் கால்வாய் ஆகியவற்றில் தண்ணீர் அதிகமாகச் செல்வதற்கும் தகுந்த நடவடிக்கையைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மன்னார்குடி தாலுக்காவிலும், பட்டுக்கோட்டைத் தாலுக்காவிலும் பெரும்பான்மையான பகுதிகளுக்கு தண்ணீர் பாயவில்லை என்று சொல்லப்பட்டது. மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் 26-6-1980 அன்று தண்ணீர் விடப்பட்டது என்று சொன்னார்கள். கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் பாயவில்லை, அங்கு இன்னும் சென்று சேரவில்லை என்பதை எடுத்துக்காட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோட்டைகளை எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற காரணத்தாலே அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மக்களிடத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதைப்போக்கும் வகையில் கல்லணைக் கால்வாய், மன்னார்குடி பிரதானக் கால்வாய் ஆகியவற்றை ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் அகலப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசால் எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இந்தத் திட்டம் முடியுமா முடியாதா என்பது கேள்வி அல்ல. இது முடியக்கூடிய ஒன்றுதான். ஆகவே அதைப்பற்றித்தான் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

1980 ஜூலை 28] *[டாக்டர் எச். வி. ஹண்டே]*

அரசாங்க மருத்துவ மனைக்கு நோயாளிகள் எல்லாம் வரக்கூடிய நிலைமையை படிப்படியாக ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளில் தண்ணீர் இன்றி பயிர்கள் வாடுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மு. அம்பிகாபதி, செ. சிவசாமி ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார்கள். திரு. மு. அம்பிகாபதி அவர்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, ''தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி, பட்டுக்கோட்டை தாலுக்காக்களில் கல்லணைக் கால்வாய், வடவாறு விரிவாக்கக் கால்வாய் ஆகியவற்றிற்குத் தண்ணீர் விடாததால் எழுந்துள்ள நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசன துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, வழக்கமாக மேட்டூர் அணையைத் திறந்து விடும் நாளான சூன் மாதம் 12-ந் தேதி, இந்த ஆண்டும் மேட்டூர நீர்த்தேக்கம் பாசனத்திற்கு திறந்துவிடப்பட்டது. 16—6—1980 ஆம் தேதி அன்று தண்ணீர் கல்லணையை அடைந்து, காவிரி, வெண்ணாறு கல்லணைக் கால்வாய்களில் நீர்விடப்பட்டது. நீர்த்தேக்கத்திலிருந்து வெளியே செல்லும் நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, 5—7—1980 முதல், வெள்ளக் காலங்களில் விடப்படும் அளவிற்கு நீர்விடப் பட்டது. தஞ்சாவூர், மன்னார்குடி மற்றும் பட்டுக்கோட்டை வட்டங்களில், காவிரி–மேட்டூர் திட்டத்தின் ஆயக்கட்டிலுள்ள 2,56,000 ஏக்கர் நிலங்களுக்கு கல்லணைக் கால்வாயும் வடவாறு விரிவாக்கக் கால்வாயும் பாசனமளிக்கின்றன.

பொதுவாக பாசனத்திற்காக தண்ணீர் முழு அளவில் ஆரம்பத்தில் விடுவதில்லை. விவசாயிகள் பயன்படுத்துவதற்கு தேவையான நீர் அதிகமாகும்போது, அதற்கேற்ப நீர்விடுவது அதிகரிக்கப்படுகிறது. வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் இவற்றில் விடப்பட்ட நீரின் அளவு 24—6—1980 முதல் அதிகரிக்கப்பட்டு, தேவைக்கேற்ப முழு அளவு நீர்விடப்பட்டது. கடைக்கோடிப் பகுதிகளையும் நீர் சென்றடைந்துள்ளது. ஆயக்கட்டின் எந்தப் பகுதியிலும் பாசனத்திற்கு நீர்விடுதலில் குறைவு ஏற்படவில்லை. பாசனத்திற்கு தண்ணீர் விடுவது பொதுப் பணித்துறையின் உயர் அதிகாரிகளால் கண்காணிக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, நான் நேற்றுக்கூட மன்னார்குடி சென்றுவிட்டுத்தான் வந்திருக்கிறேன். மன்னார்குடி பகுதியில் காரிக்கோட்டை, மேல்வாசல், சுந்தரக்கோட்டை, நெடுலாக்கோட்டை, பரவாக்கோட்டை, உள்ளிக்கோட்டை, வடுவூர், புதுக்கோட்டை, பைங்காநாடு, திருமக்கோட்டை, பகலையக்கோட்டை, எளவனூர், தென்பரை, ராதாநரசிம்மபுரம் ஆகிய இத்தனை ஊர்களுக்கும் தண்ணீர் பாயவில்லை. அதேபோன்று பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரவர்களுடைய தொகுதியிலுள்ள உலையகுண்டம், கன்னியகுறிச்சி, சளிச்சாங்கோட்டை, வாராஜிக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் பாயவில்லை. இவையெல்லாம் கடைமடைப் பகுதிகளாக இருப்பதால் இந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் பாய்வது மிகவும் சிரமமானதாக இருக்கின்றது. எனவே இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலைமைகளை மாற்றுவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக கல்லணைப் பகுதிகளில் ஆற்றை அகலப்படுத்துவதற்கும் கல்லணைக் கால்வாய், வடவாறுக் கால்வாய் ஆகியவற்றில் தண்ணீர் அதிகமாகச் செல்வதற்கும் தகுந்த நடவடிக்கையைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மன்னார்குடி தாலுக்காவிலும், பட்டுக்கோட்டைத் தாலுக்காவிலும் பெரும்பான்மையான பகுதிகளுக்கு தண்ணீர் பாயவில்லை என்று சொல்லப்பட்டது. மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் 26-6-1980 அன்று தண்ணீர் விடப்பட்டது என்று சொன்னார்கள். கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் பாயவில்லை, அங்கு இன்னும் சென்று சேரவில்லை என்பதை எடுத்துக்காட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோட்டைகளை எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற காரணத்தாலே அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மக்களிடத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதைப்போக்கும் வகையில் கல்லணைக் கால்வாய், மன்னார்குடி பிரதானக் கால்வாய் ஆகியவற்றை ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் அகலப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசால் எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இந்தத் திட்டம் முடியுமா முடியாதா என்பது கேள்வி அல்ல. இது முடியக்கூடிய ஒன்றுதான். ஆகவே அதைப்பற்றித்தான் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

6. வரவு-செலவுத் திட்டம், 1980-81—வாக்கெடுப்பு.—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 36—பாசனம்.

(ஆ) கோரிக்கை எண். 50.—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

கோரிக்கை எண். 36—பாசனம்

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,33,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் செய்யாற்றின் மேற்குப் பகுதியில் குப்பநத்தம் அருகில் ஒரு அணையைக் கட்ட தேவையான நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,33,22,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கல்லன் : பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சிற்றாறுகளை ஒருங்கிணைந்து பாசனத்திற்குப் பயன்படுத்துவதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,33,22,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, விளவங்கோடு தொகுதி நெய்யாறு இடதுகரைக் கால்வாய் வெட்டி முடிந்தபோது அதோடு வெட்ட வேண்டிய மடிச்சல் கிளைக் கால்வாய் வெட்டப்படாதது பற்றி விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 36— பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,33,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்,''

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவரவர்களே, நாங்குநேரி வட்டம் கொடுமுடியாறு அணைக்கட்டு திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவு செய்தபின் ஒரு ஆண்டுக்குமேலாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதை உடனடியாகத் தொடங்கவேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,33,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சிற்றாறு பட்டணங்கால் நீர்ப்பாசனத் திட்டத்தில், மிடாலம், கீழ்மிடாலம், கீழ்க்குளம், கிள்ளியூர், ஆறுதேசம், பைங்குளம் ஆகிய ரெவின்யூ கிராமங்களுக்குட்பட்ட கடைமடைப் பகுதிகள் பல வருடங்களாக ஒழுங்காக தண்ணீர் கிடைக்கப் பெறாமையால் விவசாயிகளுக்கு ஏற்படும் துயரங்களைத் துடைக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,33,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, மழைத் தண்ணீர் வீணாகக் கடலில் விழுவதை தடுக்கவும், நிலத்தடி நீர் வீணாகாமல் இருக்கவும், ஆத்தூரில் ஓர் அணைக்கட்டு தாமிரபரணி நதியில் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,33,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண். 50.—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 37,69,58,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

1980 ஜூலை 28]

[முற்பகல் 10.40]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் —

> ''மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 37,69,58,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள, வடக்கு, தெற்கு கோடை மேலழகியன் கால்வாயின் லைனிங் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்காமல் காலம் கடத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

> ''மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 37,69,58,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

> ''மானியக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 37,69,58,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

THIRU P. VIJAYARAGHAVAN: Sir, to discuss Policy I move—
"that the allotment of Rs. 37,69,58,000 under Demand No. 50 Capital outlay on Irrigation be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனம் குறித்த இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கான அறிக்கைகள்* மன்றத்தின் உறுப்பினர்களுக்கு அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை இந்த அவையிலே நான் உரையாற்றியதாக ஏற்றுக் கொண்டு, பேரவையின் குறிப்பேட்டிலும் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* *322—330* பக்கங்களின்இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. கே. இராஜா முகமது] [1980 ஜூலை 28

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக் களைக் கூறி, அதை நான் கேட்டதற்கு பிறகுப் என்னுடைய கருத்துக்களை இறுதியாக தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகி கிற காரணத்தினால், இந்த மன்றத்தில் மானியங்களின் மீதான விவாதத்தை துவங்குவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம் குறித்த மானியக் கோரிக்கை மீது நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பாசன மானியக் கோரிக்கை மிக முக்கியமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையிலே தற்போது பாசன அமைப்புகளை விரிவுபடுத்து வதற்காக பல திட்டங்களை வடிவமைத்து வகுத்திருக்கிறார்கள்.

இதிலே பெரிய நீர்ப்பாசனத் திட்டம், நடுத்தர நீர்ப்பாசனத் திட்டம், சிறு பாசனத் திட்டம், வெள்ள நீர்ப் பாசனத் திட்டம் என பல திட்டங்களை வகுத்து அந்த திட்டத்திலே என்னென்ன பணிகள் செய்யப்படுகின்றன என்பதை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தினுடைய நிதி ஒதுக்கீட்டையும் பார்த்து, அந்த நிதி ஒதுக்கீடு சரியான முறை யில் குறிப்பிடப்பட்ட நேரத்திலே மதிப்பீடுகள் தயாரித்து அந்த நிதிஒதுக்கீட்டினை செவ்வனே செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் செய்ததாகத் தெரியவில்லை.

சிறு பாசனத் திட்டத்தின் கீழே கால்வாயை வெட்டுவது அல்லது தோண்டுவது, ஆழப்படுத்துவது, அகலப்படுத்துவது இப்படி பலதரப்பட்ட பாசனத் திட்டங்கள் இந்த சிறு பாசனத் திட்டத்திலே கூறப்பட்டிருக்கின்றன.

நடுத்தர நீர்பாசனத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், கண்மாய்களை சீர்படுத்துவது போன்ற பல திட்டங்கள் சொல் லப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாமே மழைக் காலங்களில் மதிப்பீடுகளை தயார் செய்து அவைகளை ஒப்பந்தக்காரர் களிடத்தில் கொடுக்கிறபோது அந்த வேலைகளை மழைக் காலத்திலே ஆரம்பிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. அப்படி ஆரம்பிக்கப்படுகிற வேலைகள் செவ்வனே நடைபெறுகிறதா என்றால் நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்தில் குற்றச் சாட்டாக கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

1980 ஜூலை 28] *[திரு. த. வேனுகோபால்]*

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

அடுத்து தமிழகத்தினுடைய உணவுக் களஞ்சியம் என்று சொல்லக்கூடிய வகையில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கும் மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். அந்த மாவட்டம் முழுவதும் கிணற்று நீர்ப் பாசனம் தான். கிணறுகளிலிருந்து பம்பு செட் மோட்டார் அல்லது வேறு வகையான ஆயில் என்ஜின்களை வைத்து நீர்ப்பாசனம் செய்து விவசாயம் செய்யக் கூடிய முறையிலே இரண்டாவது களஞ்சியமாக எங்களுடைய வட ஆற்காடு மாவட்டம் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது மாவட்டங்கள்தோறும் நீர்ப்பாசன கருத்தரங்குகள் கூட்டி, அந்தந்த மாவட்டங்களிலே என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்று கருத்துகளைக் கேட்டறிந்து அவைகள் செம்மையாகச் செயல்படக்கூடிய ஒரு நிலை இருந்தது. ஆனால் அதுபோன்று கருத்தரங்குகள் இப்போது மாவட்டங்களிலே நடைபெறுகிறதா என்று பார்த்தால், நடைபெற்றதாகத் தெரியவில்லை நடைபெறவும் இல்லை.

சில ஊராட்சி ஒன்றியங்களிலே தற்போது நீர்த்தேக்கங்கள் அல்லது ஊற்று குட்டைகள் கட்டுவதற்கு ஆங்காங்கே பல அமைப்புகள் தயார் செய்யப்பெற்று சில இடங்களில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. சிலயிடங்களில் நடைபெறவில்லை. ஆகவே அவைகளை துரிதப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை ஒன்றியத்திலே பனையூம்சீம் ஊற்றுக்குட்டைகள் கட்டவேண்டுமென்று மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு அந்தப் பணியைச் செய்வதற்கு எந்த இடம் தகுதியான இடம் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த இடம் வன இலாகாவில் இருப்பதன் காரணமாக வன இலாகாவின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. வன இலாகாவிலிருந்து முறையான அனுமதி பெறுவது என்பது கடினமாக இருக்கிறது. அப்படி அனுமதி கொடுக்கும்போது அந்த இடத்திற்கு ரூ. 5,000, ரூ. 10,000 கட்டவேண்டும் என்று, அரசாங்கம் பணம் கட்ட வேண்டுமென்று வனத் துறை கேட்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து எப்படி பணம் கட்டுவது என்பது சிக்கலாக இருக்கிறது. ஆகவே நல்ல இடமாக இருந்தால், அமைப்பான இடமாக இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு போட்டு உடனடியாக அந்த நிலம் யாருக்குச் சொந்தமானதாக இருந்தாலும் சரி, அது வன இலாகாவிற்குச் சொந்தமாக இருந்தாலும் சரி அந்த இடங்களில் ஊற்றுக் குட்டைகள் கட்ட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயக் கிணறுகள் வெட்டும் விஷயத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் பல ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாயக் கிணறுகள் தோண்டப்பட்டு ஒரு கிணற்றிலிருந்து ஐம்பது ஏக்கர், நூறு ஏக்கர் நீர்ப்பாசனம் பெறும் வீதத்தில் சமுதாயக கிணறுகள் தோண்டப்பட்டு வந்தன. ஆனால் இன்றைய தினம் உள்ள ஆட்சியில் என்ன நடைபெறுகிறது என்றால் ஒன்றும் நடைபெறவில்லை. ஆகவே ஏற்கனவே சமுதாயக் கிணறுகள் தோண்டப்படாத ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாயக் கிணறுகள் தோண்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்மாய்கள், ஏரிகளைப் பொறுத்தவரையில், காட்டுகளுள் சில ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளிலிருந்து கிராமங்களில் உள்ள வயல்களுக்கு நீர் பாய்கிறது. அந்த ஏரிகள் சீர்கெட்டுக் கிடப்பதால் அவற்றை செப்பனிடுவதில் வன இலாகாவும் பொறுப்பேற்றுச் செய்வதில்லை, ஊராட்சி ஒன்றியங்களும் பொறுப்பேற்று செய்வதில்லை, பொதுப் பணித் துறையும் பொறுப்பேற்றுச் செய்வதில்லை, இப்படி பல சங்கடங்கள் இருக்கின்றன. அந்த ஏரிகளிலிருந்து நல்ல முறையில் நீர் பாய்ந்தால்தான் கிராமங்களில் உள்ள நிலங்கள் அதனால் பலனடைய முடியும். கிராமங்களில் உள்ள நிலங்களுக்கு அந்த ஏரிகளில் இருந்துதான் தண்ணீர் பாய்கிறது. ஆகவே அந்த ஏரிகளை பழுதுபார்த்தால்தான் விவசாயத்திற்கு வேண்டிய நீரைப்பெற்று விவசாயத்தைப் பெருக்க முடியும். என் தொகுதியில் சேகடலூர், காமச்சந்தலில் வன இலாகாவைச் சார்ந்த ஒரு ஏரி இருக்கிறது. அதிலிருந்து 150 ஏக்கர் அளவிற்கு தண்ணீர் பாய்கிறது. அந்த ஏரியைச் செப்பனிட யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்று இன்றுவரை தெரியவில்லை. அப்படிபட்ட ஏரிகள் செப்பனிட முடியாமல் இருக்கின்றன.

விவசாயிகள் நிலவள வங்கி மூலம் கூட்டுறவுத் துறையில் கிணறுகள் வெட்ட கடன்கள் பெற்று ஆங்காங்குள்ள கிராமங்களில் கிணறுகள் வெட்டி அந்தக் கிணறுகள் தண்ணீர இல்லாத நிலையில் பாறைகளாக இருக்கின்றன. கிணறு வெட்டி அதில் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு விவசாயம் செய்து அதன்மூலம் கிடைக்கிற வருமானத்தைக் கொண்டு கிணற்றுக் கடனை அடைக்கலாம் என்று நினைத்த விவசாயிகள் வெட்டியுள்ள கிணறுகள் பாறைகளாக இருப்பதால், அப்படி பாறையாக உள்ள கிணறுகளாக இருந்தால் அது எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி அல்லது எந்தக் கிராமமாக இருந்தாலும் சரி கிணறுகள் வெட்டி தண்ணீர் இல்லாமல் பாறையாக இருந்தால் அவர்கள் கிணற்றுக்காக வாங்கிய கடன்களை எல்லாம் அறவே ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரத்து வாய்க்கால்கள் அந்தக் காலத்தில் குடிமராமத்து வேலையில் கிராமங்களில் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது அப்படிச் செய்வது இல்லை. காரணம், கிராமத்தில் உள்ள எல்லோரும் சேர்ந்து நீண்டதூரக் கால்வாய்கள் வெட்டி ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவருவது இப்போது அது இயலாமல் இருக்கிறது. ஆகவே ஏரிகளுக்கு உள்ள வரத்துக்கால்வாய்களை—அது எந்த இலாகாவைச் சேர்ந்ததாக இருந்தாலும், சரி பொதுப்பணித் துறையாக இருந்தாலும் சரி அல்லது ஒன்றியமாக இருந்தாலும் சரி, எந்த இலாகாவாக இருந்தாலும் சரி, முதலாவதாக வெட்டித் தரவேண்டும். மழை பெய்தால் உடனடியாக கண்மாய்களுக்கு நீர் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கண்மாய்களுக்கு நீர் வந்து கிராமங்களுக்கு தண்ணீர் சரியாக வருவதற்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பழைய வாய்க்கால்களோடு புதிய வாய்க்கால்களை வெட்டித்தர வேண்டும். கிராமங்களில் ஆங்காங்கே புதிய ஏரிகள் அமைத்துதர வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டம் நீர்ப்பாசனத்திற்கு மழையையே நம்பியிருக்கும் மாவட்டமாகும். அங்கு கிணற்று நீர் ஆண்டுக்காண்டு பாதாளத்திற்கு பற்றாக்குறையாக போய்ச் சேருகிறதே தவிர நீர் மேல் மட்டத்தில் இல்லை.

[முற்பகல் 10-50]

ஆகவே, புதிய ஏரிகளை ஆங்காங்கே ஏற்படுத்தினால், நீர் மட்டம் மேலோங்கி இருக்கும்; கிணறுகளிலே அடிநீர் மட்டம் நல்ல முறையிலே இருக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மலைப் பகுதியில் வாழும் கல் நாட்டுப் புதுவூர் கிராமத்தில் புதிய ஏரி கட்டித் தர வேண்டும் என்று எல்லாத் துறைகளுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மனுக்கள் அனுப்பப்பட்டும் இதுவரையிலும் அதன்பொருட்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, நீர் வசதியில்லாத ஏரிகளில் எல்லாம், புதிய நீர் வரத்துக் கால்வாய்கள் வாய்க்கால்கள் வெட்டித் தர வேண்டும். இது முக்கியமான பணியாக இருக்கிறது. சில ஏரிகளில் நீர் வரத்து வாய்க்கால்கள், இருக்காது. அப்படி இல்லையே என்று அரசாங்கம் சிந்திக்கக் கூடாது. நீர் வரத்து வாய்க்கால்களை எந்த வகையிலே ஏற்படுத்தித் தர முடியுமோ, அந்த வகையிலே புதிய நீர் வரத்து வாய்க்கால்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

அதோடு, கிராமங்களிலே உள்ள பழைய குளங்கள் தற்போது தூர்ந்து போன நிலைமையிலே இருக்கின்றன. அவைகளையெல்லாம் செப்பனிட வேண்டும். ஏன் செப்பனிட வேண்டும் என்று சொல்கிறேன் என்றால், அப்போதுதான் நீர் தேங்கி நீர் மட்டம் உயர்ந்து இருக்கும், ஆகவே, அப்படிப்பட்ட குளங்களை எல்லாம் தூர் வார வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு நீர் ஏற்ற சங்கங்கள் என்று இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே, அதற்கு பல மதிப்பீடு போடப்பட்டு, கட்டிடங்கள் கட்டி, அந்த நீர் ஏற்ற சங்கம் செயல்படாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கொல மஞ்சனூர் ஊராட்சியில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடம் கட்டி பொருள்கள் சேகரிக்கப்பட்டு, நீண்ட நாட்களாக அந்தச் சங்கம் செயல் படாமல் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

அடுத்து, சாத்தனூர் அணையில் மேல் மட்டக் கால்வாய் பற்றி சமீபத்திலேகூடநான் கேள்விகேட்ட நேரத்திலே, அமைச்சர் அவர்கள் இந்த மேல்மட்டக் கால்வாய் பற்றி தற்போது ஆய்வில் இருக்கிறது; ஆய்வு முடிந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார்கள். அந்த வேலையை உடனடியாக செய்தால் சாத்தனூர், கோவிந்தப்பட்டு, தரடாப்பட்டு, மேல் செட்டி பட்டு, கீழ் செட்டிபட்டு, மெய்யூர், மேல்கச்சிராப்பட்டு போன்ற பல கிராமங்கள் பயனடைவதோடு, சமுத்திரம் ஏரியின் வழியாக நந்தன் கால்வாயில் தண்ணீர் பயன்பெறும், திருவண்ணாமலையில் குடிதண்ணீர் பிரச்சினை தீரும்; அங்குள்ள மக்களும் நல்ல பயனடையக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த வேலைகளைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

[மணியடிக்கப்பட்டது]

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81ஆம் ஆண்டு நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு எனது நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 2½ ஆண்டு காலமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்கிவந்த அரசு விவசாயிகளுக்கு மறுமலர்ச்சிக்குத் தேவையான பல நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி இருப்பதை நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டிலே பசுமைப் புரட்சித் திட்டத்தின் மூலம், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் நல்ல முறையிலே பயனடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த நிதி நிலை அறிக்கையிலே நீர்ப்பாசன மானியக் கோரிக்கையிலே நல்ல

முறையிலே, சிறந்த முறையிலே, திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு எனது உளங் கனிந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய பகுதியிலே இருக்கிற குறிப்பாக பழனியில் குதிரை ஆறு, வேடசந்தூர் பகுதியில் குடகனாறு திட்டங்கள் ஆகியவற்றை வருகின்ற ஆண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டங்கள் தீட்டியிருப்பதை நான் மட்டுமல்ல; அந்தப் பகுதியில் இருக்கிற அத்தனை மக்களும் பாராட்டுகிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியினை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் கிரவுண்ட் வாட்டர, சப் சாயில் வாட்டர் முடிந்த வரையில் நல்லமுறையில் பயன் படுத்தப்பட்டிருக்கும் நிலையைக் காண்கிறோம். அதே நேரத் தில் அண்டை மாநிலமான கேரளத்தை எடுத்துக் கொண்டால், அங்கே ஒரு மில்லியன் ஹெக்டா மீட்டா தண்ணீர் சர்ப்ளஸ் ஆக—தேவைக்கு மேல் அதிகமாக இருந்து வீணாகக் கடலில் சென்று விழுந்து கொண்டிருக்கிறது என்பதை அறிகிறோம். அந்த ஒரு லட்சம் ஹெக்டா மீட்டர் தண்ணீரைக் கொண்டு 25 லட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்ய முடியும். 25 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறக் கூடிய அளவுக்கு கேரளத்தில் நிலங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த அளவில் வீணாகச் சென்று கடலில் வீழுகிற தண்ணீரில் ஒரு பகுதியை தமிழகத்திற்குத் திருப்பி விடும் முயற்சியை தமிழக அரசு எடுத்துக் கொள்ளு மானால் கிட்டத்தட்ட பத்து லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற—வறண்ட பகுதி வளமான பாசனப் பகுதியாக மாற இடம் இருக்கிறது. அந்த அளவில் நம் அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கேரள மாநிலத்தில் நீர் நிலையை நல்ல முறையில் விநியோகிப் பதற்காக 'சென்டர் ஃபார் வாட்டர்' மானேஜ்மெண்ட் டெவ லப்மெண்ட்' என்ற நிறுவனத்தை நிறுவி தண்ணீர் விநியோகத் தைச் சீரான முறையில் நடத்தி வருகிறார்கள். பத்து கோடி ரூபாய் மூலதனம் என்று சொல்லுகிறார்கள். இதுபோன்ற திட்டத்திற்காக ஸ்வீடன் நாட்டு உதவி ஒன்றரைக் கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். அதே உதவியை நாமும் பயன்படுத்தி இங்கேயும் நீர்நிலைகளிலிருந்து சரியான முறையில் விநியோகம் செய்ய 'சென்டர் ஃபார் வாட்டர் மேனேஜ்மெண்ட் டெவலப்மெண்ட்' என்ற நிறுவனத்தை இங்கேயும் நிறுவ வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

மத்திய அரசின் நிர்வாகத்திலுள்ள 'கமாண்ட் வேலி டெவலப் மெண்ட் அத்தாரிடி' என்ற நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இதனுடைய முக்கியமான பணி நதிகளின் படுகை வளர்ச்சித்

திட்டம் ஆகும். இது மத்திய அரசால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதை மாநில அரசு செயல்படுத்த வேண்டுமென்று விரும்பினால் மத்திய அரசு 50 விழுக்காடு உதவித் தொகையாகத் தருவதாக தெரிய வருகிறது. அந்த அளவில் காவிரி சீர்திருத்தத்திற்கும், வைகை மேம்பாட்டுத் திட்டத்திற்கும் 'கமாண்ட் வேலி டெவலப்மெண்ட் அத்தாரிடி'யைப் பயன்படுத்தி அந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி 'காவிரி வேலி டெவலப்மெண்ட் அத்தாரிடி', 'வைகை வேலி டெவலப்மெண்ட் அத்தாரிடி' என்ற நிறுவனங்களை ஏற்படுத்தி பயன்படுத்திக் கொள்ள அரசு பரிசீலிக்கவேண்டும்.

இப்போது இருக்கிற நீர்ப்பாசன முறையின் குறைபாட்டை நீக்க ஒரு திட்டம் கோவை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதாகக் கேள்விபடுகிறேன். கிணறுகளிலிருந்து வாய்க்கால்கள் மூலம் தண்ணீர் சென்று செடிகளுக்குப் பாய்வதால் ஏற்படும் வேஸ்டேஜைத் தவிர்க்க குழாய்களின் மூலம் தண்ணீரை விடுகிற முறைதான் அது. இது தற்போது கோவையில் செயல்பட்டு வருகிறது. இதை மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தினால் விவசாயிகள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும். இதனால் விளைச்சல் அதிகமாகிறது, உரம் குறைகிறது. களை ஏற்படுவதில்லை. இதுபோன்ற பல நல்ல பலன்கள் இருப்பதாக கோவையில் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இந்த முறையை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டத்தை அரசு நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் இந்த அரசின் அணுகுமுறையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மிக முக்கியமான பிரச்சினை—'சென்சேஷனல் இஸ்யூ' என்று சொல்வார்களே, அது போன்ற பிரச்சினை, பல மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை, அதில் ஒரு சுமுகமான உடன்பாடு காண வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு நம்முடைய அரசு கேரள அதிகாரிகளோடு கேரள அமைச்சர்களோடு அடிக்கடி கலந்து பேசி அதற்கான உடன்பாடு ஏற்படுவதற்கான நிலைமைகளை ஏற்படுத்தி வருவதை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பழனி வட்டத்தில் வரதமாநதி அணைக்கட்டு இருக்கிறது.

[முற்பகல் 11-00]

மழை பெய்தால் அதிலே சில மணி நேரத்திலேயே நீர் நிரம்பி விடுகிறது. ஆகவே, அதற்கு மேலே ஒரு அணையைக் கட்டினால், —அதற்காக ஒரு செயற் குறிப்பு அரசிடம் இருப்பதாக நான் அறிகிறேன்—ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டினால் இன்னும்

10 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக பாசன வசதி கிடைக்கும் என்ற வாய்ப்பு இருப்பதால் அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஒட்டன்சத்திரம் தொகுதியிலே சில திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். ஒட்டன்சத்திரம் தொகுதி, பெரியார் மாவட்டத்தையும், கோவை மாவட்டத்தையும், திருச்சி மாவட்டத்தையும் இந்த மூன்று மாவட்டங்களையும் இணைக்கின்ற எல்லைக்கோட்டிலே அமைந்திருக்கிற தொகுதி யாகும். அது பொருளாதாரத்திலே பின்தங்கியிருக்கிற பகுதி யாகும். இன்னும் சொல்லப் போனால் இங்கே இருக்கின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களேகூட, ஒட்டன்சத்திரம் தொகுதி தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிறதா, அல்லது திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறதா என்று என்னிடமே கேட்கிற அளவுக்கு பின் அடைந்த நிலையிலே இருக்கிறது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் துறையிலே மதுரை மாவட்டம் பின் தங்கிய பகுதி என்று மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதே நேரத்திலே நம்முடைய மாநில அரசாங்கம் ஒட்டன்சத்திரம் தொகுதியை இண்டஸ்ட்ரியலி பேக்வர்ட் என்று அறிவித்தால் அங்கே தொழில்கள் வளருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அங்கே தொழிற்சாலைகள் என்பதே கிடையாது. நம்முடைய மதிப் பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சர் அவர்கள் அங்கே தீப்பெட்டி தயாரிக்கின்ற ஒரு தொழில் மையம் ஏற்படுத்துவதற்கான நிலைமையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே அதுதான் முதல் தொழிற்சாலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை இண்டஸ்ட்ரியலி பேக்வர்ட் என்று அறிவித்தால் அங்கே பல தொழிற்சாலைகள் உருவாகும் வாய்ப்பு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, நம்முடைய மாநிலத்திலே பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், ஐ.ஆர்.டி.பி., எஸ்.எப்.டி.பி., ஏ.என்.எம்., இப்படி எந்தத் திட்டமாக இருந் தாலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாக இருந் தாலும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமாக இருந் தாலும், தீவிரப்படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டமாக இருந் தாலும், எந்தத் திட்டத்திலேயும் ஒட்டன்சத்திரம் இதுவரை சேர்க்கப்படவில்லை. இந்த அளவுக்கு பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற ஒட்டன்சத்திரம் பகுதியிலே நீர்ப்பாசனத் திட்டங் களை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதற்காக சில திட்டங்களை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பழனி பகுதியிலே பாலாறு பொருந்தலாறு தண்ணீரை, மழைக்காலத்திலே அதிகமாகத் தண்ணீர் வருகிறது—தொப்பம் பட்டிப் பகுதிக்குக் கொண்டு வந்தால் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் வறுமை நீங்கி அவர்கள் வளம் பெற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, பாலாறு பொருந்தலாறு திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, பரப்பலாறு அணைத் தண்ணீரை சத்திரப்பட்டிக்கு அருகே உள்ள கருங்குளத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்தால் அதன் மூலமாக சந்திரப்பட்டி பகுதியிலே உளள 10 கிராமங்கள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தையும் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விருப்பாச்சி பெருமாள்குளம் சர்ப்ளஸ் தண்ணீரை வடக்குப் பக்கம் மாறுகால் வைத்தால் அதனால் பல குளங்கள் பயனடையும். அந்தத் திட்டத்தையும் அரசு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நங்காச்சி ஓடையைத் தடுத்து அதன்மூலமாக இடையகோட்டை பக்கத்திலே அணையைக் கட்டினால்,—அதற்கான செயற்குறிப்பு ஏற்கனவே அரசிடம் இருக்கிறது—பல ஏக்கருக்கு பாசன வசதி ஏற்படும். அதையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே நல்லதங்காள் ஓடையை கொத்தயம் பகுதியிலே தடுத்து ஒரு அணையைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது பற்றியும் அரசிடம் செயற்குறிப்பு இருப்பதாக அறிகிறேன். அதைப் பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே இந்தத் திட்டம் கைவிடப்பட்டு இருப்பதாக அறிகிறேன். அப்படியில்லாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாலைபுதூருக்கு தென் மேற்கில் ஒன்பதுகண் பாலத்து ஓடையைத் தடுத்து பெருமாள்குளத்திலே நீரைத் தேக்கினால் ஒட்டன்சத்திரம் தொகுதியினுடைய கீழ்ப் பகுதிகள் பலன் அடைய வாய்ப்பு இருக்கிறபடியால் அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே வெள்ளையன்விலக்கு குளத்திலே—அந்தக் குளத்திற்காக 6, 7 கோடி ருபாய் செலவு செய்யப்பட்டது—உள்ள குறைகளைப் போக்குகிற வகையிலே அதை சீர் செய்தால் அங்கே தண்ணீர் அதிகமாகத் தேங்கக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

இதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பை நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சுந்தரமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதல்வராகப் பணியாற்றிய இந்த மாமன்றத்திலே இந்த மன்றத்தின் உறுப்பினராகஅவருடைய தொண்டனான என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய முகையூர் சட்ட மன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். இன்று அவையின் முன் வைக்கப் பட்டிருக்கிற பாசனத் துறை எண். 30 இன் மீதும், பாசனம் குறித்த மூலதனச் செலவு எண். 50 இன் மீதும் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மேற்கண்ட பொருட்களைப் பற்றி என் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் பிரதான நீர்ப்பாசனங்களாகக் கருதப்படுபவை முறையே (1) ஆற்றுப் பாசனம், (2) ஏரிப் பாசனம், (3) கிணற்றுப் பாசனம். பாசன வசதி என்பது வடிகால் வசதியையும் உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப் பாசனத்தைப் பற்றித் தொலைநோக்குப் பார்வையில் (Perspectiʌe direction) சிந்தித்துச் செயலாக்க வேண்டிய காலத்தில் நாமிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பாசனம் மீதான கோரிக்கையில் 21-வது பாராவில் குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவு கொள்ள வேண்டும். ''புதிதாக எந்தப் பெரிய பாசனத் திட்டத்தையும் மேற்கொள்ள இயலாத அளவிற்குத் தமிழ்நாட்டில் கிடைக்கும் மேற்பரப்பு நீர் அனைத்தும் அநேகமாகப் பயன்படுத்தப்பட்டு விட்டது'' என்று கூறி பாசனத் திட்டத்தை நவீனப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள். இந்த நேரத்திலே பாசன வசதியற்ற விவசாயத்திற்குக் கொண்டு வர வேண்டியநிலப் பரப்புகள் ஏராளமாக உள்ளதை நினைவு கொள்ள வேண்டும். எனவே, ஆற்றுப் பாசனத்தை நவீனப்படுத்துவதால் மட்டுமே போதுமான பாசன வசதியை ஏற்படுத்த முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே, ஆற்றுப் பாசனத்தை நவீனப்படுத்துவதோடு, ஆற்றுப் பாசனத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தில் கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் அல்லது பெருந்தலைவர் காமராசர் வலியுறுத்தி வந்த தென் மாநிலங்களில் ஓடும் நதிகளை இணைக்கும் திட்டம் பற்றி இம்மாமன்றம் நினைவில் கொண்டு பயன் தரக் கூடிய திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேரள நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமீப காலத்தில் குறிப்பிடும்பொழுது, ''தமிழ் நாட்டிற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கொடுக்க முடியாது'' என்று சொல்லியுள்ள நேரத்தில், மேற்கு நோக்கிச் செல்லும் நதிகளை கிழக்கு நோக்கித் திருப்பி விடும் திட்டங்கள் ஆய்வில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது குழப்பத்தை அளிக்கிறது. இந்நிலை சரியாக விளக்கப்படாதது ஏமாற்றத்தை அளிக்கிறது. காவிரிநீர்ப் பிரச்சினையிலும் தீர்வு காணப்படவில்லை. இது ஒரு தொடர்கதையா என்று கேட்க விரும்புகிறேன். எனவே, ஆற்றுப் பாசனத்தைப் பொறுத்த வரையில், ஒரு பெரிய திட்டத்திற்கு (Master Plan) இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். நதிகள் அனைத்தையும் மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து முறையான நீர்ப்பாசனத் திட்டத்திற்கு வகை செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். இதன் மூலம் சில மாநிலங்களுக்கிடையே யுள்ள நதிநீர்ப் பிரச்சினைகள் தவிர்க்கப்படும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆற்றுப் பாசனத்தை அடுத்து நிற்பது ஏரிப்பாசனம். ஏரிப் பாசனத்தைப் பற்றி எண்ணுகின்ற நேரத்தில் எஞ்சி நிற்பது பெருமூச்சுதான். தமிழகத்தில் 37,000 ஏரிகள் உள்ளன. இவைகளில் பெரும்பாலானவை மழை பெய்தால் மட்டுமே நிரம்பக் கூடியவை. மழை பெய்து நீர் நிரம்பினாலும், அந்த நீரைத் தேக்கும் சக்தியுடையதாக இந்த ஏரிகளின் கரைகள் இருப்பதில்லை. பல ஏரிகள் மேடிட்டு, விளைநிலமாகக் கூட ஆகிவிட்ட காட்சியைக் காண முடிகிறது. பல ஏரிகளுக்கு நீர்வரும் கால்வாய்கள் மண் சரிவினாலும், நீண்ட காலமாக மராமத்து வேலை செய்யாததாலும் மேடிட்டு, பயனற்றவையாக உள்ளன. இவைகளை நினைவிற் கொண்டு ஏரிப்பாசனத்தை விரிவுபடுத்த, அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டம் வீராணம் ஏரியை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி அகலப்படுத்த வேண்டும். இதை பல்நோக்குத் திட்டத்தில் கொண்டுவர வேண்டும்.

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழ்க்கொண்டூர் தோண்டக்கால் வாய்க்கால் 1979-ம் ஆண்டு பெய்த பெருமழையின் விளைவால் மண் மேடிட்டுப் பாசனத்திற்குப் பயன்படவில்லை. இந்த வாய்க்காலை வெட்டி கரையைப் பலப்படுத்தித்தர வேண்டும்.

தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் முருக்கம்பாடி கிராமத்தில் உள்ள பெரிய ஏரி மற்றும் சிறிய ஏரி ஆகியவைகளை உடனடியாக ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி அகலப்படுத்தி, கோடிகளைப் புதுப்பித்து, தேவையான மதகுகள் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 28 [திரு. ஆர். சுந்தரமூர்த்தி]

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த விளந்தை ஏரிக்கு தண்ணீர்வரும் வாய்க்காலில், மணலூர்பேட்டை அருகில் முடிவு பெறாத நிலையில் உள்ள சுமார் 300 மீட்டர் நீள தடுப்புச் சுவரைக் கட்டிக் கொடுப்பதன் மூலம் அங்கு அடிக்கடி ஏற்படும் உடைப்புகளையும், அதனால் உண்டாகும் நஷ்டங்களையும் தவிர்க்கலாம். எனவே, இந்தத் தடுப்புச் சுவரைக் கட்டிக் கொடுக்கவும், பிள்ளையார்பாளையம் அருகில் உள்ள இரண்டு உடைப்புகளையும் அடைத்துச் சீர் செய்யவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உளள சித்தாமூர், ஐம்பை கிராம ஏரிகளுக்கு பெண்ணையாற்றிலிருந்து தண்ணீர் வரக்கூடிய கால்வாய்கள் மண் மேடிட்டு நீண்ட காலமாகப் பயன் தரக் கூடிய நிலையில் இல்லை. இதைச் சீர் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிணற்றுப் பாசனத்தை எடுத்துக் கொண்டால், ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம் போன்றே கிணற்றுப் பாசனத்தையும் அரசே பொறுப்பேற்றுச் செயல்படுத்த வேண்டும். இம்முறை விவசாயிகளின் சுமையைக் குறைக்கும். குறிப்பாகச் சொன்னால் அரசு, விவசாயிகளுக்குக் கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகள் அமைக்கக் கடனுதவி அளிக்கிறது. இவ்வாறில்லாமல், ஆற்றுப் பாசனமும் ஏரிப் பாசனமும் இல்லாத இடங்களில் அரசே ராட்சசக் குழாய்க் கிணறுகள் மற்றும் கிணறுகளை ஏற்படுத்தி பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இம்முறையின் மூலம் விவசாயிகள் கடன்காரர்களாக்கப்படுவதையும், பொறுப்புகளை விவசாயிகளின் தலையில் சுமத்துவதையும் தவிர்க்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

கிணற்றுப் பாசனங்களைப் பெருக்கும்பொருட்டு மின்சார மோட்டார்களுக்கு மின்னிணைப்புகள் உடனுக்குடன் கிடைக்க வகை செய்யவேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன். இந்த மின்சார வாரியத்தில் உள்ள நடைமுறை சங்கடங்களைப் போக்கி துரிதமான மின் இணைப்புக்கு வழிசெய்ய வேண்டும். மற்ற துறைகளைக் காட்டிலும் விவசாயத் துறையில் உள்ள மின்சார சப்ளைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொன்னால், தென்னாற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முருக்கம்பாடி கிராமத்தில் உள்ள மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்படவில்லை. உடனடியாக மின் இணைப்பு கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசனத்தில் பிரதானமாகிய வடிகால் வசதியையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக வீராணம் ஏரி ஆயக் கட்டுப் பகுதிகளில் உள்ள வடிகால்கள் சீரழிந்து விட்டன. சில இடங்களில் வடிகால் வாய்க்கால்களே இல்லை. எனவே, இந்த ஆயக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த திருநாறையூர், சேதியூர், சாக்காங்குடி, ஆயப்பேட்டை, தாதம்பேட்டை ஆகிய கிராமங் களில் வடிகால் வசதி ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான இருபோக நன்செய்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த ஆயக் கட்டுப் பகுதியில் குறுவை அறுவடையின்போது சிறு மழை ஏற்பட்டால் கூட அனைத்து மகசூல்களும் நீரில் மூழ்கி சேத மடைந்து விடுகிறது. கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயி மீண்டும் மீண்டும் கடனாளியாகிறான்.

தென்னாற்காடு மாவட்டம் கீரப்பாளையம் ஊராட்சி ஒன் றியத்தில் உள்ளது பொன்னேரி. இந்த ஏரிக்கு மேல் பகுதியில் உள்ள நிலங்களுக்கு வடிகாலாகவும், கீழ்ப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு பாசனமாகவும் அமைந்துள்ள ஏரியை நிலமாக மாற்றி விட்டனர். ஏரி சிறுத்து வடிகாலுக்கும் பயன்படவில்லை, பாசனத்திற்கும் பயன்படவில்லை. எனவே, அரசு உடனடியாக இதில் கவனம் செலுத்தி, பொன்னேரியை சர்வே செய்து ஆழப் படுத்தி, கரையை உயர்த்தி அகலப்படுத்த வேண்டும்.

துரிஞ்சலாற்றிலிருந்து பனமலை ஏரிக்கு வெட்டப்பட்ட நந்தன் கால்வாய் திட்டத்தின்கீழ் சிறிது வேலையும் நடந்திருக் கிறது. அந்தத் திட்டம் இப்பொழுது கிடப்பில் போடப் பட்டுள்ளது. அந்தத் திட்டம் சுமார் 30 கிராமங்களுக்குப் பயன்தரக் கூடியதால், அரசு இத்திட்டம் பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ரெவின்யூ சேனல்ஸ் என்ற பாசன வாய்க்கால்கள் தொடர்ந்து குடிமராமத்து திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படாத தால் அனைத்துக் கால்வாய்களையும் பாசனத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்து பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக, பாசன வேலைகள் பி.டபிள்யூ.டி-யின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. பாசன வாய்க்கால்களை வெட்டு வதும், ஏரிகளை ஆழப்படுத்துவதும், கரைகளை உயர்த்துதல் அல்லது அகலப்படுத்துதல் மற்றும் கரைகளில் ரிவிட்மென்டு கட்டுதல் போன்ற வேலைகள் தண்ணீர்வரும் நேரங்களில் குறிப்பாக சில மணி நேரங்களுக்கு முன்பாகவும் செய்யப்படு கின்றன. ஒருபுறம் தண்ணீர் ஓடுவதும் மறுபுறம் வேலை நடந்து கொண்டிருக்கும் நிலையிலிருப்பதும் வியப்புக்குரியது. இப்படிப் பட்ட வேலைகளை அரசு ஊக்குவிக்கக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பி.டபிள்யூ.டி. என்று சொல்லப்படுகிற பொதுப்பணித் துறை பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மென்ட் என்ற மிகப் பிரபலமான பெயரை மக்கள் மத்தியில் பெற்றுள்ளது. அரசு செலவிடும் தொகையில் பெரும் பகுதியை இத்துறை செலவிடுகிறது. இத்துறையே மேற்பார்வையையும், பணப் பட்டுவாடாவுக்குமான மிருக அதிகாரத்தையும் பெற்றுள்ளதால், விழுக்காடு முறையில் (பர்சன்டேஜ் பேசிஸ்) லஞ்ச ஊழல் மலிந்துள்ள காட்சி வேதனைக்குரியது. இதனைப் போக்க கான்ட்ராக்ட் முறையை ஒழித்து, பொதுப்பணித் துறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

1978-79ஆம் ஆண்டு பாசனங்கள்—கட்டடங்கள் மீதான கோரிக்கையின்மீது பேசிய அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்கள் நிலப் படை என்ற ஒன்று அமைக்கப்பட இருப்பதாகவும், அதற்கான குழு ஒன்றைத் தலைமைச் செயலாளரின் தலைமையில் அமைத்துள்ளதாகவும் கூறியிருந்தார். அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? அந்தக் குழுவின் நடவடிக்கைகள் என்ன? இப்போதைய அரசே அப்பொழுது ஆட்சி புரிந்ததால், இந்த அரசுதான் மேற்கொள்கின்ற திட்டங்களைத் தெளிவாக தொலை நோக்குப் பார்வையில் சிந்தித்து மேற்கொண்டு செயல்படுத்த முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடி உயரக் கோனுயரும் என்பதால், இந்த அரசாங்கம் நன்மதிப்பையும் புகழையும் பெற வேண்டும் என்றால் பாசனத் துறையில் ஆழ்ந்த கவனம் செலுத்தி திட்டங்களையிட்டும் செயல்படுத்த வேண்டும். மனித உடலுக்கு இரத்தம் எந்த அளவிற்கு ஆதாரமாகத் திகழ்கிறதோ அந்த அளவிற்கு நம் நாட்டில் பிரதான தொழிலாம் விவசாயத்திற்கும் பாசனம் முக்கியம் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல்உயர குடி உயரும், குடிஉயர கோன் உயர்வான் என்ற நம் முன்னோர்கள் சொன்னதற்கு இணங்க, இன்றைய தினம் நாட்டின் நிலைமை அந்த நாட்டின் நீர்ப்பாசனத் திட்டங்கள் எவ்வளவு மேம்பாடு அடைகின்றதோ அதற்கு உறுதுணையாக அந்த நாட்டினுடைய திட்டங்கள் செயல்படுவது ஏதுவாக இருக்கும் என்ற கருத்தினைக் கொண்டு இந்த $4\frac{1}{2}$ கோடி மக்களின் தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய அரசில் நீர்ப்பாசனத் துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவாகவே, தமிழகத்திலே பல நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், தமிழகம் அனைத்திலும் உள்ள மலைப் பகுதியில் இருந்து மழைக்காலங்களால் வெளிவரக்கூடிய வெள்ள நீரைத் தடுத்து நிறுத்தி அதைத் தேக்கிவைப்பதற்கான எந்த திட்டத்தையும் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். இதிலே நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். அமெரிக்காவில் அரிஜோனா மாநிலத்தில், கொலராடோ நதியில் ஒரு அணை கட்டப்பட்டது. அந்த அணையைக்கடந்த 40 ஆண்டுகளாக திறந்து விடாமல் நீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதைப்போன்று மழைக்காலங்களில், வெள்ளக்காலங்களில் கிடைக்கக் கூடிய அந்த நீரைத் தேக்கி வைப்பதற்காக பல நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நாம் உணவைச் சேமிப்பதுபோல, ஆங்காங்கு கிடைக்கின்ற தண்ணீரை நீண்ட காலத்திற்குச் சேமித்துவைத்தால் வறட்சிக்காலங்களிலும், மழை இல்லாத காலங்களிலும் அவற்றைப் பயன்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமது நாட்டைப் பொறுத்தவரையில் அமெரிக்காவைப் போல நவீன ஆயுதங்களையோ, ஜெர்மனியைப் போல விஞ்ஞான சாதனங்களையோ, ரஷ்யாவைப் போல கனரக இயந்திரங்களையோ வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலை இருக்கிறது. நம்மைப் பொறுத்த வரையில், நம்மால் முடிந்த அளவுக்கு நாம் உணவை நல்ல முறையில் விளைவித்து, அரிசி போன்றவைகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் சூழ்நிலை இருக்கிறது. எனவே அரிசி உற்பத்தியைப் பெருக்க, அதிகமாக்க மற்றமாநிலங்களைவிடஅதிகமானதிட்டங்கள் தீட்டஇன்றுமுயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் இருக்கிற நீரைச் சிறந்த முறையிலே சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் பல திட்டங்களைப் போட்டு அதை ஆய்வு செய்வதற்கு ''Centre for Water Management and Development'' என்ற ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 10 கோடி ரூபாய் மூலதனத்தில் செயல்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக ஒரு தனி டைரக்டர் போட்டு ஆராய்ச்சியை நடத்தி இருக்கிறார்கள். அதைப்போன்ற ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்தி கோவை, மதுரை விவசாயப் பல்கலைக் கழகங்களோடு இணைத்துச் செயல்படுத்தினால் நீண்டகால நீர்ப்பாசனத் திட்டங்களை உறுதி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய போடி தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். என்னுடைய தொகுதி தொழில் வளர்ச்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். பெரியார் ஆறு பக்கத்திலே இருந்தாலும், அது பாசனத்திற்கு எந்தவிதமான வசதி வாய்ப்பும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. மழைக்காலங்களில் மலைப்பகுதியில் இருந்து வருகின்ற மழை நீரைக் குளங்களில் தேக்கிவைத்தால் நலமாக இருக்கும். அங்கே ஒரு போகம்

கூட விளையாத நிலையில் இருக்கிறது. மக்கள் மிகவும் சிரமப் படுகிறார்கள். எனவே பெரியார் நதியில் இருந்து உயர் மட்டக் கால்வாய் மூலமாக மேலச் சித்தலச்சேரி, பல்லவராயன்பட்டி, டி. சித்தலச்சேரி, டொம்புச்சேரி வழியாகத் திருப்பிப் பயன் படுத்தினால் எங்கள் பகுதிக்கும், கம்பம், பெரியகுளம், தேனி போன்ற இந்த 4 தொகுதிகளுக்கும் பயன்படும் நிலை இருக் கிறது. அதன் மூலம் 25,000 விருந்து 50,000 ஏக்கர் வரை புன்செய் நிலம், மானம் பார்த்த பூமி, விளையும் வாய்ப்பு இருக் கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

என்னுடைய தொகுதியில், போடி நகரைச் சுற்றியுள்ள குளங்களில் ஏராளமான உள்வாயில்கள் பலரால் ஆக்கிரமிக்கப் பட்டு இருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்த அரசுஅதிகாரிகள் பலமுறை நடவடிக்கை எடுத்தும், அங்கே உள்ள நிலச்சுவாந்தார் கள் அரசு அதிகாரிகளைப் பயமுறுத்தியும், விவசாயிகளைப் பயமுறுத்தியும் அந்த நடவடிக்கைகளைத்தடுத்து வருகிறார்கள். ஆகவே, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிற குளங்களின் உள் வாயில்களை சீர் செய்யவும், செப்பணிடவும், ஆக்கிரமிப்பு களை அகற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊருக்கு மேற்கே பல குளங்கள் தூர்ந்து போய் இருக் கின்றன. அந்தக் குளங்களை எல்லாம் புதிதாகச் சீரமைத்து வைத்தால், மழைக் காலங்களில் மேற்குத் தொடர்ச்சிமலையில் இருந்து வரும் தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும் என்று கூறி, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி உரையை முடித் துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாசன மானியத்தின் மீதும், பாசன மூலதன மானியத்தின் மீதும் மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன் வருகிறேன்.

முதன்முதலில் எனக்கு ஒரு விளக்கம் தேவைப்படுகிறது. இங்கே அவை முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கப் புத்த கத்தில் காணப்படுகிற ஒரு கருத்தைப் பற்றி விளக்கம் பெற விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தில் 3-வது பக்கத்தில்— 5-வது பாராவில் ''இதன் ஆயக்கட்டை நன்செய்யிலிருந்து புன்செய்யாக மாற்றுவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியது. ''என்று குறிப்பிடப் பட்டு இருக்கிறது. எனது அறிவில் பட்டவரையில் புன்செய் நிலங்களைத்தான் நன்செய்நிலங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய உத்தரவிட்டு இருக்கிறது என்று கேட்டு

இருக்கிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பில் இருக்கிற கருத்தைப் படிக்கிறபோது எங்கோ கோளாறு ஏற்பட்டு இருக்கிறது போல் தெரிகிறது. இந்த முக்கியமான டாசனத் துறை கொள்கைக் குறிப்பைக் கொடுக்கிறபோது அதை உறுப்பினர்கள் படிக்கிற போது நல்ல முறையில் இருப்பதற்கான வகையில் செய்து இருந் தால் பரவாயில்லை. அப்படிச் செய்யாதது மட்டுமல்ல, வேறு அர்த்தம் கொடுக்கிற நிலையில் கூட கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்,

இரண்டாவதாக, பொதுவாக பாராளுமன்றத்திலே எல்லாம் ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் நிர்வாகத் துறைகள் அனைத்திற் குமே ஒரு ஆலோசனைக் கமிட்டி போடப்பட்டு, அங்கேயே பிரச்னைகள் பேசி தீர்க்கப்பட்டு, அதனுடைய அடிப்படையில் கொள்கைகள் சபையில் கொண்டு வந்து வைக்கப்படுவது வழக் கம். அத்தகைய வழக்கத்தை மத்தியிலே ஒவ்வொரு துறையிலும் செய்து வருகிறார்கள். ஆகவே, அத்தகைய ஆலோசனைக் கமிட்டிகளை நம்முடைய மாநில சட்டமன்றத்திலும் கொண்டு வந்தால் பிரச்னைகளை நல்லமுறையில் விவாதித்து நிறைவேற்ற முடியும் என்கிற அடிப்படையில், அப்படிப்பட்ட ஆலோசனைக் கமிட்டிகளை நிறுவவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலிசி நோட்டின் அடிப்படையில் பார்த்தால், நமக்கு தண்ணீர் பற்றாக்குறை என்று தெரிகிறது. தமிழகத்திற்கு காவிரி நீர் பங்கீட்டு மூலமும், கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் மூலமும் மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீர் பெறுவதற்கான நடவடிக்கை கள் எடுப்பதன் மூலமும், அதிகமான நீர் பெறுவதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இதில் நாம் அனுஷ்டிக்க வேண்டிய நிலைமை என்ன என்று சொன்னால், சம்பந்தப்பட்ட அரசாங்கத்தோடு பேசி, சம்பந்தப்பட்ட மாநில மக்களுக்குப் பாதகம் இல்லாமல் முடிவுக்கு வந்து, சுமுகமான முறையில் அதைச் செய்யவேண்டும். அத்தகைய முறையிலே தான் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது என்று அறிகிறேன். அந்த வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார்-வைகை மேம்பாட்டுத் திட்டம் பற்றி இதிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் முடிந்தால்தான் தாமிரபரணி திட்டம் நிறைவேறும். இந்தத் திட்டம் நிறை வேறாமலேயே இருக்கிறது. சிவன் கோவில் நந்தி மாதிரி இந்தத் திட்டம் இருப்பதால் தாமிரபரணி திட்டம் அப்படியே தேங்கி இருக்கிறது. இப்போது ஏறியிருக்கின்ற விலைவாசி காரணமாக ஏற்கனவே திட்டமிட்டு இருந்த 44 கோடி ரூபாய் என்பது இப்போது 70 கோடி ரூபாய் வரைக்கும் போய் இருக்கிற லைமை காரணமாக, அந்தத் திட்டத்தையே கிடப்பில்

போடும் நிலைக்குப் போய் இருக்கிறது. அங்கே வேலை பார்க்கும் தொழிலாளர்களில் பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதனால் போஸ்ட் சாங்ஷன் பெற்றாலும், வேலை இல்லை என்று சொல்லி 300 பேர்களில் 100 பேர்களுக்கு மேல் வீட்டுக்குப் போகச்சொல்லிவிட்டார்கள். அந்தத் திட்டம் எப்போது வரும் என்று தெரியவில்லை. அதனால் நாங்கள் பாதிக்கப்படுகிறோம். பெரியாறு—வைகைத்திட்டம் முடிந்தால்தான் தாமிரபரணி திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று அரசு தரப்பில் சொல்கிறார்கள். தாமிரபரணியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதால் வீணாகிற தண்ணீரைத் தவிர்ப்பதற்காக பல கால்வாய்களுக்கு லைனிங் செய்கிற திட்டத்தை அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது. பல திட்டங்களை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். தாமிரபரணி லைனிங் செய்யும் திட்டம் தயார் செய்யப்பட்டு, சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் திட்டம் கிடப்பில்தான் இருக்கிறது. இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். மதுரையில் இருக்கக்கூடிய இந்தப் பெரியாறு-வைகைத் திட்டம் முடிந்தால்தான் தாமிரபரணி லைனிங் திட்டம் மணிமுத்தாறு லைனிங் திட்டம் செயல்படுத்தப்படும் என்றிருப்பதால் இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றி, தாமிரபரணித்திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்கள்-வடக்கு கோடை மேலழகிய கால்வாய் லைனிங் திட்டம், தெற்குகோடை மேலழகிய கால்வாய் லைனிங் திட்டம், மணிமுத்தாறு பெருங்கால்வாய்த் திட்டம், நதியுண்ணி கால்வாய்த் திட்டம், சேர்வலாறு திட்டம் இன்னும் இது சம்பந்தப்பட்ட பல்வேறு திட்டங்கள் எல்லாம் இந்த பெரியாறு-வைகைத் திட்டத்தினால் நின்றுபோயிருக்கின்றன. சேர்வலாறு திட்ட வேலைகள் துரிதமாக இல்லாததால் மின்சாரத்தைப் பெறுவதிலும் தடை ஏற்பட்டிருக்கிறது. அது எப்படி என்றால், சேர்வலாறு திட்டம் உருவாக்கப்பட்டு வேலை நடக்கிறது. சேர்வலாறு திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது அங்கே ஒரு குடைவு திட்டம் இருக்கிறது. அது மின்சாரம், பாசனம் இரண்டுக்கும் பயன்படும். திட்டம் தீட்டப்பட்டு வேலை நடக்கிறது. ஆனால் ஆமை வேகத்தைவிட குறைந்த வேகத்தில்—இதைவிடக் குறைவாகச் சொல்லமுடியாது—நடந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தைத் துரிதமாகச்செயல்படுத்த வேண்டும். அதனால் சேதாரம் தவிர்க்கப்பட்டு அதிகமான தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வடக்கு கோடைமேலழகிய கால்வாய், தெற்கு கோடைமேலழகிய கால்வாய், நதியுண்ணி கால்வாய், மணிமுத்தாறு பெருங்கால்வாய் (மணிமுத்தாறு டேம், பாபநாசம் டேம்) ஆகியவை ஜூன் 1-ந்தேதி பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டு விவசாய வேலை ஆரம்பிக்க வேண்டும் என்பது அரசாங்க ஆணை. ஆனால் அது காலதாமதம் செய்யப்படுகிறது. இந்த

ஆண்டு கூட ஜூன் 25ந் தேதிதான் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. அதனால் 25 நாட்கள் வேளாண்மைப் பருவம் கெட்டுப் போகிறது. எனவே, ஒவ்வொரு வருடமும் ஜூன் ஒன்றாம் தேதியே தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீணாகின்ற தண்ணீரை பயன்படுத்த பல திட்டங்களை வைத்திருக்கிறோம். மழை பெய்கின்ற காலங்களில் பல இடங்களில் தண்ணீர் வீணாகிறது; காட்டாறு பெருக்கெடுத்து ஓடுகிறது. அதைத் தடுத்து, பயன்படுத்த இருக்கின்ற அணைகளுக்கு மேலேயோ அல்லது கீழேயோ வேறு பல இடங்களில் தடுப்பு அணைகள் கட்டப்படுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல திருநெல்வேலி மாவட்டத்தில் செண்பகவல்லி அணை பழுதுபட்டிருக்கிறது. அதைச் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீரியாறு அணைத் திட்ட வேலைகளை ஆரம்பித்து, அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கோம்பையாறு நீர்த்திட்ட வேலை விரைவிலே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாறு நீர்த்தேக்கத் திட்ட வேலைகளையும் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். ஆத்தூரில் ஒரு அணை கட்டப்படவேண்டும். அதைப்போல கொடுமுடியாறு திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடது கால்வாயை வெட்டி, மடிச்சல் கிளைக்கால்வாயும் வெட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் 4, 5 கிராமங்களில் சுமார் 700 ஏக்கர் நிலம் பாசனம் பெறும், அதைப்போல பள்ளிக்கூட்டம் அணை கட்டப்படவேண்டும். திப்பரப்பு கால்வாய் வேலையையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் பழனியில் வரதமாநதியில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அந்த அணையின் கொள்ளளவுக்குமேல் தண்ணீர் பெருகி வீணாகிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள அந்த அணைக்கு மேலே மேலும் ஒரு அணை கட்ட முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

அடுத்து சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் வேடசெந்தூரில் குடகனாறு அணை உடைந்தது பற்றிப் பேசி இருக்கிறோம். ஆனால் இதுவரை அது சீர் செய்யப்படவில்லை. அதை உடனடியாகச் சீர்செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திண்டுக்கல்லிலே வெள்ளோடு அருகில் அணை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பாசனத் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என்று ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அந்தப் ப்ளான் அமல்படுத்தப்படவில்லை. அரசு உடனடியாக அதை அமல்படுத்த நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வட ஆற்காடு பகுதியில் குடியாத்தம் பக்கத்தில் மோர் தானா என்ற இடத்தில் அணை கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட வேலைகளை நாம் செய்வதன் மூலமாக ஓரளவுக்குத் தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முடியும். ஆகவே, இந்த வேலைகளைச் செய்வதற்கு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது வேளாண்மையில் கிட்டத்தட்ட 30 சதவீதம் முதல் 35 சதவீதம் பகுதிகளுக்குப் பாசன ஏற்பாடுகளை இந்த வகையில் செய்யவேண்டி இருக்கின்றது. மீதம் உள்ள 60, 65 சதவீதம் பாசனத்திற்காக நாம் வானத்தை நோக்கித்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வானத்தை மட்டுமல்ல, நிலத்தடி நீரையும் நாம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. நிலத்தடி நீர் பற்றி நாம் மசோதா கொண்டு வந்த நேரத்தில் அதைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு அவ்வாறு பொறுக்குக்கு முழுவிற்குவிடப்பட்டது. அந்தக் குழு ஆய்வுகளை மேற்கொண்டிருந்த நேரத்தில் சட்ட மன்றம் கலைக்கப்படடு விட்டது. ஆகவே அந்த நிலத்தடி நீர்ப்பிரச்னை அத்தோடு நின்று விட்டது. ஆகவே மீண்டும் அந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்துநிலத்தடி நீர் பற்றி அரசாங்கம் ஒரு திட்டம் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து அணைகளைப் பொறுத்த வரையில் 2 ஆண்டு, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நாம் தூர் எடுக்கவேண்டும். மரங்களும், மண்ணும், கல்லும் விழுந்து பல இடங்களில் 20 அடிக்கு மேலேதான் தண்ணீர் நிற்கின்ற நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட குப்பை கூளங்கள் பெரும்பான்மையான பகுதிகளை அடைத்துவிடுகின்றன. ஆகவே 20 அடிக்கு மேலேதான் தண்ணீர்

இருக்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே அணைகளில் விரைவாகத்தூர் எடுத்து பழுது பார்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாசன வேலைகளைப் பொறுத்த வரையில் ஒரு மோசடி நடப்பதாகக் கருதுகிறேன். அதாவது சாதாரணமாக இந்த வேலைகளை எல்லாம் தண்ணீர் இல்லாத காலத்தில் செய்து முடித்துவிடவேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல் தண்ணீர் வருவதற்கு பத்து நாட்களுக்கு முன்புதான், வேலைகளை ஆரம்பிக்கின்றார்கள். பிறகு வேலை முடிக்கப்பட்டதை சரிபார்க்காமலேயே தண்ணீர் விடக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. இதனால் அந்த வேலையை செக்மெஷர்மெண்ட் செய்யப்பட முடியவில்லை. ஏன் இந்த மாதிரி நிலைமை என்று அவர்களிடம் கேட்டால் அவர்கள் அதிகாரிகள் எங்களுக்கு இப்போதுதான் அனுமதி தந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே இந்த முறைகள் மாற்றப்பட்டு காலாகாலத்தில் அந்தப் பணிகள் முடிக்கப்படுவதற்குரிய அளவிலே முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவை தாலுக்காவில் சர்க்கார் சாமக்குளம் பகுதியில் சின்னவாடப்பட்டியில் 400 ஏக்கர் பரப்பில் ஒரு ஏரியை அமைத்துக்கொள்ளும் திட்டம் கடந்த பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வந்தும் அந்தத் தீர்மானம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்தத் திட்டத்தின் மூலம் 50 கிராமங்களில் கிணற்று நீர் ஊற்றுப்பெருகி குடிநீர் கஷ்டம் தீருவதுடன் தோட்ட விவசாயத்துக்கும் நன்மை தரும். ஆகவே, இத்திட்டத்தை இலாபநட்டம் பாராமல் உடனடியாக அமல் நடத்த வேண்டும்.

அடுத்து பல்லடம் தாலூகா முழுவதும் வறண்ட மேடான பிரதேசம். குடிநீர்ப்பஞ்சமும் இருக்கின்றது. அங்கே விவசாயம் நடத்த முடியாத நிலைமையும் இருக்கின்றது. ஆகவே அங்கே மழைத்தண்ணீர் முழுவதையும் பயன்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து, மதுரைப் பெரியாறு திட்ட வேலைகளையும் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மான்யக் கோரிக்கை மீது பேச எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழகத்தில் நீர்ப்பாசனம் பற்றாக்குறையாக இருக்கிறது என்பது நாம் அறிந்த உண்மை. அதை ஆண்டுதோறும் அனுபவித்து வருகிறோம். வட நாட்டில் கங்கையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி அழிவுகளை ஏற்படுத்துகிற நேரத்தில், தமிழகத்தில் குடிப்பதற்கும் விவசாயத்தை வளர்ப்பதற்கும் தண்ணீர் இல்லை என்கிற நிலையை ஆண்டுதோறும் நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

அதைத் தவிர்க்கிற நோக்கத்தில் கங்கை-காவிரி திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று தமிழக அரசு பலமுறை குரல் கொடுத்தபோதும், இதுவரையில் மத்திய அரசாங்கம் அதற்குச் செவிசாய்க்கவில்லை என்பது உள்ளபடியே பெரும் கவலையை ஏற்படுத்துகிறது. மத்திய அரசு தமிழகத்தினுடைய நீர்ப்பாசனத்திற்கான கோரிக்கையை எந்தவிதத்திலும் நிறைவேற்ற முன் வராதது, அது தமிழகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் நடத்துகிறது என்பது புலனாகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வடநாட்டில் உலவி வரும் இந்தியை தமிழகத்தில் புகுத்துவதற்கு ஆண்டுதோறும் பல கோடி ரூபாயைச் செலவழிக்கும் மத்திய அரசு வடநாட்டில் அதிகமாக வெள்ளம் பெருக்கெடுத்து புரண்டோடி அழிவுகளை ஏற்படுத்திக்கொண்டு கடலில் வீணாகக் கலக்கும் நீரை தமிழகத்திற்குக் கொண்டு வந்து உணவு உற்பத்திக்கு பயன்பெறச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடாது இருப்பது கண்டு வேதனைப்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதைசொல்லி கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தை காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டிருந்த போது நீர்ப்பாசனம் இல்லாத, தண்ணீர் இல்லாத குறையினாலே உணவுப் பற்றாக்குறை, உணவுப் பஞ்சமே ஏற்பட்டது. அந்த நேரத்தில்..........

(பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டு அறிக்கைகள் வீசப்பெற்றன.)

2. ஒழுங்குப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது.

திரு. இல. பலராமன்: *சார் பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கைகள் விழுந்தன. அவைகள் என்ன வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி விசாரிக்கப்பெற்று அதற்கான அறிவிப்புகள் பின்னர் பேரவையில் அறிவிக்கப்படும்.

(6) வரவு—செலவுத்திட்டம், 1980-81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

திரு. வ. சத்தியமூர்த்தி: காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உண்வுப் பஞ்சம் ஏற்பட்டபோது, அரிசிக்குப் பதிலாக எலியை உணவாகக் கொள்ளலாம் திங்கட்கிழமை சோமவாரம் விரதம் இருக்கலாம், செவ்வாய்க் கிழமை வெறும்வாயாக இருக்கலாம் என்றெல்லாம் யோசனை கூறினார்களே தவிர, அவர்களுடைய கட்சி ஆட்சியிலிருக்கும் டெல்லியை வற்புறுத்தி அந்த உபரி வெள்ளநீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தமிழகத்திற்கு நிரந்தரமான பாசன வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற எண்ணத்தில் மத்திய அரசை இதற்காக வற்புறுத்தி வருகிறது.

நான் இங்கிருக்கும் காங்கிரஸ் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய கட்சிக்காரர்கள்தாம் மத்தியில் இப்போதும் ஆளுகிறார்கள். தமிழகத்தின் சார்பாக அவர்களை வற்புறுத்தி தமிழகத்திற்கு அந்த நீர்ப்பாசன திட்டத்தை ஏற்படுத்தித்தர நீங்கள் தமிழக அரசோடு முழுமையாக ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அன்னை இந்திராகாந்தி அம்மையாரை இதற்காக நாம் அனைவரும் வற்புறுத்த முன்வரவேண்டும் என்று அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் 75 சதவீதத்திற்கு மேல் உள்ள குடும்பங்கள் விவசாயத்தையேநம்பி இருக்கிறார்கள். ஆகவே வரவு செலவு திட்டத்தில் இப்போது ஒதுக்கப்பெற்றிருக்கிற தொகையைக் காட்டிலும் அதிக அளவு தொகையை இந்த நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கியிருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

கிராமங்களில் நாம் அவர்களுக்கு அடிப்படை வசதிகள் என்று சில வசதிகள் ஏற்படுத்தித் தரும்போது, கல்வி வசதி, மருத்துவ வசதி, குடியிருப்பு வசதி, மின்சார வசதி, பாதை வசதி ஆகியவைகளோடு நீர்ப்பாசனத்திற்கும் தனியாக திட்டமிட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தோமேயானால், அந்த நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு விவசாயப் பெருங்குடி மக்கள் அதிக அளவு உற்பத்தியைப் பெருக்கி தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்ளும் திறமையையும் தகுதியையும் தாங்களே ஏற்படுத்திக்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1980 ஜூலை 28] *[திரு. வ. சத்தியமூர்த்தி]*

[முற்பகல் 11.40]

ஆகவே தலையாய திட்டமாக நீர்ப்பாசனத் திட்டத்தைத் தமிழக அரசு எடுத்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

காவிரியையும் வைகையையும் இணைத்து அதோடு மட்டுமல்லாமல் தமிழகத்தில் ஓடும் அனைத்து நதிகளையும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தக் கூடிய வகையில்—காவிரியில் வெள்ளம் ஏற்படும்போது தென் பகுதிகளில் உள்ள நாங்கள் மிகவும் வரட்சியால் வாடுகிறோம்—திட்டமிடவேண்டும். தமிழ்நாட்டில் ஒரு பகுதியில் வெள்ளம் ஏற்பட்டு இன்னொருபகுதி வரட்சியால் வாடும் நிலையை நீக்கித் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு நதிக்கும் தொடர்பு ஏற்படுத்தி அதிக வெள்ளம் ஏற்படுகிற பகுதியில் உள்ள உபரி நீரை வரட்சிப் பகுதிகளுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வைகைக் கால்வாய் பல இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு சீரமைக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்று சொல்லப்பட்டது. ஆனால் வைகையில் சிறிதளவு வெள்ளம் ஏற்பட்டவுடன் போடப்பட்ட கரைகள் எல்லாம் வெள்ளத்தோடு கரைந்து ஓடிவிட்டது. இப்போது அந்தக் கரைகள் எங்குமே காணப்படவில்லை. கார் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே நம் அதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்தி வைகையில் மீண்டும் தண்ணீர் வரும்போது கரைகள் போடும் பணியைச் செய்துமுடிக்க ஆயத்தமாவார்கள் என்று கருதுகிறேன்.

எங்கள் முதுகுளத்தூர் மிகவும் பிற்பட்ட பகுதியாகும். முன்பு வைகையிலிருந்து முதுகுளத்தூர் தாலுகாவிற்குக் கால்வாய் வழி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அந்தக் கால்வாயின் பெயர் கூத்தன் கால்வாய், அதற்கு ஒரு சரித்திரமே இருக்கிறது. மேலச்சநல்லூரில் கூத்தன் என்பவர் அங்கே வாழ்ந்து வந்த கோட்டைப் பிள்ளைமார்களிடம் ஒரு சபதம் போட்டுக்கொண்டு-வைகையிலிருந்து கால்வாய்வெட்டி தண்ணீர் கொண்டுவருவேன், நான் கேட்பதைத் தரவேண்டும் என்று ஒரு சபதம் எடுத்துக்கொண்டான். ஊருக்கு ஊர் கூத்தாடி இந்தக் கூத்தன் கால்வாயை பரமக்குடி பார்த்திபனூருக்கு இடையே வைகையில் இருந்து கால்வாய் வெட்டி மேலச் செல்வனூர் கண்மாயில் இணைத்து தண்ணீர் கொண்டு வந்தது கதை. இப்போது அந்தக் கூத்தன் கால்வாய் மங்கிப் போய் விட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அதைப் புதுப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டு பார்த்திபனூருக்கு அருகில் கூத்தன் கால்வாயைத் தொடங்கி காத்தூர் கிராமத்தோடு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது அந்தக் காத்தூர் கிராமத்திலிருந்து

குண்டாறு வரை மூன்று கிலோ மீட்டருக்குள்ளே அந்தக் கால்வாய் புதுப்பிக்கப்படவில்லை. ஆனால் குண்டாற்றிலிருந்து அந்தப் பக்கம் கோட்டையனூரிலிருந்து மேலச்செல்வனூர் வழியாக ஐந்தாறு கண்மாய்களைத் தொடர்புபடுத்தி கூத்தன் கால்வாய் தனியாக இருக்கிறது. அதன் இடைவெளி வெட்டவெளியாக இருக்கிறது. மூன்று கிலோ மீட்டர் தூரம் கூத்தன் கால்வாய் இருந்த இடத்தில் அதைப் புதுப்பித்துக் கொடுத்தால் பழைய நிலைமை மீண்டும் வந்துவிடும். அதோடு பாசனத்திற்கு அதிகத் தண்ணீரும் கிடைக்கும்.

எங்கள் முதுகுளத்தூரில், கடலாடிப் பகுதியில் மலட்டாறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. மழைக் காலங்களில் பெருக்கெடுத்தோடும் நீர் வீணாக கடலில் சென்று கலக்கிறது. ஆண்டுக்காண்டு இதைப் பற்றி இங்கே வருகிற உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறார்கள். அரசாங்கம் திட்டம் போடுகிறது, திட்டம் போடுகிறது என்று பத்திரிகைகளில் செய்தி வந்துகொண்டிருக்கிறதே தவிர ஒரு திட்டமும் அந்தப்பகுதிக்கு வந்து சேரவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னால் சுமார் ஒன்றேகால் கோடி ரூபாயில் ஒரு திட்டம் போடப்பட்டு அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு என்ன இடையூறு வந்தது என்று மக்களுக்கு அறியப்படுத்தவில்லை. அதன் காரணம் என்னவென்று புரியவில்லை. ஆகவே புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இத்திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மலட்டாறிலிருந்து குண்டாறு வழியாக பரளை வழி, கிருதமால் நதி வழியாக தண்ணீர் வந்து அது கடலில் சேருகிறது. ஆகவே கிருதமால் கால்வாயைப் புதுப்பிக்க வேண்டும் என்பார் ஒருவர். பரளைக் கால்வாயை புதுப்பிக்க வேண்டும் என்பார்கள். குண்டாறு கால்வாயைப் புதுப்பிக்கவேண்டும் என்பார்கள். ஆகவே ஒட்டுமொத்தமாக இந்தக் கால்வாய்களை இணைத்து முதுகுளத்தூர் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆகவே, ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு இந்த மூன்று நதிகளையும் இணைத்து, ஒப்பிட்டுப்பார்த்து, எந்த இடத்தில் அணை கட்டினால் நல்லதோ அந்த இடத்தில் அணை கட்டி, எந்த இடத்தில் அணை கட்டினால் முதுகுளத்தூர் தாலுகாவிற்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி கொடுக்க முடியுமோ அந்த இடத்தில் கட்டிமுடிக்கவேண்டும். அதற்காக ஒரு ஸ்கீம் போட்டு குறுகிய காலத்தில் ஒரு ஆண்டிற்குள்ளாக முடிக்கத்தக்க வகையில் ஒரு தனித் திட்டத்தைப் போடவேண்டும். அதற்காக தனி அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த தனி அதிகாரி அந்தப் பகுதி மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை செய்துகொடுப்பதில் உண்மையிலேயே அக்கறை உள்ள அதிகாரியாக இருந்தால்தான் அதற்கான நல்ல திட்டங்களை,

ஒழுங்காகத் தயாரித்துக் கொடுப்பார். ஆகவே, அப்படிப் பட்ட தனி அதிகாரியை அங்கே நியமித்து, பல ஆண்டு கால மாக நீர்ப்பாசன வசதியில்லாத அந்தப் பகுதிகளுக்கு நீர்ப் பாசன வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலசந்தூர் கால்வாய்க்கு கரை இல்லை. 1965ஆம் வருஷம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 900 அடி அக்வயர் செய்து, அந்தக் கண்மாயை நீட்டித்துக் கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மழைக் காலங்களில் அந்த கிராமத்து மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான பைல் இருக்கிறது; ஆனால் அந்த பைல் திடீரென்று காணாமல் போகின்றது. அதற்கு துரித நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். தரக்குடி கண்மாய்க்கு வேண்டிய நிலம் இருக்கிறது. ஆகவே அதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

2. ஒழுங்குப் பிரச்னைகள் (தொடர்ச்சி.)

(ஆ.) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது (தொடர்ச்சி)

திரு. வெ. இராஜசேகரன் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

* **

(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள் யார் பாஸ் கொடுத்தார்கள், யார் எல்லாம் இதற்குப் பொறுப்பு என்று கேட்கச் சொல்லி யிருக்கிறேன். (கூச்சல்—குழப்பம்) இந்த அவையை அவமதிக் கிறார் என்று சொன்னால், உங்களையும் அவமதித்ததாகத் தான் அர்த்தம். அதைப் பற்றி நான் விசாரிக்கச் சொல்கி றேன். (கூச்சல்—குழப்பம்).

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 28]

திரு. இரா. தாமரைக்கனி: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே * * (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது வரை இந்தப் பிரச்சினை குறித்துப் பேசிய அனைத்தையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கி விடும்படி உத்திரவிடுகிறேன். கூச்சல்—குழப்பம்)

[முற்பகல் 11.50]

திரு. துரைமுருகன்: தீர்ப்பை நான் ''சேலஞ்ச்'' பண்ண வில்லை. உங்களுடைய தீர்ப்பின்மீது கருத்துச் சொல்ல விழையவில்லை. இந்த அவையில் நோட்டீஸ் வீசியது இந்த அவையை அவமதித்தது என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது. இவ்வாறு பல்வேறு முறை நடைபெற்று நோட்டீஸ் வீசியவர்களுக்குத் தண்டனை கொடுக் கப்பட்டிருக்கிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அறிவார் கள். இந்த அவையில் நோட்டீஸ் வீசியதால் அந்த நபர் தண்டிக்கப்பட வேண்டியவர்தான் என்பதிலே மாறுபாடான கருத்து கிடையாது. * * * *

திரு. சேலம் மு. ஆறுமுகம்: * *

திரு. இரெ. இராசமாணிக்கம்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்க னவே உத்தரவிட்டபடி இதுவரை இந்தப் பிரச்சினை குறித்து பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(6) வரவு—செலவுத் திட்டம் 1980-81— வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனக் கோரிக்கை சம்பந்தமாக கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்தை நான் இந்தச் சபையின் முன்பாக தெரிவிக்க விரும்புகிறேன். நீர்ப்பாசனத்தில் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது என்பதை அனைவரும் அறி வோம். தமிழகத்திலே விவசாயம் நவீன முறைகளில் செய்யப் படுகிறது என்பதும், அதற்கு அதிகப்படியான மூலதனம் போடப் படுகிறது என்பதும் அனைவரும் அறிந்திருக்கக்கூடிய உண்மை. ஆகவே, இம்மாதிரி விவசாயத்தில் அதிக மூலதனத்தைக்கொண்டு நவீன முறைகளில் செய்யப்படக்கூடிய விவசாயத்திற்கு உத்தர வாதத்துடன் தண்ணீர் கிடைக்கக்கூடிய முறையில் அரசு பொறுப் புடனே நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

தமிழகத்தில் 16,546 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. இதிலே சாகுபடி நிலங்களுக்கு கால்வாய்ப் பாசனம் உண்டு, குளங்கள் கண்மாய்கள் மூலம் பாசனம் உண்டு, இறைவைப் பாசனம், நீரூற்றுப் பாசனம் உண்டு. கால்வாய்ப் பாசனம் மூலம் 9,26,000 ஹெக்டர் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகின்றன. குளங்கள் மூலம் 9,10,000 ஹெக்டர் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இறைவைப் பாசனத்தின் மூலம் சுமார் 10 லட்சம் ஹெக்டர் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆகவே, இந்த மூன்று பாசன முறைகளிலும் பாசனம் பெறும் நிலங்களின் அளவு ஒவ்வொன்றுக்கும் பெரும் அளவு வித்தியாசம் இல்லாத முறையில் பாசனத்திற்கான தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்தப் பாசன முறைகள் மேலும் அபிவிருத்தி செய்யப்படக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலாவதாக 1924ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பங்கீடு சம்பந்தமான பிரச்சினையிலே சுமூகமான தீர்வு ஏற்படுவதற்கான முறையிலே துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகிற நதிகளின் மூலமாக மொத்தம் 1400 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிறது, தமிழகத்திற்காக—அந்தத்தண்ணீரில் கேரள மாநிலத்திற்கு தேவையானது போக—நாலில் ஒரு பங்கைப் பெற்றால் கோவை, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் பயனடையும், அதன் மூலமாக 60 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்ய முடியும் அந்த வகையிலே அது உதவியாக இருக்கும் என்பதால் அது சம்பந்தமாக கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான முடிவு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சென்னைக்குக் குடிநீருக்காக கிருஷ்ணா நதியிலிருந்து நீர் கொண்டுவருகின்ற திட்டம்பற்றி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1976ஆம்ஆண்டுபாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி சென்னையிலே பல லட்சக்கணக்கான மக்கள் முன்னாலே அந்த அறிவிப்பைச் செய்தார்கள். அந்தத் திட்டம் இதுவரையிலே நடைமுறையிலே அமலாகாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து துரிதமாக நடவடிக்கை எடுத்து அதை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியா முழுவதும், தமிழகம் முழுவதும், தென்பகுதி மாநிலங்களிலே பொதுவாக பரவலாகப் பேசப்பட்டுவருகின்ற, ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருக்கின்ற திட்டம் கங்கை—காவிரி இணைப்புத் திட்டம், அந்தத் திட்டம் சாத்தியமானது என்பது பற்றி முன்னாள் பாசனத் துறை அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தஸ்தூர் கமிட்டியும்

அந்த திட்டம் சாத்தியமானது என்று அறிவித்து இருக்கிறது. ஆகவே அந்தத்திட்டம் பற்றி உடனடியாக ஆய்வுகளை நடத்தி நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு முன்பு, கோதாவரி—காவிரி இணைப்புத் திட்டம் பற்றி ஏற்கனவே பேசப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை மேற்கொண்டால் அதன் மூலமாக செங்கற்பட்டு மாவட்டம் போன்ற பகுதிகள் பாசனம் பெறும். ஆகவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒகேனக்கல் மின்சாரத் திட்டத்தை, தமிழக அரசும் கர்நாடக அரசும் கூட்டாக நிறைவேற்றுகிற திட்டத்தைப்பற்றிய பேச்சுவார்த்தை நடந்து வருகிறது, சுமுகமாகப் பேசி மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே அந்தத் திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே பாண்டியாறு—புன்னம்புழா திட்டம், செண்பகவல்லி திட்டம், மேல்பெரியாறு திட்டம் இவைகளை முறையாக அமுல்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தை மேலும் விஸ்தரிக்கவேண்டும். அதன் மூலமாக கோவை, பெரியார் மாவட்டங்களுக்கு பாசன வசதிகளை விஸ்தரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு திட்டத்தைப்பற்றி மாமன்றத்தின் விசேஷ கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வைகையை நவீனப்படுத்துகின்ற திட்டத்திற்கு என்று 2 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. வைகை நதியை ஒட்டிய இரண்டு கரைகளிலே அந்தக் கால்வாய் வெட்டியதன் காரணமாக வெள்ளப்பெருக்கினால் அந்தக் கரைகள் உடைந்துவிட்டது. அதன் காரணமாக அந்தத் திட்டமும் நிறைவேற்றப்படாமல், ஏற்கெனவே பாசன வசதி பெற்றுவந்த நிலங்களுக்கும் தண்ணீர் கிடைக்கவில்லை, ஆகவே அதை ஆராய்ந்து அந்த நிலங்களுக்கு சாகுபடிக்கு உடனடியாக தண்ணீர் கொடுக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரைகளில் உடைப்புகள் ஏற்பட்டு சிறு கால்வாய்கள் எல்லாம் மணல் மேடிட்டு தண்ணீர் பாய்வதற்கு வழியில்லை, அதை விவசாயிகள் பழுதுபார்க்க முடியவில்லை, வைகை நவீனப்படுத்தும் திட்டத்திற்கென போடப்பட்டுள்ள விசேஷ அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களும் அதைச் செய்யவில்லை, இந்த இலாகாவும் செய்யவில்லை, அவர்கள் இப்படிப்பட்ட சாதாரண மராமத்து வேலைகளைச் செய்யக்கூட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

[நண்பகல் 12-00]

ஆகவே, இதை உடனடியாகக் கவனித்து, இதைச் சீர்திருத்துகின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கால்வாய்களை நவீனப்படுத்துகின்ற வேலை எல்லாயிடங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் ஒரு சிறு பகுதியிலேதான் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிகிறது. அதை முழுமையாக, தஞ்சை மாவட்டத்திலுள்ள கால்வாய்கள் அனைத்திற்கும் அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் காவிரியிலிருந்து பிரிகின்ற மாயனூர் தென்கரைக் கால்வாயிலும் மற்றும் அனைத்துக் கால்வாய்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடிகால் வசதி சரியாக இல்லாததால் பாசனம் முறையாக நடைபெறுவது இல்லை. விவசாய உற்பத்தி அதனால் பாதிக்கப்படுகிறது. இதனால் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, முறையாக வடிகால் வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதை இந்தத் திட்டத்தில் ஒரு முறையான பகுதியாக ஆக்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீரைச் சிக்கனமாகவும், சேதாரம் இல்லாமலும் உபயோகப்படுத்துவதன் மூலமாகவும் கிடைக்கின்ற உபரி நீரைப் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் கூட ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வடிகால் சம்பந்தமாக நான் குறிப்பிடக்கூடிய சந்தர்ப்பத்தில், என்னுடைய சட்டமன்றத் தொகுதியாகிய குளித்தலையில் காட்டுவாரி வடிகால் வாய்க்கால்கள் இருக்கின்றன. அங்கே இரண்டு பக்கங்களிலும் என்க்ரோச்மென்ட் செய்யப்பட்டு இருக்கிறது. சிறு மழை பெய்தாலும்கூட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தண்ணீரில் மூழ்கி ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்கென்று ஒரு திட்டத்தினை மேற்கொண்டு அந்தக் காட்டு வாரியை சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு அணை கட்டுவது சம்பந்தமாகப் பார்த்தால், தண்ணீர் கேச்மெண்ட் ஏரியாவைப் பார்த்து எந்த இடத்தில் அதிகபட்சத் தண்ணீர்கிடைக்கும்என்று ஆராய்ந்து கட்டினால்தான் அதிகமாஸ தண்ணீரைத் தேக்க முடியும். ஆனால் சில இடங்களில் இருக்கின்ற காட்டு நிலங்கள் தனியாருக்குச் சொந்தமான நிலங்களாக இருக்கின்றன என்பதைக் கணக்கில்கொண்டுஅவர்களது செல்வாக்கின் காரணமாக எந்த இடத்தில் இந்தச் சிறிய அணையைக் கட்ட வேண்டுமோ அந்த இடத்தில் அதைக்கட்டாமல், தள்ளி வேறொரு இடத்தில் கட்டுவதன் மூலம் தண்ணீர் தங்குவதும் குறைவாக இருக்கிறது; அதனால் நஷ்டமும் ஏற்படுகிறது. இம்மாதிரி நெல்லை மாவட்டத்தில் கொடுமுடி ஆறு, வள்ளியூர் என்ற இடத்தில் 75 இலட்சம் ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டு, இது வரையில் சுமார் 25 இலட்சம்ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வளவு பணத்தைச் செலவிட்டும் பயன் இல்லாத முறையில் மேற்கொண்டு வேலை செய்ய முடியவில்லை. ஆகவே, இம்மாதிரி அணைகளைக் கட்டுகின்ற நேரத்தில், அதற்கான இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், நாகர்கோவிலில் இருக்கும் செல்வாக்குள்ள ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.பி. அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த அணையை எங்கே கட்ட வேண்டுமோ அங்கே கட்டுவதற்கு அனுமதிக்காததன் காரணமாக இப்படிப்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கேச்மெண்ட் ஏரியா எங்கிருக்கிறது என்று பார்த்து அங்கே அணையைக் கட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றையதினம் நம்முடைய பி. டபிள்யூ.டி. இலாக்காவிலே மராமத்து வேலைகள் செய்வது சம்பந்தமாகமேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் பற்றிச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மென்ட்' என்று சொன்னார்கள். இந்த அரசுக்கு இருக்கின்ற நல்ல பெயரைக் காப்பாற்றக் கூடிய வகையில் இந்த இலாக்காவில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள், வேலை செய்யவில்லை எப்பொழுது காண்ட்ராக்டுக்கு விடுகிறார்கள், எந்த காலத்திலே அந்த வேலைகள் செய்யப்படுகின்றனவா என்பவையெல்லாம் இன்றைக்குக் கேள்விகுறியாக இருக்கின்றன.

கால்வாயில் எந்தநேரத்தில் தண்ணீர் திறந்துவிடப்போகிறோம் என்று பார்த்து அந்த வேலைகளையெல்லாம் காண்ட்ராக்டர்கள் செய்வார்கள். எப்படியாவது பில்லைப்போட்டு பணத்தைப் பெற வேண்டுமென்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மே மாதத்தில் தண்ணீர் கால்வாயில் திறந்து விடப்படுவதற்கு முன்பு, அதாவது மே மாதத்திற்கு முன்பு அந்த மராமத்து வேலைகள் கவனிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லிஃப்ட் இர்ரிகேஷன் மூலமாக தமிழ்நாட்டில் மின்சாரம் பெறப்பட்டும் பாசன வசதி பெற்றும் வருகிறது. மின்சாரத்தில் டிரான்ஸ்பார்மர்கள் சரியான லோடுகள் உள்ள முறையில் கவனிக்கப்படாததன் காரணமாக விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் உண்டாகிறது. மின்சார மோட்டார்கள் தீய்ந்து விடுகின்றன. எனவே இது சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயக் கிணறுகளை அதிகம் வெட்ட வேண்டும், டியூப் வெல்கள் (O.N.G.C.) மூலமாகக் காவேரி டெல்டா கரையில் எண்ணெய் வளம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்க வெட்டப்பட்ட கிணறுகளை, அதில் எண்ணெய் இல்லையென்றால், அதில் கிடைக்கின்ற தண்ணீரைப் பாசனத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், குளித்தலை தாலூக்காவில் அரியாற்றில் புதிய அணைகட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது சம்பந்தமாக புனர்பரிசிலனை செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது) இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பிச்சை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81ஆம் ஆண்டு நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின்மீது இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் என்னுடைய அருப்புக்கோட்டை தொகுதியிலே என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றியடையச் செய்த அருப்புக்கோட்டை தொகுதி மக்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்திலே என்னுடைய கருத்தினைக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். சிறிய, பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, சிறிய அணைக்கட்டுகளைக் கட்டுவதற்காகவும், கண்மாய்களை ஆழப்படுத்துவதற்காகவும், கால்வாய்களை ஏற்படுத்துவதன் மூலமாகவும், நிலத்தடி நீரைப் பயன்படுத்தி பாசனவசதி ஏற்படுத்துவதன் மூலமாகவும், மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைக் கீழேயுள்ள வறட்சி மாவட்டங்களுக்குத் திருப்பி விடுதல் என்கிற திட்டத்தின் அடிப்படையில், உலக வங்கியின் துணைக் கொண்டு, உலக வங்கியிலே இருக்ககக்கூடிய அதிகாரிகளுடனும் மத்திய அரசிலே பொறுப்பேற்றிருக்கின்ற பெரிய அதிகாரிகளுடைய துணைகொண்டும், இந்தத் திட்டங்களின் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசனத் திட்டங்களைத் தீட்டி, இந்த மான்யக் கோரிக்கையை இந்தச் சட்டமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிற நீர்ப்பாசனத்துறை அமைச்சரவர்களை நான் பாராட்டி வரவேற்கிறேன். அந்த அடிப்படையிலே நீர்ப்பாசனம் தமிழகத்திலே முக்கியமான ஒன்றாக இருந்து கொண்டிருக்

கிறது. தமிழகத்தினுடைய ஏழை எளியவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகப் போடப்படுகின்ற இந்தத் திட்டம் பல வழிகளிலே மக்களுக்கும் பயன்படுகிறது என்ற வகையிலே, என்னுடைய தொகுதியிருக்கிற முகவை மாவட்டத்திலே பெரிய, பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. குறிப்பாக, 500 ஏக்கருக்கு மேலே உள்ள, 1,000 ஏக்கர் வரையில், 2,000 ஏக்கர் வரையில் உள்ள கண்மாய்களும் இருக்கின்றன. கடந்த காலத்தில் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலிருந்தது முதல் கலைஞர் கருணாநிதி அவர்கள் காலம் வரை என்னுடைய தொகுதியிலே மக்களால் கோரிக்கை எழுப்பப்பட்டு, என்னுடைய தொகுதிக்கு நீர்ப்பாசன வசதிகளைஅளிக்க வேண்டுமானால் கிருதுமால் நதித் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டபொழுது அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவர்கள் வாயாரப் பேசினார்களே தவிர யாரும் நிறைவேற்றத் தயாராக இல்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் என்னுடைய அருப்புக்கோட்டைத் தொகுதியிலேயிருந்து கடந்தமுறை தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, அவர் ஒரு வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதியின் அடிப்படையிலே, புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மானியக்கோரிக்கையிலே ரூ. 95 இலட்சத்தை கிருதுமால் நதித் திட்டத்திற்கு நிதியாக ஒதுக்கியிருப்பதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே பணிவான நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சட்டனூர் பெரிய கண்மாய் 3,000 ஏக்கர் வரையிலே பலன் அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அந்தக் கண்மாயை பெரிய அணைக்கட்டைப்போல நீரைத்தேக்கும் அளவிற்கு கண்மாய் உடைப்பு ஏற்படாமல் பக்காவாக தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கலம் தாலூகாவிலே உற்பத்தியாகிற நதி குண்டாறு என்னும் நதி. அதிக மழை பெய்கிறதென்றால், அதிகமாக இருக்கக்கூடிய தண்ணீர் எல்லாம் என்னுடைய தொகுதி வழியாகத் தெற்கே ஓடுகின்ற குண்டாறு நதியோடு கலந்து வீணாகிறது.

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி ஒன்றியம், கவுண்டன் நதியின் குறுக்கே, சென்னம்பட்டி என்னும் இடத்தில் அணைகட்டும் திட்டம் அரசின் பரிசீலனையிலே இருக்கிறது. அத்திட்டத்தை நிறைவேற்றினால், வி.கரிசல்குளம் கண்மாய், நந்திக்குண்டு கண்மாய், தமியாரேந்தல் கண்மாய், திம்மம்பட்டி, வலயவகுளம், சந்திரங்குளம், தோனூரகால்,மல்லாங்குளம், முடிய லூர்,பாஞ்சார், பாம்பாட்டி, சிங்கலிங்கம், கடம்பங்குளம், கே.கரிசல்குளம், கலுவனச்சேரி ஆகிய கண்மாய்கள் பயன்பெறும். ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நாங்கள் அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று சொல்கின்றார்களே, குண்டாறு திட்டத்தின் கீழ் மண்டலமாணிக்கம் அணைக்கட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவருக்காக திட்டம் தயாரிக்கப்பட்டு, எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, கட்டப்பட்டுள்ளது. அண்மையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபொழுது அந்த அணை சீரழிக்கப்பட்டு இப்பொழுது அது செயல்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அந்த ஆற்றிலே வலப்புறத்திலேயும் இடப்புறத்திலேயும் பல கண்மாய்கள் இருக்கின்றன. அந்தக் கண்மாய்களுக்கு நீர் வேண்டும் என்று அதிகாரிகளிடத்திலே சென்று கேட்கிறபோது அவர்கள், அந்த மண்டல மாணிக்கம் அணைக்கட்டு எப்படி செயல்படுகிறது என்று பார்த்து, அதனுடைய செயல் திறனை 10 ஆண்டுகள் கழித்துப் பார்த்த பிறகுதான் தண்ணீர் விடப்படும் என்பதாகச் சொல்லுகிறார்கள். இதன்படி திருச்சுழி கண்மாயில் 1,500 ஏக்கரும், ஆனைகுளம் கண்மாயில் 2,000 ஏக்கரும், வக்கனாங்குண்டு கண்மாயில் 500 ஏக்கர்களும், பி. புதுப்பட்டியும் அதனைச் சேர்ந்த இடங்களிலும் உள்ள 1,500 ஏக்கர் நிலங்களும் பயனடையும். ஆனால் அந்த மண்டல மாணிக்கம்அணைக்கட்டானது 1979ம் ஆண்டு பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சேதம் அடைந்து இப்போது எந்த விதமான உபயோகத்திற்கும் பயன்படாத நிலையில் இருக்கிறது. எனவே இதில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிலையூர் என்கிற கூத்தியார்குண்டு கண்மாய் நிலையூர் கால்வாய் மூலமாக வைகைத் தண்ணீரைப் பெருகிறது. வெள்ளக் காலங்களில் தண்ணீர் வருகிறபோது அந்தக் கால்வாய் தலைப்பை அடைத்துவிடுகிறார்கள். வெள்ளத்தண்ணீரை இந்தக்கால்வாய் மூலம் கொண்டு வந்து நிலையூர் கண்மாயைப் பெருக்கினால் கூத்தியார்குண்டு கண்மாயின் வலது கோடியில் உள்ள மறுகால் துறைவழியாக என்னுடைய பகுதியில் உள்ள கம்பிக்குடி சத்திரம் புளியங்குளம் ஆகிய அணைக்கட்டுகள் மூலம் பாசனம் பெறும் கண்மாய்கள் மேலும் அதிக தண்ணீரைப் பெறுகின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மூடப்பட்டுகின்ற அந்தக் கால்வாயை திறப்பதற்கு வழிவகை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு நீர்ப்பாசனம் இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கிற காரணத்தால், இந்தத் திட்டம் நல்லமுறையில் செயல் பட்டு விவசாயிகள் மேன்மை அடைய வேண்டும் என்றால், இன்னும் கால்வாய்களை ஆழப்படுத்துகின்ற திட்டத்தைச் செயலாக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் பகுதியில் தென்கால் பாசனம் கடம்பர் குளம் ஒன்று இருக்கிறது. அந்தக் குளம் சுமார் 50,000 ஏக்கா வரையில் பாயக்கூடிய அளவுக்கு, கீழ்ப் பாசனக் குளங்கள், அம்மன்புரம், சீனிமாவடிகுளம், நல்லூர், மேல்குளம், கீழ்குளம், நத்தைக்குளம், ஆவடையார்குளம், ஆத்தூர் பெரியகுளங்களும் மற்றும் சின்ன தண்ணீர் தேக்கக்குளம் இருப்பதால் கடம்பா குளம் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்தான மராமத்து நடந்து உள்ளது. அதற்குப் பின்னால் அந்தக் கடம்பாகுளம் மிகவும் உளுத்துவிட்டபடியால் தண்ணீர் அதிகம் தேக்கிவைக்க முடியாமல் இருக்கிறபடியால், அந்தக் குளத்தை உடனடியாக மராமத்து செய்து தரவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து தாமிரபரணி நதியில் இருந்து கோடகன் கால்வாய் மூலம் கங்கைகொண்டான் குளத்துக்கு தண்ணீர் கொண்டுவருவதற்கு திட்டம் நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்களால் கோரப் பகிறது. எனவே உடனடியாக தீவிர நடவடிக்கை எடுத்து கெங்கைகொண்டான் பகுதிக்கு தண்ணீர் கொண்டுவருவதற்கும் அந்தப் பகுதி செழிப்பாக இருப்பதற்கான திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தாமிரபரணி ஆற்றில் முக்காணி, ஆத்தூர் சமீபம் மிகுந்த மழை பெய்வதால் அதிகமாக நீர் கடலில் போய் கலக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் ஒரு அணையைக் கட்டி மழைக்காலங்களில் கடலில் போய் விழக் கூடிய தண்ணீரை தேக்கி வைப்பதன் மூலம் பக்கத்தில் இருக்கும் அனல் மின் நிலையம், ஸ்பிக், புதிய துறைமுகம், தரங்கதாரா கெமிக்கல்ஸ் ஆகியவற்றிற்கு தண்ணீர் சப்ளை நல்ல முறையில் கொடுக்கமுடியும். பக்கத்தில் இருக்கும் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியும்.

அதோடு அந்த அணைக்கட்டிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் இருக்கும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு வரையில் மழை இல்லாத நேரங்களில் நிலத்தடி நீர்பிடிப்பும் அதிகமாகக் கிடைக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். பக்கத்தில் இருக்கும் கிராமங்களிலும் நிலத்தடி நீர் கிடைக்கும். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி தாமிரபரணி கோட்டம் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் வடகால் தென்கால் நெற்பயிருக்கு ஜூன் 15ம் தேதியோடு அட்வான்ஸ் கார் பழந்தொழில்

சாகுபடி அனுமதி முடிந்துவிட்டதை விவசாய பருவம் பிந்தி விட்டதால் மேலும் ஒரு மாதத் தேவைக்கான தண்ணீரைத் திறந்துவிட்டு திருச்செந்தூர், சாத்தான்குளம், ஸ்ரீவைகுண்டம் தொகுதி நெற்பயிரை தீய்வின்றி அதிகபட்ச அளவிற்கு காப்பாற்றி யதற்கு இம்மூன்று தொகுதி விவசாயிகளின் சார்பாக என் நன்றி யைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள இந்த பாசனத் துறை மானியத்தை வரவேற்று எனது கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

'நீரின்றி அமையாது உலகு' என்னும் வாக்கினுக்கொப்ப வளர்ந்து வரும் வேளாண்மைப் பணிகளின் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு நீர்ப்பாசனம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருத்தில் கொண்டு, வறண்ட எனது தேனித் தொகுதி யில் காண்டூர் வாய்க்கால் திட்டத்திற்கு அனுமதியளித்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வாழவகை தெரியாது வறண்டுபோன கிணறுகளையே வைத்துக் கொண்டு மானம் பார்த்த பூமியை உழன்று கொண்டிருக்கும் எனது தொகுதியின் உழவர் பெருமக்கள், சிறு விவசாயிகள், ஆகியோர்களின் நன்றியையும் இந்தக் காருண்யம் மிக்க புரட்சித் தலைவர் அரசுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு இந்த ஆண்டு, ரூ. 24.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைப் பாராட்டு கிறேன். பரம்பிக்குளம்-ஆளியாறு, பெரியார்-வைகை ஆகிய இரு திட்டங்களை நவீனப்படுத்துகின்ற திட்டம், கிடைக்கின்ற நீரை வைத்து எவ்வளவு அதிகமான நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க முடியுமோ அவ்வளவுக்கதிகமாக பாசன வசதியினை விஸ்தரிக்க இருப்பது நமது பொறியியல் வல்லுநர்களின் திற மைக்கு எடுத்துக்காட்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஒப்புதல் அளித்துள்ள எட்டுத் திட்டங்கள், நடைபெற்று வருகின்ற திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் சுமார் 60,240 ஏக்கர் பாசன வசதி என்று இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறபோது தமிழகம் நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறந்த அளவில் செயல்பட்டு வருகிறது என்பது புலனாகும்.

ஒரு நதிப்படுகையில் உள்ள உபரி நீரை பற்றாக்குறை நதிப்படுகைகளுக்கு எடுத்துச் செல்கின்ற கிருதமால் மற்றும் குண்டாறு திட்டங்களைத் தீட்டியதற்காகப் பாராட்டுகின்ற அதே

நேரத்தில் வைகை நீர்பிடிப்புப் பகுதியில் வறண்டு கிடக்கும் சாங்கால்பட்டி, கும்பிநாய்க்கன்பட்டி, லட்சுமிபுரம், ஓடைபட்டி, ஏரச்சநாயக்கனூர், சின்ன ராயபுரம் ஆகிய பகுதிகளுக்கும், கூத்தண்ணி நாச்சியார் சண்முகா நதி நீரைத் திருப்பிவிடுகின்ற பாசனத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்திக் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்கும், தூர்வாரி மேம்படுத்தும் திட்டங்களுக்கும், தீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டங்களுக்கும் குளங்களை நவீனப்படுத்துகிற திட்டங்களுக்கும், முன்னாள் ஜமீன் நிலங்களைத் தரத்திற்குக் கொண்டுவரும் திட்டங்களுக்கும், அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து இருப்பது பாராட்டுக்குரிய ஒரு செய்தியாக இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

நிலநீரைப் பொறுத்த அளவில் புதிய அறிவியல் அடிப்படைக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வது வரவேற்கத்தகுந்த ஒன்றாகும். அதன் அடிப்படையில் நிலத்தடி நீரற்ற பகுதிகளுக்கு அரசே மாற்று ஏற்பாடுகள் மூலம் நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் வைகை ஆற்று நீரேற்றுத் திட்டங்களை குறிப்பாக அம்பாசமுத்திரம், கோவிந்தநகரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நீரேற்று பம்புசெட்டுகளுக்கு அமராவதி நதியில் ரெகுலரைஸ் செய்து கொடுத்ததைப்போல ரெகுலரைஸ் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயக் கிணறுகள், சமுதாயக் குளங்கள் ஏற்படுத்துவதோடு குளங்களின் உள்வாய்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களை காலி செய்து அங்கே மண் மேடிடாமல் இருக்கும்பொருட்டு பலன்தரும் பழமரங்களை நடவேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திற்கும் கேரளாவிற்கும் இடையே உள்ள நதிநீர்ப் பங்கீடு குறித்து பிரத்தியட்ச முறையில் அணுகி, மேற்கு நோக்கி ஓடி கடலில் வீணாகும் நீரைப் புகிர்ந்துகொள்வது சம்பந்தமாக அடிக்கடி பேச்சுவார்த்தைகளை ஊக்குவித்து, தீர்க்கப்படாமலிருக்கின்ற பாசனத் திட்டங்களை விரைவுபடுத்த வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாறு அணையினை துரிதமாகச் சரிசெய்தும், பலப்படுத்தியும் அதன் முழுக்கொள்ளளவான 152 அடி உயரத்திற்கு மீண்டும் நீரை பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது தேனித் தொகுதியிலுள்ள புலிகுத்தி, மார்க்கயன் கோட்டை, குச்சலூர், ஐயம்பட்டி ஆகிய மேடான வறண்ட பகுதிகளும் பயனடையும் வகையில் தற்சமயம் ஆய்விலுள்ள மேலப்பெரியாறு திட்டத்தை பெரியகுளம் வரை மேற்குமலை அடிவாரத்தையொட்டி பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் போல ஏற்படுத்தித் தரும்படி மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

அன்னஞ்சி கிராமத்தில் சிகு ஓடையின் குறுக்கே ஒரு அணை யினை ஏற்படுத்தி பாசன வசதி செய்து தர வேண்டுகிறேன். இதன் மூலம் வறண்டுபோன கிணறுகளில் நீரூற்றுக்கள் ஏற்படு வதற்கும் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைப்பதன் மூலம் நிரந்தர வேளாண்மை வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சாத்தியக்கூறுகள் அதிகமிருப்பதால் இந்தத் திட்டத்தை 'ஸ்பெ ஷல் மைனர் இரிகேஷன்' திட்டத்தில் சேர்த்து அரசு ஆணையிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித்துறையில் தினக் கூலிகளாகப் பணியாற்று கின்ற சுமார் 300 பேர்களுக்கு மேற்பட்ட டிப்ளமோ படித்தவர் களை தொழில் நுட்ப உதவியாளர்களாக நிரந்தரப்பணியில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கை மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில் நூறாண்டுக் காலமாக பரிசீலனையில் இருந்துவரும் எடமச்சி கால்வாய், பாலேஸ்வரம் நீர்த்தேக்கத்திட்டம் ஆகியவைகளை உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் 12,000 ஏக்கர் பாசன வசதி பெறும். பல்லாண்டு காலமாக கேட்கப்பட்டு வருகிற தேனி தொகுதியிலுள்ள திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, எனக்கு பேச வாய்ப் பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

7. அறிவிப்பு.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை (28-7-80) சுமார் 11-40 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டு அறிக்கை வீசி, கோஷங்கள் எழுப்பிய திரு. ராஜு என்பவர் மகன் திரு. ஆர். பி. வேலன்; துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்து கோஷங் களை எழுப்பிய திரு பாலுசாமி என்பவர் மகன் திரு. பி. நந்த குமார் ஆகியவர்களுடைய செயல் கண்டிக்கத்தக்கதும் பேரவையை அவமதிக்கும் செயலும் ஆகும்.

அவர்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு. து. இராசரத்தினம் ஆவார்.

இது குறித்த தீர்மானத்தை மொழியும்படி மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''இன்று (28–7–1980) பகல் சுமார் 11-40 மணிக்கு சட்டமன்றப பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்க உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை பழையவண்ணாரப்பேட்டை இராதாகிருஷ்ணன் நகர், கிழக்கு சிமெட்ரி சாலை, 21-வது எண் வீட்டிலிருக்கும் திரு. ராஜு என்பவரின் மகன் ஆர்.பி. வேலன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்; பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்துக் கோஷங்களை எழுப்பிய சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், வரதராஜப்பெருமாள் செட்டித் தெருவில், 5-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. பாலுசாமி என்பவரின் மகன் பி. நந்தகுமார் என்று சொல்லிக்கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கின்றது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மெண்ட்) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, முன்பு இந்தத் தண்டனை 3 நாள் என்று குறைக்கப்பட்டிருக்கின்றது. அதுபோல இன்றும் அந்தத் தண்டனை காலத்தை 3 நாளாகக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: தண்டனையை 3 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்று நானும் எனது கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 28]

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அவர்களுக்கு தண்டனை கொடுப்பது சபாநாயகர் அவர்களுடைய பொறுப்பு. நான் அதிலே குறுக்கிட விரும்பவில்லை.

* * * * *

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். (கூச்சல்-குழப்பம்)

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, திரு. சங்கரய்யா அவர்களுடைய கோரிக்கைக்கிணங்க என்று அமைச்சர் சொல்கிறார். மதிப்பிற்குரிய திரு.சங்கரய்யா அவர்களுடைய பெயரைச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே போன்று எங்கள் பக்கத்திலே இருந்தும் தண்டனைக் காலத்தைக் குறைக்கவேண்டும் என்று சொல்கிறோம்.

[பிற்பகல் 12-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையில் துண்டறிக்கை வீசியது இந்தப் பேரவையை அவமதிக்கும் செயல். இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கும் செயல்.... (கூச்சல்-குழப்பம்).

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்களின் பெயரைச் சொல்வதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் தண்டனை குறைக்கப்பெற வேண்டும் என்று நாங்களும் தான் சொல்லியிருக்கிறோம். ஆகவே பொதுவாகவே சொல்லட்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி விடலாம். பிரச்னை இல்லை.

மாண்புமிகு திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது பேரவை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

''தீர்மானத்தில் உள்ள '7 நாட்கள் என்பது 3 நாட்கள்' என்பதாகத் திருத்தப் பெற வேண்டும்''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி: ''இன்று 28–7–1980 பகல் சுமார் 11-40 மணிக்கு சட்டமன்றப்பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை, பழைய வண்ணாரப் பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், கிழக்கு சிமெட்ரி சாலை 21வது எண் வீட்டிலிருக்கும் திரு ராஜு என்பவரின் மகன் ஆர். பி. வேலன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்து கோஷங்களை எழுப்பிய சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், வரதராஜப்பெரு மாள் செட்டித்தெருவில் 5ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. பாலுசாமி என்பவரின் மகன் பி. நந்தகுமார் என்று சொல்லிக் கொள்ளும் நபரும்,

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் மூன்று நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசின் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

* * * * *

6. வரவு-செலவுத் திட்டம் 1980–81 வாக்டுெக்ப்பு— தொடர்ச்சி.

[பிற்பகல் 12-40]

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தாக்கல் செய்திருக்கின்ற நீர்ப்பாசன கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்கள் தெரிவிக்க விழைகிறேன். குறிப்பாக, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிலே வந்தபிறகு, புதிய திட்டங்களை அறிவிப்போம், ஏழை விவசாயி களுக்கு நன்மை செய்வோம் என்று சொன்னார்கள். அத்தகைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்பெற்றது.

திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்களா என்று சொன்னால், இந்தக் குறிப்பேட்டிலே பார்க்கின்ற நேரத்திலே ஏற்கனவே பல ஆண்டு களாக இருந்த சில திட்டங்களைத்தான் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் இங்கே காண முடி கின்றது என்பதைநான் முதன்முதலாக இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தஞ்சை கால்வாய்களை எல்லாம் நவீனமாக்க வேண்டுமென்றும் ஆழப்படுத்தவேண்டுமென்றும் 1971ஆம் ஆண்டு 70 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு, அது மத்திய அரசின் பரி சீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், அதைத் தீவிரப் படுத்தவேண்டுமென்ற காரணத்திற்காக, அதை எப்படி சீர்திருத்த முடியும், அதிலே விவசாயிகள் எல்லாம் எப்படி பயனடைய முடியும் என்ற பல்வேறு வகையான செயற்குறிப்புகளைப்பற்றி ஒரு அறிக்கை தாக்கல் செய்ய ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக்குழு ஏறக்குறைய 74ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அறிக்கை தாக்கல் செய்யவில்லை. ஏன் செய்யவில்லை என்பதைப்பற்றி இந்த அரசு தரப்பில் காரணம் கேட்கப்படவில்லை என்பதைத் தான் நான் இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தின் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் நன்செய் விளைவிக்கக்கூடிய பூமி. தமிழக மக்களுக் கெல்லாம் அதிகமாக நெல்லை விளைவிக்கக்கூடிய அந்தப் பகுதியில் அந்த அளவுக்கு நீர்ப்பாசனத்துறை சரியாக செயல்பட வில்லை என்பதைத்தான் நான் இங்கே கோடிட்டுக்காட்டி, அந்த முறையில் செயல்படாமல் காலம் விரயமாகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் அணை இருந்து கொண்டிருக்கிறது. இந்த சாத்தனூர் அணைப் பகுதியிலிருந்து வடக்குப்பகுதியிலே செல்லுகின்ற கால் வாய்ப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. தென் ஆற்காடு மாவட்டத் தைச் சேர்ந்த நிலையிலுள்ள இந்தப் பகுதியில் பெரும்பாலான நிலங்களுக்கும் நீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அதைச் செயல்படுத்துவதற்கான திட்டத்தை எதிர்பார்த் தேன். ஆனால் இந்த விளக்கக் குறிப்புக்களில் இதுவரை எந் தத் திட்டமும் வரவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக சாத்தனூர் அணையிலிருந்து சமுத்திரம் ஏரிக்கு தண்ணீர் நந்தன் கால்வாய்த் திட்டத்தின் மூலம் பாய்ந்து ஏறக் குறைய 15,000 ஏக்கர் நிலம் செஞ்சி பகுதியில் பாசனம் செய்யப் படக்கூடிய திட்டம். நந்தன்கால்வாய் திட்டம் என்பது ஏறக்

குறைய ஒன்றரைக்கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு இன்றைக்கு அதுபயன்படமுடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலங்களுக்கு அந்தத் திட்டத்தின்மூலம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட செல்லமுடியாத அளவுக்கு இருக்கிறது. செலவழிக்கப்பட்ட பணம் வீணாக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கோமுகி அணைக்கு சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீரைக்கொண்டு செல்வோம் என்று இந்த ஆட்சியாளர்கள் சென்ற ஆண்டு சொன்னார்கள். அந்தத் திட்டம் எங்கே இருக்கிறது, என்ன ஆனது என்று துருவித் துருவிப்பார்த்தேன். எந்தவிதமான திட்டமும் இல்லை. இதிலே அவர்கள் எந்தவிதமான நாட்டமும், சிரத்தையும் செலுத்தவில்லை என்பதைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு திட்டங்கள் அரசுத் தரப்பில் நிறைவேற்றப்பட்டதாகச் சொல்லப்பட்டு எந்தவிதமான பயனும் அடையாமல் இருக்கின்றன, பணம் வீணாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாமன்றத்தின் முன்னால் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

செஞ்சிக்கு அருகில் வராகநதி என்ற அணை கட்டப்பட்டு 13, 14 ஏரிகளுக்குத் தண்ணீர் விடும் திட்டம் செயல்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இதுவரை தண்ணீர் வந்ததா என்றால் இல்லை. செலவு செய்த பணம் என்னவாயிற்று. யார் அந்த அதிகாரிகள்? என்ன செலவு செய்தார்கள்? ஒழுங்கான முறையில் தண்ணீர் வராத காரணம் என்ன? இவற்றையெல்லாம் ஆராய்ந்தார்களா? என்றால் இல்லை. எப்படி அவர்கள் பில் போடுகிறார்கள்? காண்டிராக்டர்களுக்குப் பணம் வீணாகிறது. அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள். நீர்ப்பாசனத்திட்டங்கள் உண்மையான முறையில் நியாயமான முறையில் செயல்படவில்லை என்பதை குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய சொந்த ஊரைச்சேர்ந்த சேர்வராயன் என்ற பகுதியில் புதிய கால்வாய் வெட்டினார்கள். அது வெட்டப்பட்டு இன்னும் ஆழப்படுத்தப்படவில்லை. இதுபற்றி பலமுறை எக்சிக்யூட்டிவ் எஞ்சினியரைப் பார்த்துச் சொல்லியிருக்கிறேன். அதை ஆழப்படுத்தினால்தான் மேட்டுப்பகுதியிலிருந்து தண்ணீர் வர முடியும். இப்படி பல்வேறு திட்டங்கள், சிறிய அல்லது நடுத்தரத் திட்டங்கள் செயலளவிற்கு வந்து உண்மையில் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்த முடியாத அளவுக்கு செயல்பட முடியாத நிலைமையில் இருக்கின்றன. எந்தெந்தத் திட்டங்களுக்கு அரசு செலவு செய்தது, எந்தெந்தத் திட்டங்கள் உண்மையிலேயே முடிவுற்று மக்களுக்குப் பயன்படுகின்றன. எந்தெந்தத்

திட்டங்கள் பயன்தர முடியாத அளவுக்கு இருக்கின்றன என்பதை பற்றி ஆராய ஒரு குழு அமைத்து, ஆராய்ந்து அந்தத் திட்டங்கள் முழுமையாகச் செயல்பட வழிவகைகளைச் செய்யவேண்டும். செயல்படாத திட்டங்களுக்கு மேலும் தேவைப்பட்டால் நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை நரியோடையில் ஒரு புதிய அணை கட்டவேண்டுமென்று ஏற்கனவே வலியுறுத்தி வந்திருக்கிறோம். முடியூர் கிராமத்தில் ராஜபுலியூர் என்ற கிராமத்தில் அணை இருக்கிறது. அங்கே இரண்டு பக்கமும் கரை உடைந்து போய் தூர் வாரப்படாமல் மோசமடைந்து அந்தப் பகுதிக்குத் தண்ணீர் சரியாகச் செல்லமுடியவில்லை. அதிலே தூர்வாரி இரண்டு பக்கமும் கரையைக்கட்ட வேண்டும்.

வராக நதித் திட்டத்தின்கீழ் ஏற்கனவே பல ஏரிகளுக்குத் தண்ணீர் செல்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே முடியூர் கிராமத்தில் இருக்கும் ஏரிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை வைக்க முன்வருகிறேன்.

[பிற்பகல் 12-50]

குறிப்பாக எல்லா ஏரிகளையும் ஒழுங்கான முறையிலே மராமத்துச் செய்கிற முறையிலே—ஏதோ கான்ட்ராக்ட் விடுவது, ஏதோ சில பேர்கள் வேலை செய்வது என்ற நிலைமை இல்லாமல் —ஆழமான முறையிலே கரைகளைப் பலப்படுத்துகிற வகையிலே ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து தமிழ்நாட்டிலே உள்ள எல்லா ஏரிகளையும் 5 அல்லது 10 ஆண்டுகளுக்குள்ளாக மராமத்து செய்து மழை பெய்தால் நீர் எங்கேயும் ஓடி வீணாகாத அளவுக்கு, அங்கேயே தேங்கி நிற்கக்கூடிய அளவுக்கு வேலைகளைச் செய்தால் அதன் மூலமாக கிணறுகளிலே நீர் அதிகமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

1901, 1911ஆம் ஆண்டுகளிலே நிலங்கள் சர்வே செய்யப் பட்டன. அதற்குப் பிறகு நிலங்கள் அளக்கப்படவில்லை, ஏரிகள் அளக்கப்படவில்லை. பல ஏரிகள் அதற்குப் பிறகு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளைத் தடுக்கின்ற முறையிலேயும், நீர்ப் பிடிப்பு அளவு ஒவ்வொரு ஏரியிலும் எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு நிலங்களுக்கு முறையாக பாசன வசதி கிடைக்கிறது என்பதையெல்லாம் ஆராய்வதற்காக அரசு மீண்டும் சர்வே செய்ய வேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் ஒவ்வொரு ஏரியின் மூலமாகவும் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன என்பதையும், நிலங்களிலே முதல் போகம் செய்யப்படுவது எவ்வளவு, இரண்டாவது போகம்

செய்யப்படுவது எவ்வளவு என்பதைக் கண்டறிந்து அவ்வாறு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளை முறையாக எடுப்பதற்கும், வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே செய்யாற்றிலே தண்டரையில் அணை கட்டி மாமண்டூர் கால்வாய் வழியாகத் தண்ணீர் செல்கிறது. அதற்குப் பிறகு அந்தத் தண்ணீர் ஒவ்வொரு வரப்பு வழியாகச் செல்கிறபோதும் வீணாகிறது. அப்படியில்லாமல் ஒரு கால்வாய் மூலமாக செல்கிற வகையிலே ஒரு புதிய கால்வாயைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே தொட்டஹல்லா திட்டம் என்ற திட்டம் 30 ஆண்டுக் காலமாக அந்த மக்களால் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் இது வரையிலேயும் ஆய்வு என்ற நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. அது நியாயமான ஒரு திட்டம், மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய ஒரு திட்டம், ஏன் அது அரசாங்கத்தினுடைய கிடப்பிலே கிடக்கிறது என்று தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக களவரப்பள்ளியில் பொன்னையாற்றில் ஒரு புதிய அணை கட்டுவதற்கான திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்காக வேண்டிய நிலத்தை கையகப்படுத்துவதற்கு அங்கே சென்றிருக்கிறார்கள். அங்கே உள்ள தனியார்கள், நிலவுடைமையாளர்கள் ரிட் பெட்டிஷன் போட்டு அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால் இது வரையிலே அரசாங்கம் அதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை, என்ன நிலைமையிலே அது இருக்கிறது. என்று குறிப்புகளிலே கொடுக்கப்படவில்லை. இப்படி முறையில்லாத குறிப்புகள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. அரசுத் தரப்பிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லவில்லை, நான் ஒரு குற்றமாக இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதற்கான காரனத்தை அமைச்சர் பதிலில்அதை நான் எதிர்மார்க்கிறேன்.

ஒகேனக்கல்லில் நீர் மின்சார நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தைப் பற்றி கர்நாடக மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதிலே முன்னேற்றம் காண்கின்ற நிலை இருக்கிறது என்று அறிகிறேன். அதைப் பயன்படுத்திக் கொண்டு இது சம்பந்தமாக ஏற்பாடுகளைச் செய்தால் துஅ மகிழ்ச்சி கூடிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சீக்ஙரம் அதை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள் ஙறேன்.

அடுத்து, குமரி மாவட்டத்திலே கோதையாறு நீர் மின்நிலையத்திலே பேச்சிப்பாறைத் தண்ணீரை மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்துவது தவிர பாசனத்திற்கும் உபயோகப்படுத்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் துறை மானியக் கோரிக்கைகள் மீது ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்காக முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் கடந்த 3 ஆண்டு காலமாக உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்றதற்கு மூல காரணம் நீர்ப்பாசனத் துறை; இந்தத் துறை எந்த அளவுக்கு சிறப்பாக புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே செயலாற்றியிருக்கிறது என்பதற்கு அது சான்றாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதியைப் பொறுத்த மட்டில் நீர்ப்பாசனத் துறையினுடைய சில தேவைகளை நான் இந்த நேரத்திலே சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன். புரட்சித் தலைவருடைய ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் எங்களுடைய இராமநாதபுரத்தில் இருக்கின்ற பெரிய கண்மாய்க்கு உரிய நேரத்தில் தண்ணீர் விட வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவரையும், சம்பந்தப்பட்ட பொறியாளர்களையும் சந்தித்து எங்களுடைய கண்மாய்க்கு உரிய நேரத்திலே தண்ணீர் வழங்க வேண்டும், இல்லையென்றால் பயிர் சாவியாகப் போய் ஏழை எளிய விவசாயிகள் கஷ்டப்படுவார்கள் என்று சொல்லி பலமுறை படையெடுத்து, காவடி தூக்கிய பின்னரும் கூட உரிய நேரத்தில் தண்ணீர் வராது. ஆனால் இப்பொழுது கோரிக்கை வைக்காதிருந்தும் கூட, உரிய காலத்திலே எங்கள் பகுதிக்கு, புரட்சித் தலைவரின் ஆட்சி வந்த பிறகு, வைகை அணைக்கட்டிலிருந்து மிகச் சீராக, சிறப்பாகத் தண்ணீர் விடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த முறையை நீடிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம், எங்கள் பகுதி பிற்பட்ட பகுதி. இராமநாதபுரம் மாவட்டம் என்று பெயர் இருக்கிறதே தவிர, எங்கள் மாவட்டத்தின், பெரிய அதிகாரிகள் தலைமை அலுவலகங்கள் ஆகியவை மதுரையில்தான் இருக்கின்றன. ஒரு சிறு கஷ்டம் என்றாலும் கூட, சாதாரணமானவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக மதுரைக்குச் சென்று வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இராமநாதபுரம் பகுதியைப் பொறுத்தவரையில் அரசு கவனத்திற்கொண்டு, எந்தவிதமான தொழிலும் இல்லாத பகுதி என்பதைக் கவனத்திற் கொண்டு, ஏழை எளிய மக்கள் வசிக்கின்ற ஒரு பகுதி அது என்பதையும் கவனத்திற் கொண்டு, அதில் கவனம் எடுத்துக் கொண்டு காரியமாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்துறையைப் பொறுத்தமட்டில் வைகை சீரமைப்புத் திட்டம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இரண்டு கோடி ரூபாய் செலவில் விவசாயிகளின் நலனுக்காக ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டார்கள். ஆனால் அது முறையாகச் செய்யப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை என்றே சொல்ல வேண்டும். வெள்ளப்பெருக்கெடுக்கின்ற காலத்தில் கரைகளே இல்லை என்ற அளவிற்கு உள்ள அந்தக் கரைகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரத்தில் இரண்டு பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. அதில் பெரிய கண்மாய் என்பது வைகை அணைக்கட்டோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அது சுமார் 4,000 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடியது. அங்கே உள்ள இன்னொரு கண்மாய் சக்கரைக் கோட்டை கண்மாய், இதில் பெரிய கண்மாயில் வெள்ளப் பெருக்கு எடுத்து தண்ணீர் ஓடும்பொழுது சர்ப்ளஸாக இருக்கின்ற தண்ணீர்தான் இந்தக் கண்மாய்க்குக் கிடைக்கும். அவ்வாறு இல்லாமல் நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்கின்ற வகையில் சர்க்கரைக் கோட்டை கண்மாயும், பெரிய கண்மாயும் வைகையாற்றுப் பாசனத்தோடு சேர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலத்தில் பல கண்மாய்கள் உடைப்பெடுத்து, ராமநாதபுரத்தில் சர்க்கரைக் கோட்டை கண்மாய் போன்ற பல கண்மாய்கள் உடைப்பெடுத்து கடலுக்கு தண்ணீர் செல்லுகின்ற நிலை ஏற்படுகிறது. எனவே, அந்த விவசாயிகள், உடைப்பை எடுத்து அடைக்க வேண்டுமென்று அதிகாரிகளிடத்தில் பல முறை சொல்லியும் அது அடைக்கப்படாமல் இருக்கிறது. அந்த உடைப்பை அடைப்பதற்குப் பதிலாக அந்த இடத்தில், சர்க்கரைக் கோட்டைக் கண்மாயில் 3 இலட்சம் ரூபாய் அதிகாரிகள் செலவழித்தார்கள். எதற்காகச் செலவழித்தார்கள் என்றால், சட்டமன்ற தேர்தல் நடப்பதற்கு முன்பு, இன்றைய பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களும், கலைஞர் கருணாநிதி அவர்களும் ஒன்றாக வந்து, சர்க்கரைக் கோட்டைக் கண்மாய் இருக்கும் இடத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக அதை மேட்டுப் பகுதியாக ஆக்குவதற்காக மூன்று இலட்சம் ரூபாய் செலவு செய்தார்கள். ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டுப் போவதற்காக அந்த ஏழை விவசாயிகளின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. அவர்கள் ஐந்து நிமிடங்கள் பேசுவதற்காக மூன்று இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதே தவிர ஏழை எளிய விவசாயிகளின் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை; உடைப்பு அடைக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமை அங்கே இருக்கிறது என்பதை மிக்க கவலையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் வெள்ளம் வரும் பொழுது மிகவும் கடுமையாக அதிகமாகப் பாதிக்கப்படக் கூடிய பகுதி அது. இராமநாதபுரம் தொகுதியிலுள்ள அந்த விவசாயிகளுக்கு அதிகமான தொல்லைகளைத் தந்துவிட்டு கண்மாய்கள் உடைந்து பக்கத்தில் உள்ள கடலுக்குத் தண்ணீர் செல்லுகிறது. ஆகவே, அதிகாரிகள் ஆய்வு செய்து இராமநாதபுரம் தொகுதியில் மண்டபத்திற்கு அருகில் ஓடிக்கொண்டிருக்கின்ற பகுதியில் வைகையாற்றுப் பகுதியில் அணை கட்ட வேண்டும்; தண்ணீரைத் தேக்க வேண்டும். நீர்த்தேக்கம் கட்டப்பட வேண்டும் என்ற திட்டத்தினைத் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். பல நாட்களாகியும் கேட்பாறற்ற நிலையில் அந்தத் திட்டம் இருப்பதாக அறிகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதை எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களையும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

[பிற்பகல் 1-00]

அதோடு மட்டுமல்லாமல், இன்றைய தினம் ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதிலே தவறில்லை என்று கருதுகிறேன். இராமநாதபுரம் பெரிய கண்மாய் பொறுத்தவரையிலே ஏராளமான பிரம்மாண்டமான திட்டங்கள் அரசுக்கு அனுப்பபட்டிருக்கின்றன. விரிவுபடுத்த வேண்டும், ஆற்றுக் கரைகளை எல்லாம் அதிகப்படுத்த வேண்டுமென்று திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால், எந்தவிதமான நன்மைகளும் இதுவரை ஏழைகளுக்குக் கிடைக்கவில்லை. இராமநாதபுரம் புத்தியேந்தல், தொழுவலூர், காரியேந்தனூர் மரப்பாலம் வரை செல்லுகிற ஆற்றின் கரைகள் தன்ப்பட்டவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனால் கிராமங்களுக்குத் தண்ணீர் வராத நிலைமையிருக்கிறது. அதே நேரத்தில், தண்ணீர் வழிகிற நேரத்தில் அங்கே கரைகள் இல்லாத காரணத்தால் கிராமங்களுக்குச் சென்று, குடிசைகளை எல்லாம் நாசப்படுத்தக்கூடிய முறையிலே நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, கான்ட்ராக்ட் முறையில் விடாமல், புள்டோசர் வைத்து வைகை ஆற்றினுடைய அந்தப் பாதையை செம்மைப் படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையை மானியத்திற்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் சொல்லலாம் என்று கருதுகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய தலைநகர் மதுரையிலே இருக்கிறது, அலுவலகங்கள் எல்லாம் மதுரையிலே இருக்கின்றன. ஆகையினாலே, இராமநாதபுரம் மாவட்ட மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். அதிலும், இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற

ஒரு கருத்து நிலவுகிறது; புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். அப்படி வருகிறபொழுது, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இராமநாதபுரம் நகரை தலை நகராக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது நியாயபூர்வமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நிறை வேற்ற வேண்டுமென்று நியாயத்தின்பால் அன்பு செலுத்து கின்ற புரட்சித் தலைவரை மிகப் பணிவோடு கேட்டுக் கொண்டு, நீர்ப்பாசனத் துறை மானியத்தை வரவேற்று, அமைச்சரைப் பாராட்டி அமர்கிறேன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம் மீதான மானியக் கோரிக்கை இன்றைக்கு ஒரு பிரச்சினையாக, ஒரு தேசிய பிரச்சினையாக, ஒரு தேசிய விவாதமாக இருக்கவேண்டுமென்ற கோரிக்கை என்பதை நான் உணருகிறேன். இது ஏதோ நீர்ப்பாசனம், ஏரிகளுக்கான ஒரு திட்டம் என்ற நிலையில்லாமல் மனிதனுக்கு அத்தியாவசியமான ஒரு அடிப்படையான கோரிக்கை என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்பதை இந்த நேரத் திலே நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இந்தக் கோரிக்கை யிலே தமிழக அரசு கோரிக்கை எண் 36-க்கும், கோரிக்கை எண் 50-க்கும் ஆக ரூ. 66.02 கோடி தான் ஒதுக்கியிருக்கிறது. தமிழகத்தினுடைய ரூ. 1,000 கோடி வரவுக்கு, இந்த முதலீடும் செலவினமும் நியாயமா என்ற ஒரு கேள்வியைத்தான் நான் முதலாவதாக எழுப்ப ஆசைப்படுகிறேன். மூலதனத்திற்காக, ரூ. 37.69 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். எந்த, எந்தத் திட்டம் என்பதையும் இங்கே அதிகமாக விவரிக்கவில்லையென்றுதான் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தப் பிரச் சினையிலே மிக ஆழமாகவும், தீர்க்கமாகவும் எதிர்காலத்தை நோக்கி நாம் திட்டமிட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒன்றைக் கூற விரும்புகிறேன், நீர் உயர்ந்தால் வரப்பு உயரும், வரப்பு உயர்ந்தால் நெல் உயரும், நெல் உயர்ந்தால் கோன் உயரும் என்று கூறுவார்கள். அந்த அளவுக்கு ஆட்சி நிரந்தரமாக இருக்க வேண்டுமென்றால், நாட்டினுடைய பஞ்சத் தைப் போக்க வேண்டுமென்றால், அந்தத் திட்டமானது மிக மிகத் தேவை என்பதை நாம் உணர்ந்து செயல்படுத்த வேண்டு மென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ரூ. 1,000 கோடியில் ரூ. 66.02 கோடி அளவுக்குத் தான் ஒதுக்கப் பட்டிருக்கிறதென்றால், மீண்டும் வலியுறுத்துகிறேன், இது மிக மிக் ஒதுக்கப்பட்ட மானியமாக இருக்கிறது. இது ஒதுக்கப்பட்ட மானியக் கோரிக்கை மட்டுமல்ல, மனிதனுடைய வாழ்க்கைப் பிரச்சினை மானியம் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டு மென்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பாசனங்களில் ஒன்றான ஆற்றுப் பாசனத்தை நாம் நிறை வாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். 95 சத விகிதத்திற்கு நாம் நிறைவாக்கி விட்டோம் என்று கூறி இருக்கி

றார்கள். அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில், ஏறத்தாழ 36,000 ஏரிகள் இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஏரிகள் அனைத்தையும் நாம் கட்டவில்லை. ஜனநாயக ஆட்சி ஏற்பட்ட தற்குப் பின்னால் கட்டப்பட்ட ஏரிகளல்ல. ஏதோ, ஒன்றிரண்டு நாம் கூடுதலாக்கியிருக்கலாம் அல்லது ஏதோ ஒன்றிரண்டை நாம் சீர் செய்திருக்கலாம். ஆனால், ராஜா காலத்து ஏரிகள் தான் இன்றைக்கும் இருக்கின்றன. அந்த ஏரிகள் எல்லாம் இன்றைக்குச் செப்பனிடப்படுகின்றனவா என்று பார்த்தால் இல்லை. அந்த அளவுக்கு அந்த ஏரிகள் எல்லாம் இன்றைக்குத் தூர்ந்து, 3 மாதம் பாசனம் அளிக்கும் ஏரி என்று கணக்கிலே இருந்தால் கூட அது 15 நாள் கூட பாசன வசதி அளிக்காத ஏரியாகத்தான் இன்றைக்கு இருக்கிறது.

அவைகளை எல்லாம் செப்பனிடுவதற்காக இன்றைக்கு 28 கோடியே 33 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அது போதுமா என்று பார்த்தால் நிச்சயமாகப் போதாது என்பதைத் தான் இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். இதில் பகுதி வாரியாக, மைனர் இரிகேஷன் என்றும், மத்தியதர பாசன வசதி என்றும், பெரிய ஆறுகள் என்றும், சிறிய ஆறுகள் என்றும் பிரித்திருந்தாலும், ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்டிருக் கின்ற பணம் சில ஆயிரங்கள்தான் இருக்கின்றன. அது ஏனோ? இந்த அளவுக்கு இந்த மானியத்தை ஒதுக்குவதில் நியாயம் இல்லை என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கால மாற்றங்களால் திடீரென்று மழை பெய்கிறது. பிறகு 2, 3 ஆண்டுகள் வறட்சி ஏற்படுகின்றது. அந்த வறட்சியை சமாளிக்கவும் மழை அதிகமாக பெய்யும்போது அந்தத் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தவும் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். எங்கெங்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அங்கங்கே நதிகளில் அணைகளைக் கட்டுவதற்காக மேலும் திட்டங்களைத் தீட்டுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்பதை கூறிக்கொள்கிறேன். சில வெள்ளப் பெருக்கத்தின் காரணமாக அந்த தண்ணீரில் பெரும்பகுதி கடலில் போய் சேருகிறது. தமிழ் நாட்டில் ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங் களிலே ஓரளவுக்கு அதிகமாக மழை பெய்கின்றது.

அந்த நவம்பர் பெருமழை காரணமாக, புயல் காரணமாக பெரும் வெள்ளம் கடலில் சேருகிறது. அந்தக் கடலிலே சேரு கின்ற வெள்ளத்தை தடுத்து நிறுத்தி அதை எப்படி நாம் நிலங் களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை ஆராய்ச்சி செய்ய

வேண்டும். அதற்குக் கூட ஆராய்ச்சி நிலையத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்குக் கட்டட வசதி கூட ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை வரவேற்றாலும் கூட அதைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக இந்த மாநிலத்திலே வடார்க்காடு மாவட்டம்தான் அதிகமான நிலங்களைப் பெற்றிருக்கிறது.

அங்கே இருக்கக் கூடிய ஏரிகள் ஏறத்தாழ 3,188 என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு மாநிலத்திலேயே அதிகம் ஏரிகள் இருக்கின்ற மாவட்டம் வடார்க்காடு மாவட்டம் தான். வேறு இயற்கையான நீர்ப்பாசன வசதிகள் இல்லை என்றாலும் அந்த மாவட்டத்து மக்கள் அதைப் போன்றவைகளையும், நிலத்தடி நீரையும் நம்பித்தான் பயிர் செய்கிறார்கள். எனவே அங்கே புதிய திட்டங்கள் ஏதேனும் இருக்கிறதா அல்லது அறிவிக்கப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறதா என்று பார்த்தால் மிகவும் வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே உங்கள் ஆட்சி வந்தபோது 1977ஆம் ஆண்டு நீங்கள் நிதி நிலை அறிக்கையிலே, வடார்க்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு என்னும் இடத்தில் கமண்டியாற்றுக்கு குறுக்கே 3.55 கோடி ரூபாய் செலவில் நீர்த் தேக்கம் ஒன்றை அமைப்பது நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும். இது முக்கியமான புதிய திட்டமாகும். இந்த நீர்த் தேக்கத்திலே 1962 ஏக்கர் நிலங்கள் புதிதாக பாசன வசதி பெறுவதுடன், ஏற்கனவே பாசனம் பெற்று வரும் 10.386 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி படுத்தப் படும் என்று அறிக்கை வைத்து, அதற்காக ஏறத்தாழ 25 லட்சம் ரூபாய் மான்யத்தில் ஒதுக்கி, அதை இன்னும் சிந்திக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

அதேபோன்று நாகநதிக்கு குறுக்கே உள்ள அமிர்தி என்ற இடத்தில் ஒரு நீர்த் தேக்கத்தை கட்டுவதாக ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வு நடத்தி நல்ல முறையில் அரசுக்கு வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது அதை கட்டாததன் நோக்கம் என்ன? அதுவும் 1978 ஆம் ஆண்டு நீங்களே அறிக்கையில் சமர்ப்பித்திருக்கிறீர்கள். இந்தக் காலதாமதத்திற்கான காரணம் என்ன? இதில் லாப நட்டக் கணக்கு, வியாபாரக் கணக்குப் பார்க்கக் கூடாது. அப்படிச் செய்வது நியாயம் அல்ல. இது நீண்ட நெடும் திட்டம் என்பதையும் அதனால் உணவு உற்பத்திப் பெருக்கம் ஏற்படும் என்ற நோக்கோடு செயல்பட வேண்டும். இதுபோன்ற பல திட்டங்கள் எங்கள் மாவட்டத்திலே இருக்கின்றன. அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று 1974 ஆம் ஆண்டு இங்கே ஒரு மாநாட்டை கூட்டினார்கள்,

வடார்க்காடு மாவட்ட நீர்ப்பாசன மாநாடு என்று. அதிலே பல ஆலோசனைகள் சொல்லப்பட்டன. அந்த ஆலோசனைகளின் நிலை என்ன? அவைகளை அமல்படுத்துவதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள் என்பதையும் கூறிக் கொண்டு மேலும் எங்கள் மாவட்டத்தில் சிறிய சிறிய பாசன பாண்டுகள் இருக்கின்றன. நிலத்தடி நீர் மிகவும் ஆழமாகப் போய்க் கொண்டு இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தாற்போல் உணவு உற்பத்தி செய்கின்ற மாவட்டம் எங்கள் மாவட்டம்தான். அந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர் ஆழமாகப் போய்க் கொண்டு இருப்பதால், அதைப் பலப்படுத்துவதற்காக சிறு சிறு நீர்த் தேக்கங்களை அமைக்க வேண்டும். அதைப்போன்ற திட்டங்களை அங்கே அமல்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்து அதை ஒரு அறிக்கையாகக் கூட வெளியிட்டது. அதனுடைய நிலை என்ன? அவைகளை நிறைவேற்றுகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-10]

அங்கே அதிகமாக ஒரு போக சாகுபடியில் கிட்டத்தட்ட 3,41,718 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இரண்டு போக சாகுபடி நிலங்கள் 16,62,728 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. ஆகவே, ஒரு போக சாகுபடி நிலங்களை இரண்டு போக சாகுபடி நிலங்களாக மாற்றும் வகையில் அதிகமான அளவிற்கு நிலத்தடி நீர் கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் சில திட்டங்களை எங்கள் மாவட்டத்திற்கு அறிவித்து இருக்கிறீர்கள். அவற்றை நிறைவேற்றித் தந்தால் எங்களுக்கும் நன்மை, எதிர்காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்மை என்ற ரீதியிலும், தேசிய ரீதியில் இருக்கும் திட்டங்களான கங்கா-காவிரி இணைப்பு, கிருஷ்ணா நதி நீர் கொண்டு வருதல் போன்ற மற்ற திட்டங்களை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட மாநில அரசுகளோடும், மத்திய அரசோடும் பேசி, அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, 1978-79 ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்ட செண்பகத்தோப்பு, அமிர்தி, கீழரசம்பட்டு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவை முன் உள்ள நீர்ப்பாசன மான்யக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் விவசாயிகள் பலவகைகளில் பயனடைந்து வருகின்றனர்.

அதற்கு முதற்கண் என் பாராட்டுக்களைத் தெரிவித்து கொள்கிறேன். மேலும் தமிழகம் தன்னிறைவு பெற சில அணைக் கட்டுத் திட்டங்களை உடனடியாக செய்து கொடுக்க நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, என் தொகுதி யில் உள்ள திட்டங்களைப் பற்றித் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய நான்குநேரி தொகுதியைப் பொறுத்த வரையில், 1975 ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே அந்தக் கொடுமுடியாறு திட்டம் வேண்டும் என்று கோரப்பட்டு, அதற் கான ஆணைகள் அரசு ஆணை 322, பொதுப்பணித் துறை, தேதி 22—2—1975 இல் கொடுக்கப்பட்டுள்ளது. அப்போதைய மதிப்பீடு 116 லட்சம் ரூபாய். கிட்டத்தட்ட அந்தத் திட்டத் தால் 5,089.82 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அந்தத் திட்டத்திற்கான பணிகள் துவங்கப்பட்டு 30 லட்சம் ரூபாய் அளவிற்கு குடியிருப்பு இல்லங்கள் அமைக்க தளவாடக் கருவிகள் வாங்கப்பட்டு 1978 இல் அந்த வேலை நிறுத்தப்பட்டது. மீண்டும் அதற்கான திருத்திய மதிப்பீடு போடப்பட்டபோது 187 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லப்பட்டது. தற்போதைய மதிப்பீடு 248 லட்ச ரூபாய் என்று கூறிக் கொண்டு இருக்கிறார் கள். ஏற்கனவே 30 லட்சம் ரூபாய் அளவிற்கு செலவழிக்கப்பட்டு விட்ட அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிடுமோ என்ற பயம் அங்கே இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறுத்துவதற்காக தனியார்கள் முயற்சித்து வருவதாகத் தெரிகிறது. இது குறித்து சமீபத்தில் நடைபெற்ற நீர்ப்பாசனக் கருத்தரங்கில் கூட பேசும்போது முதன்மைப் பொறியாளர் கூறினார்கள். 3 ஆண்டுகாலமாக கிடப்பில் போடப்பட்டுள்ள இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே 30 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு இருப்பதால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் நாங்குனேரி, களக்காடு பகுதியில் பச்சையாறு திட்டம் போடப் பட்டு, அதற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வந்து அடிக்கல் கூட நாட்டிவிட்டுச் சென்றார்கள். ஆனால் அந்தத் திட்டம் இதுவரையில் நிறை வேற்றப்படவில்லை. அந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதோ என்று எண்ணுகிற வகையில் அது செயல்படாமல் இருக்கிறது. அதனுடைய மதிப்பீட்டுத் தொகை 225 லட்சம் ரூபாய். அடிக்கல் நாட்டிய பிறகு எந்தப் பொறியாளரும் அதை வந்து பார்க்கவில்லை. வன இலாகாவினர் அதற்கு இடை யூறாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது குறித்து இங்கே கேள்வி எழுப்பப்பட்டபோது அமைச்சர் அவர்கள் பதில் தருகிற நேரத்தில் வனத்துறை ஒத்துழைப்போடு பொதுப்

பணித்துறை அதை நிறைவேற்றும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் அதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்து 13,000 ஏக்கர் நிலங்களுக்கு பயன் அளிக்கக்கூடிய அந்தப் பச்சையாறு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நம்பியாறு கால்வாய்த்திட்டம். நம்பியாற்று கால்வாயில் தண்ணீர் வருமானால் அங்கிருக்கிற விவசாயிகள் பிரச்சனை மட்டுமல்ல; அந்தப் பகுதியில் குடிநீர் பிரச்சனையும் தீர்க்கப்பட்டுவிடும். இது குறித்து மதிப்பீடு தயாரிக்கப் பட்டுவிட்டது என்று 1978-ல் சட்டமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட பொறியாளர்களை அழைத்துப்பேசி, அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழந்தொழி சாகுபடிக்காக நெல்லை மாவட்டத்தில் கன்னடியன் கால்வாயிலும் மணிமுத்தாறு பிரதான கால்வாய் அணையிலிருந்தும் திறக்கப்படுகிற தண்ணீர் அங்கே திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் பகுதிகளுக்குச் செல்கிறது, மணிமுத்தாறு பிரதான கால்வாய் அணையில் 80 அடிக்கு மேலுள்ள தண்ணீர் அந்த பழந்தொழி சாகுபடிக்கு அங்கே செல்கிறது. ஆனால் மணிமுத்தாறு பிரதான வாய்க்காலில் 1 முதல் 4 ரீச்களுக்கு 80 அடிக்கு மேலுள்ள தண்ணீர்தான் பாசனத்திற்கு உதவுகிறது; அதற்கு கீழே ஒரு அடி இறங்கினால் கூட தண்ணீர் பாசனத்திற்கு பயன்பட முடியாது; கால்வாயில் தண்ணீர் வராது. ஆகவே, கன்னடியன் கால்வாய் பாசனத்திற்கு மணிமுத்தாறு பிரதான கால்வாய் பாசனத் தண்ணீர் தேவைப்படும்போது தண்ணீர் திறக்கப்பட வேண்டுமென்றால் மணிமுத்தாறு பிரதான கால்வாய் பாசனத்தில் 80 அடிக்கு மேற்பட்ட தண்ணீரை 1 முதல் 4 ரீச்களுக்கு கட்டாயமாக விட்டுவிட்டு, 80 அடிக்கு கீழ்ப்பட்டு உள்ளதை தாமிரவருணி பாசனத்திற்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஆலத்துறை ஆறு திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு, 1979 ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் நீர்ப்பாசன கருத்தரங்கில் பொறியாளர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்துகொண்டு சில வாக்குறுதிகளை கொடுத்தார்கள். அங்கே மாபெரும் பாறை இடிந்து விழுந்து தண்ணீர் போகவில்லை. இரண்டாண்டு காலமாக அது பயன்படாமல் இருக்கிறது. ஆனால் 1979 ஆம் ஆண்டு முதல் நிலை பொறியாளர் வந்து பார்த்துவிட்டு, நிச்சயமாக மிக விரைவில் இந்த ஆலத்துறை ஆற்று வாய்க்காலில் தண்ணீர் விடுவோம்; அந்தப் பாறை அப்புறப்படுத்தப்படும் என்று சொன்னார். ஆனால் இதுவரை அதற்கு எந்த

விரமான முயற்சியும் அதிகாரிகளால் செய்யப்படவில்லை. உடனடியாக அந்தப் பாறையை அகற்றி, அந்த வாய்க்காலில் தண்ணீர் விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மணிமுத்தாறு பாசனத்தில் கிட்டத்தட்ட 450 குளங்கள் பயன்படுகின்றன. இதில் ரிசர்வ் டாங்குகளும் இருக்கின்றன. ரெகுலர் டாங்குகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு குளத்திற்கும் தனித்தனி வாய்க்கால் இல்லாததால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் நேரமும் வீண், பணமும் வீணாகச் செலவழிகின்றது. இப்படிப்பட்ட ஒவ்வொரு குளத்திற்கும் சில இடங்களில் ஓடை இருக்கிறது. சில இடங்களில் குறுகிய தூரம் வெட்ட வேண்டியிருக்கிறது. விவசாயிகள் நல்ல முறையில் பயனடையும் வகையில் ஒவ்வொரு குளத்திற்கும் தனித்தனியாக வாய்க்கால் வெட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி தனித்தனியாக வாய்க்கால் வெட்டும் வேலையை பஞ்ச நிவாரணப் பணியின்கீழ் எடுத்து செயல்படுத்துவதற்காக சில சிறு விவசாயிகளிடமிருந்து எடுக்கப்பட்ட நிலத்திற்கு உரிய தொகை இதுவரையில் தரப்படவில்லை. கிட்டத்தட்ட 3,4 ஆண்டுகள் ஆகிவிட்டன. அரசுக்கு கொடுத்த நிலத்திற்கு இதுவரையில் உரிய தொகை கிடைக்கவில்லை என்று அந்த விவசாயிகள் தாசில்தாரிடம் சொன்னார்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட பொறியாளரைக் காட்டுகிறார்கள். பொறியாளரிடம் போய் கேட்டால் அவர்கள் தாசில்தாரை கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அந்த ஏழை விவசாயிகளுக்கு உடனடியாக உரிய தொகை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல களக்காடு பகுதியில் வடமலையான் கால்வாய் ஏராளமான விவசாயிகளுக்கு பயன்படுகிறது. அதனால் என் தொகுதியிலுள்ளவர்கள் மட்டுமல்ல இராதாபுரம் தொகுதியிலுள்ளவர்களும் பயனடைகிறார்கள். அதிலே சிமிண்ட் லைனிங் போட வேண்டுமென்று ஒரு திட்டத்தை இன்று இருக்கிற முதன்மை பொறியாளர் அவர்கள் நெல்லையில் சூப்பிரண்டிங் எஞ்சினியராக இருக்கும்போது தயாரித்து, எஸ்டிமேட்டும் தயார் செய்தார்கள். ஆனால் இதுவரை வேலை ஆரம்பிக்கப்படவில்லை. சமீபத்தில் நடைபெற்ற நீர்ப்பாசன கருத்தரங்கில் சொன்னபோது அதை இரண்டு பகுதிகளாகப் பிரித்து லைனிங் போடுகிறோம் என்று சொன்னார்கள். வடமலையான் கால்வாயில் சிமிண்ட் லைனிங் போடப்படாத காரணத்தால், அங்கே பக்கத்தில் பம்புசெட் வைத்து, மோட்டாரைப் பயன்படுத்தி ஓடுகின்ற தண்ணீரை எடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்துவதால் அந்தக் கால்வாயின் பிரதான

பாசனத்திற்கு மிகவும் பாதகமாக இருக்கிறது. ஆகவே, இந்த லைனிங் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என் தொகுதியைப் பொறுத்த மட்டில், கொடுமுடியாறுத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நாங்கள் பாரத பிரதமரை கேட்டபோது, நாங்கள் பதவிக்கு வந்தால் மத்திய அரசு உடனடியாக அதைச் செய்யும் என்று சொன்னார்கள். அவர்கள் தேர்தலிலே வெற்றிபெற்று பிரதமர் ஆன பிறகு இதுபற்றி கடிதம் எழுதப்பட்டது. விவசாய சங்கத்தின் சார் பாகவும் இதுபற்றி பிரதமருக்கு கடிதம் எழுதப்பட்டது. அதற்கு அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில், இப்படிப்பட்ட திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றுவதில்லை, மாநில அரசுதான் செய்ய வேண்டும். மாநில அரசை தொடர்பு கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். தேர்தலின்போது நாங்கள் செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்து வாக்கு களைப் பெற்று அமைச்சர் பதவி பெற்ற பின்னால் தமிழக அரசுதான் செய்ய வேண்டுமென்று கூறுகின்ற காரணத்தாலும் தமிழக மக்கள் இந்த அரசின்மீது நம்பிக்கை வைத்திருக்கிற காரணத்தாலும் இந்த கொடுமுடியாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1–20]

அடுத்து கிட்டத்தட்ட 13 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசனம் அளிக்கின்ற பச்சையாறு திட்டத்திற்காக திராவிட முன் னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த நேரத்திலே மரியாதைக் குரிய கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். ஆனால் இன்றுவரை அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எதிர்க்கட்சியினர் பேசுகின்றபோது நாங்கள் போட்ட திட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற வகையில் செய்யவில்லை என்று தவறான விளம்பரம் செய்கிறார்கள். ஆகவே உடனடி யாக பச்சையாறு திட்டத்தையும் கொடுமுடியாறு திட்டத்தை யும் வடமலையான் சிமெண்ட் லைனிங் திட்டத்தையும் நிறை வேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆலத்துறை ஆற்றில் அடைக்கப்பட்டிருக்கின்ற பெரும் பாறைகளை அகற்றி அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் ரிசர்வ் டேங்குகளாக இருப்பதை ரெகுலேட்டர் டேங்குகளாக மாற்றி, அனைத்து குளங்களுக்கும் தனிக் கால்வாய் திட்டத்தைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 80 அடிக்கு மேற்பட்ட தண்ணீர் பிரதானக் கால்வாயில் கிட்டத்தட்ட 1 முதல் 4 ரீட்ச்

களுக்கு பாய வசதி இருக்கின்றது. ஆனால் 80 அடிக்குக் கீழே இருக்கின்றபோது பாய முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் 80 அடிக்கு மேல் உள்ள தண்ணீரை மணிமுத்தாறு பிரதான கால்வாய் பாசனத்திற்குத் தான் கொடுக்க முடியும் என்பதை வலியுறுத்தி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமருகிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைத்து தேவைகளை வலியுறுத்த நான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பல மாநிலங்களிடையே ஓடுகின்ற நதியான காவிரி நதி, கிருஷ்ணா நதி போன்ற பல பிரச்சினைகளைப்பற்றிப் பேசினார்கள். அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணப்படாமல் நீண்டுகொண்டே போகின்றன என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய தேவைகளை வலியுறுத்திக்கூறி விடாப்பிடியாக இருக்கின்ற காரணத்தாலே அந்தப் பிரச்சினைக்கு பைசல் காண முடியாத நிலைமை ஏற்படுகின்றது. எனவே பிரச்சினைக்கு தீர்வு காண்கின்ற வகையில் இரண்டு மாநிலங்களையும் சேர்ந்த அல்லது மத்திய அரசைச் சேர்ந்த நிபுணர்கள் குழு அமைத்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கின்ற நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலித்து இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்கின்ற வகையில் அரசு வலியுறுத்த வேண்டும். ஏற்கெனவே உடன்பாடு ஏற்பட்ட சில திட்டங்கள் கூட முடக்கப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே விளவங்கோடு பகுதியில் நீர்ப்பாசனம் தருகின்ற நெய்யாறு இடது கரை சேனல் திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகின்றது. அதை விஸ்தரிப்பதைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் கேரள அரசு தண்ணீர் பங்கீடு தருவதற்கு மறுத்துக்கொண்டிருக்கிறது. உடன்பாட்டின்படி நமக்குக் கிடைக்க வேண்டிய அளவில் பாதித் தண்ணீர்தான் கிடைக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. எனவே அந்தத் திட்டத்தை விஸ்தரிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். இது வெறும் சுண்டுடைப்பு. தண்ணீர் பெறுகின்ற உரிமை நம்முடையது. ஆகவே அந்த உரிமையை வலியுறுத்தி நெய்யாறு இடதுகரை சேனல் விஸ்தரிப்புத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய மிக முக்கிய நீர்ப்பாசன திட்டமாக இருப்பது கோதையாறு நீர்ப்பாசன திட்டமாகும். அங்கே பேச்சிப்பாறை அணை கட்டியிருக்கிறார்கள். அந்த அணையில் தேங்கி இருக்கின்ற தண்ணீர் நிலத்தின் அடித்தளத்திலிருந்து

16 அடிக்கு வருகின்றபோது மடைகளில் தண்ணீர்விட முடியாத நிலைமை ஏற்படுகின்றது. ஏறத்தாழ 2 சதுரமைல் விஸ்தீரணத்திற்கு நீர் பரப்பு இருந்தாலும் கூட 16 அடிக்குக் குறைவாக நீர் வருகின்றபோது அந்த நீர் வ்வசாயிகளுக்குப்பயன் படுத்தப்பட முடியாத நிலையில் தேங்கிக் கிடக்கின்றது. எனவே நிபுணர்கள் சொல்கின்ற கருத்துப்படி அந்த அணைக்கட்டின் பிறிதொரு பகுதியில் சிறிய அணை ஒன்று கட்டி நில அடித்தளத்தின் நிலைக்கு ஒரு மடை வைப்பதாக இருந்தால் அதிலே இருந்து குறுகிய தூரத்திற்கு புதிய கால்வாய்கள் மூலம் ஏற்கனவே இருக்கின்ற பெருஞ்சாணி அணைக்கு நீரைக் கொண்டு சென்று விவசாயிகளுக்கு அதைப் பயன்படுத்த முடியும். ஆகவே இதுகுறித்து நிபுணர்கள் சொல்லி இருக்கின்ற இந்தத் திட்டத்தை அரசு ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோதையாறு நீர்ப்பாசனம் தொடர்பான கால்வாய்களில் பல சந்தர்ப்பங்களில் உடைப்புக்களும், ஒழுக்குகளும் ஏற்படுகின்றன. அதைத் தகுந்த சமயத்தில் சீர் செய்தால் கடைநிலைப் பகுதிகளுக்கும் நீர் வருகின்ற சூழ்நிலையை உருவாக்க முடியும், ஏற்கெனவே நீர் அணைக்கட்டில் நிரம்பி இருந்தாலும் கூட இத்தகைய கோளாறுகளின் காரணமாக கடைநிலைப்பகுதி நிலங்களுக்கு நீர் எட்டுவதிலே தடை ஏற்படுகின்றது. அதற்கும் தக்க சமயத்தில் ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் கோதையாறு திட்டம் தொடர்பாக திருவிதாங்கோடு கால்வாயிலிருந்து கோடியூர் கால்வாயில் புன்னம்மூட்டு பிளாக்கு வரையில் கால்வாயை நீட்டிக்க வேண்டும் என்ற நீண்ட நாளைய வேண்டுகோளை இங்கே நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சித்தாறு பட்டணங்கால் கால்வாய் திட்டத்தைச் சேர்ந்த கால்வாயிலிருந்து கப்பியறை, வாழைத்தோட்டம் போன்ற இடங்களுக்கு கிளைக் கால்வாய்களை வெட்ட வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான திட்டம். நீண்ட நெடுங்காலமாக வலியுறுத்தப்பெற்று வருகிற ஒரு திட்டம். பலநோக்குத் திட்டம். 'மாம்பழத்துறை அணைத் திட்டம். இந்தத் திட்டம் நீர்ப்பாசன வசதியை தருவதோடு மட்டும் அல்லாமல், சில நகரங்களுக்கும், பஞ்சாயத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்கு பயன் பெறுகிற ஒரு நல்ல திட்டம், அந்தத்திட்டத்திற்கான எஸ்டிமேட்டுகள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு, இப்பொழுது தல அதிகாரிகளின் பரிசீலனையில் இருப்பதாக இங்கே கொடுக்கப்பெற்றிருக்கிற குறிப்பேடுகளில் சுட்டிக்காட்டப்பெற்றிருக்கின்றன. நிறைவேற்றப்பெறாமல் தேங்கிக்கிடக்கின்ற இத் திட்டத்தில் அரசாங்கத்தினுடைய முழு கவனமும் செலுத்தப்பட

அமைய வேண்டும். ஆனால் இந்த அரசு எல்லாவற்றிலும் இருப்பதுபோல் இதிலும் கவனக்குறைவாக இருக்கிறது என்ற குற்றச் சாட்டை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி பல்வேறு காலங்களில் நாம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் கூட இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கம் நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறது.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையில் பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் இருபத்தெட்டு கோடி செலவு செய்வதற்காகக் கோரியிருக்கிறார்கள். அதிலே சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப் பட்டிருப்பது ரூ. 2,53,14,000 ஆகும். இது எந்த வகையிலே நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. ஏறக்குறைய 70 சத வீதம் அளவிற்கு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நம்பியிருக்கிற தமிழ்நாட்டில் இன்று 28 கோடி ரூபாயில் இரண்டரை கோடி ரூபாய் அளவிற்குத் தான் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது வேடிக்கையாகயிருக்கிறது. ஆகவே வருகிற ஆண்டுகளிலாவது அந்தத் தொகையைக்கூட்டி அதிகப்படியாகச் செலவழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்கிறபோது தமிழ் நாட்டில் இருக்கிற ஏறக்குறைய அத்தனை பகுதிகளிலும் உள்ள ஏரிகள், கண்மாய்கள், குளங்கள் இவற்றில் தூர் வாருதல், வண்டல் எடுத்தல், கரைகளைப் பலப்படுத்துதல் போன்றவற்றை ஒரு போதும் செய்ததாகத் தெரியவில்லை. செய்ததுகூட என்றைக்கோ ஒரு சில செய்ததாகத் தெரிகிறது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் செய்யும்போது நல்ல விளம்பரம் பெற முடியும். ஆனால் ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் இவற்றை சீர்திருத்தம் செய்கிறபோது அத்தகைய விளம்பரம் கிடைப்பதில்லை என்ற காரணத்தால் செய்யப்படவில்லையோ என்று நான் சந்தேகப்படுகிறேன். மக்களுக்கு எது பயன் அளிக்குமோ அதை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உறுதி செய்யப்பட்ட பாசன வசதிகள் என்று சொல்லும்போது அந்த ஏரிகள், குளங்கள் அனைத்திற்கும் 'அஷ்யூர்ட் சப்ளை ஆப் வாட்டர்' கிடைக்க வேண்டும். நன்செய் நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி உறுதி செய்யப்பட்டுள்ளதால்தான் நன்செய் தீர்வை செலுத்துகிறார்கள் நன்செய் நில விவசாயிகள். உறுதி செய்யப்பட்ட அளவிற்கு, கொள்ளளவிற்குத் தக்கபடி, பாசன வசதி தேவைக்குத் தக்கபடி பாசன வசதிகள் செய்து கொடுக்கப் படுகின்றனவா என்றால் உண்மையில் கிடையாது. பல ஏரிகள் பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன. கரைகள் பலமில்லாமல்,

123067

பல ஏரிகளை ஏராளமான பேர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு சிலருக்கு பட்டா வழங்கப்படுகிற தன்மையில் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஏரிகளில் தண்ணீர் நிரம்பினாலும் ஆக்கிர மிப்பாளர்கள் சமயத்தில் அதை வெட்டி விடுவதால் அதை நம்பியிருக்கிற ஆயக்கட்டு நிலங்களுக்கு ஒரு முறை கூட தண்ணீர் பாய்ச்ச போதுமான தண்ணீர் இருப்பதில்லை. இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட குளங்கள், ஏரிகள் இவற்றை எடுத்துப் பார்த்தால் அன்று ஒரு ஏரி தண்ணீர் 400 ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கும் என்றால் இன்று அந்த ஏரியில் உள்ள தண்ணீரைக் கொண்டு 40 ஏக்கர்களுக்குக் கூட தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலைதான் இருக்கிறது. அந்த அளவிற்கு கிராமங்களில் உள்ள குளங்கள், ஏரிகள் செம்மைப் படுத்த வேண்டிய நிலையில் இருப்பதைக் காண்கிறோம். ஏரிகளில் தண்ணீர் கொள்ளளவு மிகமிகக் குறைந்து போயிருக்கிறது. ஒரு ஏரியில் நான்கு மாதங்களுக்கான தண்ணீர் பிடிக்க வேண்டும் என்று இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு திட்டம் இட்டிருந்தால் அதிலிருந்து பாய்ச்சப் படுகிற தண்ணீர் இப்போது நாற்பது நாட்களுக்குத்தான் வரும். நான்கு மாதங்களுக்கு இருக்க வேண்டிய தண்ணீர் இப்போது நாற்பது நாட்களுக்குத்தான் வருகிற நிலை இருக்கிறது. ஆனால் அன்று செலுத்தி வந்த ஆயத் தீர்வையைவிட விவசாயிகள் இன்று அதிகப்படியாகச் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். அதோடுகூட இப்போது மின் கட்டணம் வேறு செலுத்த வேண்டி யிருக்கிறது விவசாயிகள். ஆயில் என்ஜினுக்கு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆக அதிகப்படியாக செலவு செய்ய வேண்டிய ஒரு மோசமான சூழ்நிலையில்தான் தமிழகத்தில் உள்ள பெரும் பகுதி விவசாயிகள் இருக்கிறார்கள்.

இந்த அரசு வல்லமை பொருந்திய அரசு என்று சொல்கிறார் கள். எதிலே வல்லமை என்று சொன்னால், எத்தனை இருக் கிறதோ அத்தனை உறுதிமொழிகளையும் வாரி கொட்டி விடுகிறார்கள். அப்படி உறுதிமொழிகளைக் கொடுத்து விட்டு நிறைவேற்றாத நிலை இந்த அரசாங்கத்திற்கு ஒரு தொடர் கதையாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த நீர்ப் பாசனத் திட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற, உறுதி செய்யப் பட்டிருக்கின்ற அந்த வாக்குறுதிகளைப் புறக்கணித்து விடக் கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தங்களால் இயலாவிட்டாலும் கூட, நிலவள வங்கி மூலம் ஏற்கனவே விவசாயிகள் கடன் பெற்று வந்தார்கள். கூட்டுறவு மானியத்திலே சொல்லுகிறபோது, நீர்ப்பாசன கடனையெல்லாம் நிறுத்தி விட்டு, தேயிலைத் தோட்டங்கள், மின்வாரியம் போன்ற பெரிய காரியங்களுக்கு கடன் திருப்பப்பட்டிருக்கின்றது என்று சொல்லு கிறார்கள். ஏற்கனவே அப்படி அல்லாமல் நீர்ப்பாசன வசதி ஏற்படக் கூடிய கிணறுகள், கிணறு வெட்டுதல், பைப் லைன

போடுதல் போனறவற்றிற்கு எல்லாம் ஏராளமான கடனை நிலவள வங்கியிலே இருந்து விவசாயிகள் பெற்றுக் கொண்டு வந்தார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கடன்கள், நீர்ப்பாசனக் கடன் போன்றவைகளை வேறு திசைக்குத் திருப்பி விடுகின்ற சூழ்நிலையை நீக்கி, கண்டிப்பாக இந்த நிலைமையை மாற்றி ஆக வேண்டும் என்பதை நான் தாழ்மையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு இந்த அரசுக்குக் கடமை இருக்கிறது. காரணம், விவசாயிகளுக்கு இருக்கிற ஒரே ஒரு இடம் நில வள வங்கிதான். அந்த வசதிகளை மீண்டும் அவர்கள் பெறுகின்ற முறையில் இருக்க, நேயிலைத் தோட்டக்காரர்களுக்கும், மற்ற வேறு நிறுவனங்களுக்கும் போகாத நிலையில் இதை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆற்றிலே வெள்ளம் வருகின்றபோது வெள்ளத்தால் பாழடைகின்ற நிலங்களை மீண்டும் புதுப்பிக்கின்ற வேலைகளை எல்லாம் ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மிகவும் பொறுப்பாக செய்து வந்தது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பெண்ணாற்று வட கரையில், விழுப்புரம் தாலுகாவில் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டபோது அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் நேரடியாக வந்து புல்டோசர்களை வைத்து, தானே முன்னின்று 6, 10 அடிக்கு மண் மேடிட்ட நிலங்களை எல்லாம், 10 ஏக்கர்கள், 5 ஏக்கர்கள் நிலங்களை எல்லாம், வீணான நிலங்களை சீர்படுத்திக் கொடுக்கும் வழிமுறைகளைச் செய்தார்கள். ஆனால், சென்ற ஆண்டுக்கு முன்பு வெள்ளம் வந்தபோது விழுப்புரம் பகுதியில் பெண்ணாற்றின் வடகரை பகுதியில் மண் மேடிட்ட பகுதிகளிலே, குடிசைகளிலிருந்து வரமுடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால் இந்த அரசு அவைகளை எல்லாம் கண்ணெடுத்துக்கூட பார்க்கவில்லை; அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலை இருந்தது. அப்படி இல்லாமல், மீண்டும் அவர்கள் வாழலாம் என்று சொன்னால், பெண்ணாற்றின் வடகரைப் பகுதியில் தண்ணீர் புகுந்த கிராமங்களில் தண்ணீர் புகுந்து பயிர்களையும், நெல்களையும் பாழாக்காத வகையில் பாசனத்தை ஒழுங்குபடுத்துகின்ற முறையில், கரைகளை பலப்படுத்தி, பாதையை அமைத்துத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கங்கை-காவிரி இணைப்பு என்றெல்லாம் இங்கே பல உறுப்பினர்களால் பேசப்பட்டது. அதைப் பற்றி இந்த அறிக்கையிலே விவரம் இல்லை. கங்கை-காவிரி இணைப்பு நடைபெற முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு நடைபெறும்போது, தமிழகத்தின் பெரும் பகுதிகளுக்கு மாத்திரமல்ல; அதன் தொடர்பாக இது அகில இந்திய தொடர்புள்ள பிரச்சினையாகிறது. எனவே, இதிலே ஊக்கம் செலுத்த வேண்டியது இந்த அரசின் கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து அதாவது கங்கை-காவிரி இணைப்பைப் பற்றி அண்மையில் பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக சொல்லி விட்டார்கள். இது கற்பனை, நடக்க முடியாத ஒரு காரியம் என்று தெளிவாக இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்ட போது சொன்னார்கள். அதைத் தெரிந்த பிறகு, இவர்கள் இதைச் சொல்கிறார்களா? அல்லது அவரது கருத்தைச் சொல்கிறாரா?

திரு. கு. பா. பழனியப்பன்: தமிழக அரசு அப்பேர்ப்பட்ட எண்ணத்தை கைவிட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மேலும், காவேரி நீரைப் பொறுத்தவரையில், இதிலே மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பிரச்சினை என்று சொல்கிறார்கள். அப்படிப் பேசுகிறபோது, நம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்காத நிலையில் எப்படி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு எண்ணிப் பார்த்து அதை செயல் படுத்த வேண்டுமென்றும் அதற்குத் தீர்வு காண வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மேற்கே ஓடுகின்ற நதிகளை கிழக்கே நீர்ப் பாசனத்திற்கு திருப்புகிற பணியிலே ஈடுபடுவதாக அதிலும் குறிப்பாக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக இதிலே இரகசியப் பேச்சு திட்டம் இருக்கிறது. இப்போது பேசினால் மன்றத்திலே ஒரு பிரச்சினையாக இருக்கும் என்று அன்றைய தினம் தெரிவித்தார்கள். இரகசியப்பேச்சாக இருந்தாலும் சரி வெளியே தெரியக் கூடிய செய்தியாக இருந்தாலும் சரி இந்த நாட்டு மக்கள் பயன் பெறத்தக்க வகையில் இதை உடனடியாகச் செய்ய வேண்டும். இந்த அரசு இதிலே அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-40]

நான் மீண்டும் சிறு பாசனத் திட்டங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சிறு நீர்ப்பாசன ஏரி, குளங்கள் மூலமாக ஏராளமான வருமானம் வருகிறது. மீன் மகசூல் மூலமெல்லாம் பல லட்சக்கணக்கான ரூபாய் வரக் கூடிய நிலை இருக்கிறது. இந்த அரசு அதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். இன்றைய தினம் சரியான கண்காணிப்பு இல்லாமல் சிலர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது கிராமங்களில் பெரிய சண்டை சச்சரவுகள் ஏற்பட மூலகாரணமாக இருக்கிறது. தமிழகத்திலுள்ள அத்தனை பகுதிகளிலுள்ள ஏரி, குளங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கணக்கிட்டால் பல கோடி ரூபாய் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்தக் குளங்

களை எல்லாம் சீர்படுத்த வேண்டும். 100 ஏக்கருக்குக் குறைவாக பாசனம் பெறக் கூடிய குளங்களை பஞ்சாயத்து சீர்படுத்த வேண்டுமென்றும் அதற்கு மேல் உள்ளவற்றை பொதுப் பணித் துறை செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். யார் செய்தாலும் சீராகச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் உண்மையிலேயே கண்காணிக்க வேண்டுமென்றால் அதற்காக ஒரு தனி அமைப்பையே, வாரியத்தையே ஏற்படுத்த வேண்டும். சிறு பாசனத் திட்டங்களை ஒரு அமைப் பின்கீழ் கொண்டு வருவதன் காரணமாக அவற்றைச் சீர்படுத்தும் பணியைச் செய்ய முடியும். தற்போது மழை வெள்ள காலங்களில் மட்டுந்தான் அவை கவனிக்கப்படுகின்றன. தனி அமைப்பை ஏற்படுத்தினால் கோடை காலத்தில் கூட அவற்றைச் செப்பனிடும் வாய்ப்பு ஏற்படும். சீராக அவற்றைப் பராமரிப்பதன் மூலம் கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. குடிநீர் வசதிக்கும் ஏரிகளில் தண்ணீர் நிரம்பி இருப்பதன் வாயிலாக வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, இதற்காக தனி வாரியம் அமைப்பது இன்றியமையாதது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, விழுப்புரம் தொகுதியில் இரண்டு ஏரிகளிலே இடையிலே உள்கரை அமைக்கும் திட்டம் ஏற்கனவே போடப் பட்டிருந்தது. அப்படிப்பட்ட திட்டங்களை உடனடியாகச் செய்வதன் மூலம் பல நன்மைகள் உண்டாகும். வளவனூர் பகுதியில் ராமையன்பாளையம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே தண்ணீர்ப் பிடிப்பு அதிகம் இருக்கும் காரணத்தால் அங்குள்ள மக்கள் வாழ்க்கை நடத்த முடியாத அளவுக்கு மோசமான சூழ்நிலைகள் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுகின்றன. கலெக்டர், மற்றும் அதிகாரிகளுக்குத் தந்தி கொடுத்தால் கூட வந்து பார்ப்பதில்லை. மழைக் காலத்தில் மிகுந்த அபாயம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் தொகுதியில் பெரும்பாக்கம் என்ற ஏரியும் கொத்தமங்கலம் ஏரியும் இருக்கிறது. அவற்றின் கீழ் நிறைய பாசன நிலங்கள் இருக்கின்றன. அவற்றின் உள் கரையையும் கட்ட துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். கொண்டமாநதி மூலம் கொண்டம்பாக்கம் வாய்க்காலைச் சீர்படுத்தினால்தான் தண்ணீர் கொண்டு போக முடியும். பூந்தோட்டம், மகாராஜபுரம் ஏரிகளையும் சீர்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து தண்ணீரைத் திறந்து விட்டு ஒரு மாத காலமாகியும் கடைசி வரை தண்ணீர் வராத காரணத்தால் கடைசியில் இருக்கும் குளங்களில் தண்ணீர் இல்லாது பாசன நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. பயிர் காய்ந்து போயிருக்கிறது. டெயில் எண்ட் வரை தண்ணீர் விட வேண்டும். இரணியல் சானல், முட்டம் சானல், ராஜாக்கமங்கலம்

வாய்க்கால் ஆகியவையும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே கலசப்பாக்கம் தொகுதியிலே உள்ள நார் தம்பூண்டி ஏரிக்கு செய்யாற்றிலிருந்து தண்ணீர் வர ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டும் வேலை முடிவு பெறாமல் இருக்கிறது. அதை உடனடியாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே, எங்கள் அடிப் படையான உணர்வு இந்த சிறுபாசனத் திட்டத்திற்கு தேவையான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதை இந்த அரசு வேண்டுமென்றே புறக்கணிக்கிறதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நல்ல உணர்வோடு எடுத்துக் கொண்டு செயல்படவில்லை என்று குற்றம் சொல்லி எதிர்க்கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறி விப்பு. இன்று காலையில் பேரவைக்குள் துண்டு அறிக்கை வீசிய வர்கள் குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டபோது குறிப்பிடப்பெற்ற சில பகுதிகள் பேரவை நடவடிக்கைக் குறிப் பில் இருந்து நீக்கப்பெற வேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட் பட்டது.

திரும்பவும் அது குறித்த தீர்மானம் பேரவையில் கொண்டு வரப் பெற்றபோது நடந்த விவாதத்தில் ஏற்கனவே நட வடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கும் படியாக ஆணையிடப் பெற்றவைகள் குறிப்பிடப் பெற்றிருந்தால், அவைகளும் நீக்கப் பெறுகின்றன. பத்திரிகைகளிலும் அவற்றை வெளியிடக் கூடாது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம் பற்றிய 36ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீதும், பாசனம் குறித்த மூலதனச் செலவு குறித்த 50ஆம் எண் மானியக் கொரிக்கையின் மீதும் பேரவை உறுப்பினர்கள் அவர்களுடைய மேலான ஆலோ சனைகளையும் கோரிக்கைகளையும் இங்கே வைத்திருக்கிறார்கள். 16 மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய நல்ல கருத்துக் களை வழங்கி இருக்கிறார்கள். கால நேரத்தைக் கருத்தில் கொண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டும் எடுத்து வைத்து இந்த விவாதத்தை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். இப்படி அனைவருடைய கோரிக்கைகளையும் கருத்துக்களையும் மனத்திலே ஏற்று இருக்கிற நான் அவை களுக்கு முழுமையாக இந்தச் சந்தர்ப்பத்திலே பதில் கொடுக்க வில்லை என்பதற்காக அவைகளை இந்த அரசோ சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ அல்லது இந்தத் துறையைச் சார்ந்தவர்களோ புறக்கணித்து விட்டார்கள் என்று தயவுசெய்து கருதவேண்டாம்.

காரணம் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு இங்கே நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த வரையில் மிகச் சிறந்த ஒரு முன்மாதிரியை நாம் இங்கே உண்டாக்கியிருக்கிறோம். இந்தத் துறையின் பொறுப்பை முன்பு ஏற்று நிர்வாகம்செய்த அமைச்சர் அவர்களால் இந்த மானியக் கோரிக்கையின் மீது மன்றத்தின் உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு கோரிக்கைகள் எந்த நிலையிலே உள்ளன, அவை பரிசீலனையில் உள்ளனவா, அவற்றைச் செயல்படுத்த முடியுமா, செயல்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லையா என்பதை பற்றியெல்லாம் அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடிய ஒரு நல்ல முன்மாதிரியை இந்தத் துறை பின்பற்றி வருகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்புகளிலே முதலாவது மாண்புமிகு உறுப்பினர்கள் 1979-80ஆம் ஆண்டிலே எழுப்பிய கருத்துகளுக்கு, கோரிக்கைகளுக்கு, கேள்விகளுக்கு பதில் தரக் கூடிய முறையிலே துறை அளித்திருக்கின்ற விளக்கக் குறிப்பு ஆகும்.

அதற்கு அடுத்தபடியாக நம்முடைய மானியங்கள்பற்றி 3 விஷயங்கள் தனித் தனியாக அச்சடிக்கப்பட்டுக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று, 1980-81ஆம் ஆண்டில் திட்ட சாதனைகள் பற்றி தனியாகக் கொடுத்திருக்கிறோம். அதற்குப் பிறகு 2 மானியக் கோரிக்கைகளைப் பற்றி இருக்கின்றது. கொள்கைக் குறிப்பு ஒன்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இதை ஒட்டு மொத்தமாக ஒன்றோடொன்று இணைத்துப் பார்ப்பார்களானால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு அதிலேயே பதில் சொல்லியிருக்க முடியும் என்று நம்புகிறேன். இருந்தாலும் மிக முக்கியமானவற்றை மட்டும் குறிப்பிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகின்றபொழுது அவர்கள் வலியுறுத்திய கருத்துக்களிலே மிக முக்கியமான ஒன்றாக நான் கருதுவது நீர்ப்பாசன கருத்தரங்குகளை முறையாக இந்த ஆட்சிக் காலத்திலே செய்யவில்லை, அந்தக் கருத்தரங்குகளை உருவாக்கி ஆங்காங்கே உள்ள பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் மனதிலே கொண்டு செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது முழுமையாக எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு குற்றச்சாட்டு அல்ல. காரணம் இந்தத் துறையை இதற்கு முன்பு பொறுப் பேற்றிருந்தவர்கள் குறிப்பாக அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலேயும், தென் ஆற்காடு மாவட்டத்திலேயும், மதுரை மாவட்டத்திலேயும், கோவை மாவட்டத்திலேயும் இந்தக் கருத்தரங்குகளை நடத்தினார்கள்.

[பிற்பகல் 1-50]

அதிலே வடார்க்காடு மாவட்டத்திலேயே அப்படிப்பட்ட ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது எப்படி அவருடைய கவனத்திற்கு வராமல் போய் விட்டது என்று எனக்குத் தெரியவில்லை

இருந்தாலும் கூட, கருத்தரங்கு நடத்த வேண்டுமென்ற கோரிக்கை வலுவானது, தேவையானது என்ற அடிப்படையில், அனைத்து மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதற்காக இனிமேல் வரும் ஆண்டுகளிலே அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகளை அரசு விரைவாகவும், பயன் தரத்தக்க வகையிலேயும் அமைக்கும். இப்படிப்பட்ட கருத்தரங்குகளிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், அதற்கு முன்பு சட்டமன்ற, மேலவை, நாடாளுமன்றங்களிலே பணியாற்றியவர்கள், விவசாய சங்கத்தைச் சார்ந்தவர்கள், இப்படிப் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்களையெல்லாம் அழைத்து, ஆங்காங்கே நிறைவேற்ற வேண்டுமென்று அவர்கள் கருதுகின்ற திட்டங்களைப் பற்றி அங்கேயே ஒரு ஆய்வு செய்து அதில் எதையெதை எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றியெல்லாம் இந்த அரசு முடிவு செய்யும். அதிலே விரைவு காட்டும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பொதுப்படையாக அவரவர்களுடைய தொகுதிகளை மனத்திற் கொண்டுதான் இந்தக் கருத்துக்களை இங்கே பல மாமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொரணம் அவர்கள் கூட இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்திலே அவர்கள் பெரியாறு வைகைக் கால்வாய்ச் சீரமைப்பு எப்பொழுது முடியும்? அது முடிவதாகத் தெரியவில்லையே, அது முடிந்ததற்குப் பிறகு தான் எங்களுடைய திட்டங்களை எடுத்துக்கொள்ளக் கூடிய சூழ்நிலை இருக்கிறதே, எனவே, சிவபெருமான் கோயிலுக்கு தரிசனத்திற்காகச் சென்றால் நந்தி குறுக்கே இருப்பதைப் போல இந்த நிலைமைகள் இருக்கின்றனவே என்று அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு கோயிலிலும் இப்படிப்பட்ட குறுக்கீடுகள் இருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். எனவே, அவரைப் பொறுத்த வரையில், தற்காலிகமாகவாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. சொரணம் அவர்கள் குசேலராக மாறி, கையில் அவல் கொண்டுவராவிட்டாலும் கூட விண்ணப்பங்களைக் கொண்டுவருவதை இந்த அரசு பார்க்கின்ற பொழுது, இருக்கின்ற தடைகள் நிச்சயமாக விலகும்; உரிய காலத்திலே இந்தத் திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்று இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத்திட்டங்களை விரைவுபடுத்துவதிலேசில பிரச்சனைகள் உண்டு. அது உலக வங்கியினுடைய உதவியோடு நடைபெறக் கூடிய சில திட்டங்கள். எனவே சிலமுறைகளை நாம் பின்பற்றுகின்றபொழுது அவர்கள் எப்படிப்பட்ட மதிநபீடு களில் அல்லது தரத்தில் இந்தப் பணிகளை நிறைவேற்ற

வேண்டுமென்று சொல்கிறார்களோ அதை முழுமையாக நிறைவேற்றுகின்றபொழுது வேலைகள் கொஞ்சம் தாமதமாவது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் நாம் முடிந்த அளவிற்கு விரைவுபடுத்திக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக இந்தக் காரியங்களை விரைவிலே முடிக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, இங்கே இன்னொரு குற்றச்சாட்டை அவர்கள் கிளப்பினார்கள். அதாவது, மானிய விளக்கத்திலே, 3-வது பக்கத்தில், நன்செய் நிலத்திலிருந்து புன்செய் நிலமாக மாற்றுவதற்கு அரசு முயற்சிப்பதாக இங்கே அச்சிலே அடிக்கப்பட்டிருக்கிறதே, இது என்ன ஒரு தலைகீழாக இருக்கிறதே என்ற ஒரு கேள்வி எழுப்பினார்கள். ஆனால் அதிலே உள்ள பொருள், இன்றைக்குள்ள யதார்த்த நிலையிலே ஏற்றுக்கொள்ளக் கூடிய பொருள்தான். அது அச்சிலே வந்து விட்டது சரியா இல்லையா என்பதைப்பற்றி ஆய்வு செய்வதைவிட அதிலே உள்ள கருத்து, ஆரம்பத்திலே ஏற்கனவே கருதப்பட்ட பகுதிகளுக்குக் கூடுதலாகப் பாசனம் அளிக்க வேண்டும் என்கிற ஒரு எண்ணம் வந்து இப்பாசன ஆயக்கட்டு நிலங்களை நன்செய் ஆயக்கட்டு நிலங்களாகக் கருதுவதற்குப் பதிலாகப் பாசனம் பெறும் புன்செய் நிலங்களாக—இர்ரிகேட்டட் ட்ரைலேண்ட்ஸ் என்று கூட நாம் எடுத்துக்கொள்ளலாம். அப்படிப் பார்க்கின்றபொழுது 9,000 ஏக்கர் என்று இருப்பதற்குப் பதிலாக அது கிட்டத்தட்ட 20,000 ஏக்கர் என்று சொல்லி அதிகமாகப் பலன் கிடைக்கின்ற வாய்ப்பிருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை அதிகமாகப் பலன் கிடைக்கக்கூடிய ஒரு திட்டமாக மாற்ற வேண்டுமென்றுதான் அந்தக் கருத்து இங்கே சொல்லப்பட்டது; அந்த உணர்வோடுதான் அது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வரும்புகிறேன். ஆங்கில மொழிபெயர்ப்பிலே சரியாக இருக்கிறது; தமிழ் மொழி பெயர்ப்பிலே இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் செய்திருக்க வேண்டும்; அதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் கருத்து அதுதான். எனவே, மூலக் கருத்திலே எந்தவிதமான சிதைவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது இங்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் விஷயத்தில் நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; அக்கறை காட்ட வேண்டுமென்பதையெல்லாம் சொல்லி, இந்த நீர் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதுபற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அதிலே இப்பொழுது நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குரிய நிறுவனம் ஒன்று கேரளாவிலே இப்பொழுது ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர், அசுத்தமான நீரைத் தூய்மைப்படுத்தி மீண்டும் பயன்படுத்துதல்; நீர் வற்றிப் போன இடங்களில் மீண்டும் நீரைச் சுரக்கச் செய்வதற்கான

செயற்கை முறையில் ஏற்பாடுகளைச் செய்தல்; ஆகிய நீர்வாயில்கள் அனைத்திற்கும் கிடைக்கப்பெறும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள நீர் நிறுவனம் ஒன்றை நம் மாநிலத்தில் நிறுவ நாம் திட்டம் இட்டிருக்கிறோம். இத்திட்டத்திற்கு 40 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று இப்பொழுது மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்- திட்டம் வழங்கும் ஐந்து மில்லியன் டாலர் நிதியுதவியையும் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்பெற்று செயல்படுத்துவதற்கான உத்தேசங்கள் இருக்கின்றன. என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் ஒரு விஷயத்தை எழுப்பினார்கள். நிலப்படை குறித்த செயற்குறிப்பு எந்நிலையிலே இருக்கிறது என்ற கேள்வியை அவர்கள் இங்கே எழுப்பினார்கள். தகவலுக்காகவும், நிலைமைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவும் நான் இந்த மாமன்றத்திற்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நிலப்படையை எந்த நோக்கத்திற்காக அமைக்கவேண்டுமென நாம் கருதினோமோ, அத்திட்டத்தின் நோக்கங்களும், வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தினுடைய நோக்கங்களும் ஒன்றாக இருக்கிற காரணத்தினால், வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டததைச் செயல்படுத்தக் கருதியிருக்கிற காரணத்தால், நிலப்படை குறித்த திட்டத்தை அரசு கைவிட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம் அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறதா, இல்லையா என்று ஐயப்பாடு கொண்டு சர்ச்சைகளை எழுப்பிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமாக அந்த எண்ணங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதோடு மட்டுமல்லாமல், அந்தத் திட்டத்தை இப்பொழுது நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற காரணத்தாலே, நிலப்படை என்கிற ஒரு தனி அமைப்பு தேவையில்லையென அரசு முடிவு எடுத்திருக்கிறது.

இங்கே பல்வேறு திட்டங்களைப் பற்றி கேட்டார்கள், செண்பகத் தோப்புத் திட்டம் என்னவாயிற்று? அதேபோல், தொட்டஹல்லா நீர்த்தேக்கத் திட்டம் என்னவாயிற்று? என்று. அதிலே, நான் குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. சில நேரங்களிலே அரசியல் நிர்பந்தம், குறிப்பாக, நீர்ப்பாசனத் துறையிலே அதிகமாக வந்து கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அது மாநிலங்களுக்கிடையிலான நீரை பங்கிட்டுக்கொள்வதாக இருந்தாலும், அல்லது இங்கேயே இருக்கக்கூடிய நீரை ஒரு பகுதியிலேயிருந்து இன்னொரு பகுதிக்குக்கொண்டு வரவேண்டுமென்று விரும்பினாலுங்கூட, பல்வேறு அரசியல் பிரச்சனைகள் வந்து விடுவதை நாம் பார்க்கிறோம்.

அப்படி பிரச்சனைகள் இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்களுக்குக்கூட வந்திருக்கக்கூடும். எனவே, அவர்கள் சில விஷயங்களை கொள்கை அளவிலேதான் அறிவித்தார்கள். செண்பகத்தோப்பு, புளியந்தோப்பு, மாந்தோப்பு என்று எதை எதையோ அந்த நேரத்திலே, அந்தத் திட்டம் வருகிறது, இந்தத் திட்டம் வருகிறது என்று சொன்னார்களே தவிர, அனைத்தையுமே நாம் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதை ஆய்வு செய்து, நீர்ப்பிடிப்புப் பகுதிகள் எவ்வளவு? எத்தனை மில்லியன் கன அடி நீரை அந்தப் பரப்பளவிலே நாம் வைத்துத்தேக்க முடியும்? எவ்வளவு பகுதிகளுக்குப் பாசனங்களைக் கொடுக்க முடியும் என்பதையெல்லாம் கணக்கு கொண்டு பார்க்கும்போது, சிலவற்றைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை வந்தது. அதிலே, இந்தச் செண்பகத்தோப்பு பொறுத்த அளவிலே, இத்திட்டம் கமண்டலாற்றின் குறுக்கே செய்யாறு உப படுகையில் அமைந்திருக்கிறது. இத்திட்டத்தில் தண்ணீர் இருப்பு, ஆயக்கட்டு பற்றி முழு விவரங்களை சேகரிக்க வேண்டுமென்று, அதுபற்றிய கணக்குகளை எடுக்கவேண்டுமென்று சொல்லி, 3 ஆண்டுகளுக்கு தற்காலிகமாகத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆய்வுகள் முடிந்ததற்குப் பிறகு, அந்தத் திட்டத்தை நாம் எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, எதுவாக இருந்தாலும், அறிவித்துவிட்டோம் என்பதற்காக ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவது என்று சொன்னால் அதனால் எவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்கிறோம், அதன்மீது மக்களுடைய வரிப்பணம் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நீர்வளம் என்பது இன்றியமையாத முதன்மையான வளம் என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் அதற்காக ஆய்வு நடத்தாமலேயே, ஏதோ கேட்கிறார்கள் என்பதற்காகவே நாம் திட்டங்களை நிறைவேற்றுவோமேயானால், குட்டைகளைப் போன்றுதான் திட்டங்கள் இருக்கும். அதைக் கூட இப்பொழுது நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ கேட்கிறார்கள், செய்கிறோம் என்ற அளவில் இல்லாமல், எந்த, எந்த அடிப்படையிலே செய்ய வேண்டுமென்று, எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதை இந்த அரசு நிச்சயமாகச் சிந்தித்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

கடைசியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் பேசுகிறபொழுது ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். இந்த அரசு ஏதோ விளம்பரத்திற்காக சிறிய பாசனம் என்று எடுத்துக் கொண்டால், அது வெளியே தெரியாது என்றோ என்னவோ அதை விட்டு விட்டார்கள், விளம்பரத்திற்காகத்தான் பெரிய பாசனங்களைக்கூட எடுத்துக்கொள்கிறார்களோ என்று கூட தாம் ஐயப்படுவதாக அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எந்த அனுபவங்களின் பாதிப்பிலே இப்படிச் சொல்கிறார்கள் என்று நான் எண்ணிப் பார்க்க விரும்பவில்லை. ஆனால், இங்கே

சிறு பாசனம் என்று எடுத்துக்கொண்டால் கூட நம்முடைய செயல்திட்டங்கள் சாதனை பற்றிய குறிப்பிலே மிகத் தெளிவாகவே விளக்கியிருக்கிறோம். 5 நிமிடங்கள் நேரமானாலுங் கூட அவருடைய கவனத்திற்காக அதை எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சாதனைத் திட்டம் 1980–81—பாசனம் அண்டு நிலநீர்' பற்றிய குறிப்பிலே 23-வது பக்கத்திலே மிகத் தெளிவாக நாம் சொல்லியிருக்கிறோம். ரூ. 5 இலட்சமும் அதற்கு மேற்பட்ட செலவில் நிறைவேற்ற இருக்கும் சிறு பாசனத் திட்டங்கள்—தூர் வாருதல் பண்படுத்தல் திட்டங்களின் பட்டியல் என்று மிகப் பெரிய அளவிற்கு விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் அவர்கள் கொஞ்சம் பார்த்திருப்பார்களானால் இன்னும்கூட இந்தக் கருத்தை அவர்கள் மாற்றிக்கூட சொல்லியிருக்க முடியும் என்று நினைக்கிறேன். கிட்டத்தட்ட 59,60 திட்டங்களுக்கு மேலே அதிலே நாம் சொல்லியிருக்கிறோம். அவை அனைத்தும் நிறைவேற்ற இருக்கும் சிறுபாசனத் திட்டங்கள்.

[பிற்பகல் 2–00]

எனவே சிறு பாசனங்களுக்குத்தான் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கொடுக்க இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பது மிக உண்மையான ஒன்று என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம் நாம் இதிலே வேண்டிய இடம் என்றோ வேண்டாத இடம் என்றோ பார்க்க முடியாது. எங்கெங்கே நமக்கு வளங்கள் இருக்கின்றன எதை எதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை எல்லாம் நிச்சயமாக உணர்ந்து பார்த்து செயல்பட்டால்தான் எதிர்காலத்தில் நாம் உணவு உற்பத்தியிலும் வேறு எந்த முயற்சியிலும் தன்னிறைவு பெற்றிருக்கிற மாநிலமாக ஆகமுடியும் என்ற ஒரு அக்கறை இந்த அரசுக்கு இருக்கின்றபோது நிச்சயமாக வாய்ப்புள்ள பயன்தரத்தக்க அனைத்துத் திட்டங்களையும் மேற்கொள்ளுவதற்காக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே கொள்கை விளக்கத்திலேயும் மற்றவற்றிலேயும் திட்டங்களுடைய பெயர்கள், அதற்காக ஒதுக்கப்பட்ட லட்சக்கணக்கான கோடிக்கணக்கான பணங்கள் போன்ற விவரங்களை நாங்கள் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிற காரணத்தினாலே அவைகளை திரும்பவும் இன்னும் ஒரு முறை சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆனால் எந்த அடிப்படையில் இந்தத் துறை செயல்பட விரும்புகிறது கொள்கை உருவாக்கப்படுகிறது என்பதை மட்டும் பார்க்கின்றபோது தற்போது உள்ள நீர் வளத்தைக்கொண்டு, நீர் சுழற்சி முறையிலே பாசன வசதிகளை மேலும் பெருக்க வேண்டும். இம்முறையினால் புதிய பாசனத் திட்டங்கள் அதிகப் பணச் செலவில் அமைக்கத் தேவையில்லை.

மூன்றாவதாக பயிரிடப்படாத நிலங்களில் ஒரு சாகுபடிக்கு தண்ணீர் வழங்குதல், ஒரு சாகுபடி செய்யப்படும் இடங்களில் இரண்டு சாகுபடி செய்வதற்கு வேண்டிய வழிவகைகளை செய்தல், இரண்டு சாகுபடி செய்யப்படும் இடங்களில் ஒரு பணப்பயிர் செய்வதற்கு, அதாவது மூன்றாவது சாகுபடிக்கு வழி செய்தல். இப்படி நாம் இருக்கின்ற வளங்களைப் பெருக்கிக் கொண்டே போவதுதான் இந்த அரசினுடைய நோக்கமாக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செஞ்சி ராமசச்சந்திரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். நீங்கள் என்ன திட்டம் சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே நாங்கள் அறிவித்த திட்டங்கள்தான். எங்களுடைய ஆட்சிக்காலத்திலே அறிவிக்கப் பட்ட திட்டங்கள்தான் செயல்முறைக்கு வந்திருக்கிறது என் பதை அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் பெரிய திட்டம் ஒன்றுமே காணோம் என்று அவர்களுக்கு உள்ளேயே இரண்டு கருத்துக்கள் சொல்லி இருக்கிறார்கள். இதிலே நான் எதை எடுத்துக்கொண்டு பதில் சொல்வது என்று தெரியவில்லை. இருந்தாலும், அவர் களுடைய கவனத்திற்கு நான் சொல்வதெல்லாம் இது வாடிக் கையாகச் சொல்லப்படுவதுதான். இந்த ஆட்சி செய்கின்ற போது, முந்திய ஆட்சியிலே நாங்கள் போட்ட திட்டம் என்று சொல்வார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு கூட, சில பேர்கள் சொன்னார்கள், இருக்கிற ரோடுகள், ரயில்வே இவைகள் எல்லாம் பிரிட்டிஷ்காரன் போட்டது, நீங்கள் ஏன் பயன்படுத்து கிறீர்கள் என்று கேட்பதுபோல, இது நாங்கள் போட்ட திட்டம், அதற்கு முன்னாலிருந்தவர்கள் போட்டது என்று சொல்வது சரியல்ல. மக்களுக்காக, ஒவ்வொரு ஆட்சியும் சில நேரங்களில் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். சில நேரங்களில் அந்தத் திட்டங்கள் முடிவுறுவதற்கு முன்னாலேயே, அவர்களுடைய ஆட்சி முடிந்து போய்விடுகிறது. சில நேரங்களில், அவர்கள் முடித்து வைத்துவிட்டு போகிறார்கள். புதிய திட்டங்களை நாம் போடுகிறோம். அவைகள் தொடர்ந்து வருகின்றன. இது ஒரு ரிலே ரேஸ் போன்றதுதான். 100 மீட்டர் அவன் ஓடி, அடுத்து ஓடுவதற்குத் தயாராக இருக்கின்றவனிடம் அவன் குச்சியைக்கொடுத்துவிட்டுப் போகிறான். கடைசியிலே வெற்றி பெற்று வந்து நிற்கின்றவன் நாலாவது நபரே தவிர, முதலிலே ஆரம்பித்தவன் பெரும்பாலும் வருவதில்லை. எனவே, பொது மக்களுடைய, நாட்டு மக்களுடைய நன்மைக்கான காரியங்கள் என்று வருகிறபோது சில நேரங்களிலே பழைய திட்டங் களாக இருக்கலாம், அல்லது புதிய திட்டங்களாக இருக்கலாம். திட்டங்களுக்கு எப்படி முன்னுரிமை கொடுக்கிறோம், எந்த அடிப்படையில் கொடுக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

நிதி ஒதுக்கீடு போதாது என்று கூட கருத்து சொன்னார்கள். அதை நிச்சயமாக அரசு கவனத்திலே கொள்கிறது. முன்னு ரிமை கொடுக்கின்ற திட்டங்களிலே, முதன்மையான திட்டமாக.

எடுத்து, இருக்கக்கூடிய நில வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு நீர் வளங்களை சரியாக உபயோகப்படுத்துகிறோம். நீர் வளத்தை சரியாகப் பயன்படுத்துவதுதான் அனைத்து பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு ஆதாரமாக இருக்கிறது என்பதை எல்லோரும் உணருகிறோம். இந்த அரசு அதை நன்கு உணர்ந்து திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது. அடுத்து வரும் காலங்களில் நாம் நீர்ப்பாசனக் கருத்தரங்குகளைப் போடுகிற போது நிச்சயமாக இந்த நீர்ப்பாசனத் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்குவது, அதற்கான நிலத்தடி நீரைப் பெருக்குவது என்ற வகையில் செயல்படுவோம்.

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபொழுது, அது விவசாயத்தோடு தொடர்புடைய காரணத்தினாலேயும், அதைக் கூட்டுறவு அமைப்புகளோடு எல்லாம் தொடர்புபடுத்திக்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள், கிணறு வெட்டுகிறார்கள். பாறை வந்து விடுகிறது, பொய்த்து விடுகிறது அதற்குப் பணம் கட்ட முடியவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அதனால்தான் நாம் சொல்கிறோம், நிலத்தடிநீரை எப்படிப் பயன்படுத்துவது? அதற்கொரு கட்டுப்பாடு நமக்கு வேண்டும். கடன் வ ங்குகிறார்கள். எந்த இடத்திலே கிணறு வெட்டினால் அவர்களுக்கு நீர் கிடைக்கும் என்பதையெல்லாம் விஞ்ஞான ரீதியாகத்தான் பார்க்கவேண்டும். பழைய முறையிலேயே நம்பிக்கை வைத்துக்கொண்டு அங்கே கிராமத்திலே இருக்கக்கூடிய ஒருவரை அழைத்துச் செல்கிறார்கள். சிலபேர்கள், நடந்துகொண்டே போய் திடீரென்று நிற்கிறார்கள். இங்கேதான் தண்ணீர் ஓடுகிறதென்று தொடுகிறார்கள். சில பேர்கள் கையிலே குச்சியை எடுத்துக்கொண்டு போகிறார்கள். சிலபேர்கள், மணியடித்துக்கொண்டே போகிறார்கள். இப்படி பலவிதமான விநோதமான முறைகளை அவர்கள் கையாளுகிற போது சிலர் வெற்றி பெறக்கூடும். ஆனால், விஞ்ஞானரீதியாகத்தான் நமக்கு வாய்ப்புக்கள் நிரம்ப இருக்கின்றன. அந்தந்த பகுதிகளிலே நீரோட்டம் எந்தத் திசையிலே போய்க்கொண்டிருக்கிறது, எங்கே நீங்கள் கிணறு தோண்டினால், உங்களுக்கு உறுதியாக நீர் கிடைக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டுமென்றால், ஒரு வரைமுறை நமக்குத் தேவைப்படுகிறது. நிலத்தடி நீரை இனிமேல் நாம் எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பொறுத்துத்தான் எதிர்காலத்தில் நமது உற்பத்தி, நாட்டினுடைய அனைத்து வளமும் எப்படி இருக்கும் என்று சொல்லமுடியும், இந்தப் பாசனம் என்பதிலே ஒரு எழுத்து கூடிவிட்டால் எப்படி பாசானம் என்று மாறுவதைப் போல, நிலத்தடி நீரிலே நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக இல்லையென்று சொன்னால் ஒரெழுத்துக் கூடுவதைப் போல, அதிகமாக அந்த நீரைப் பயன்படுத்திவிடுவோமேயானால் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு நல்ல நேரமாக நல்லாட்சி நடைபெறுகிறது, மழை தொடர்ந்து பெய்து கொண்டு இருக்கிறது, ஏதோ காலத்தின் கருணை என்று நாம் ஒவ்வொருவரும் சொல்லலாம். ஆனால் இது தொடர்ந்து இருக்கவேண்டும். இப்போது பெய்கிற மழையைப் பாதுகாத்து நாம் நிலத்தடி நீரை அதிகமான அளவிற்கு உயர்த்துவதற்கான அந்த 'கிரௌண்ட் வாட்டர் டேபிள்' என்று சொல்லக்கூடிய, அந்த நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்குவதற்காக நாம் சில திட்டங்களைக் கண்டிப்பாக மேற்கொண்டாக வேண்டும். அதற்காகத் தான் 'கிரௌண்ட் வாட்டர் ரெகுலேஷன் பில்' என்று ஒன்றைக்கூட கொண்டு வந்து, அந்த நிலத்தடி நீரை எப்படிப் பயன்படுத்துவது எனபதற்கான ஒரு முறையையும் கொண்டு வரக்கூடிய முறையில் ஒரு சட்டமுன் வடிவைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது.

அதேபோல், ட்யூப் வெல்ஸ் கார்ப்பரேஷன், அந்தக் குழாய் கிணறுகளை நாம் எப்படி ஒரு பொதுப்பங்கீட்டின் மூலமாக ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுத்து, அவர்களுடைய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அதை நாம் எந்த அளவிற்குப் பயன்படுத்தலாம் என்பதைக்கூட இந்த அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது. ஆகவே, மிக முக்கியமாக நமக்கு 'சர்பேஸ் வாட்டர்' என்று சொல்லக்கூடிய, மேலே போகக்கூடிய மேற்புறத்தில் போகக்கூடிய நீரை நாம் அதிகமாக இன்றைக்குப் பயன்படுத்திக்கொண்டுவருகிறோம்.

எனவே, நாம் அடுத்து கவனிக்கவேண்டியது, சர்பேஸ் வாட்டர் திட்டத்தின் கீழும் குறிப்பாக நிலத்தடி நீரை பாதுகாத்துப் பயன்படுத்தவேண்டும் என்ற அளவில் நாம் சிக்கனமான முறைகளை இன்றைக்குப் பின்பற்றிகொண்டு இருக்கிறோம். நாம் இப்போது இங்கே கிட்டத்தட்ட 37 கோடியே 67 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் இந்த மூலதனச் செலவுகளுக்காக வழங்கி இருக்கிறோம் என்று சொல்கிறபோது, அதற்காக இதிலே நாம் எது எதற்கு முன்னுரிமை கொடுத்தால் நீர்வளம் பெருகுமோ அதை மிகத்தெளிவாக உணர்ந்து நாம் செய்து கொண்டு இருக்கிறோம்.

பெரிய பாசனத் திட்டங்கள் என்று வருகிறபோது, அதிலே வைகை—பெரியார் கால்வாய் சீரமைப்பு போன்ற சீரமைப்புப் பணிகள்—மாடர்னைசேஷன் ஸ்கீம்—போன்றவற்றைச் செய்வதற்கும் நாம் 14 கோடி ரூபாய் செலவழித்து வருகிறோம். அது தவிர்க்க முடியாதது. அப்படிச் செய்வதன் மூலமாக நாம் நீரைச் சிக்கனப்படுத்துகிறோம். கூடுதலான நிலங்களுக்கு நாம் நீர் வளம் கொடுப்பதன் மூலமாக, பாசன வசதி அதிகரிப்பதன் மூலமாக நாம் உற்பத்தியை அதிகரித்துக்கொள்கிறோம் என்று பார்க்கிறபோது, அந்தத் திட்டத்தை நாம்

தொடர்ந்து நிறைவேற்றக் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதையும், நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது பெரிய திட்டம் என்று சொல்வது விளம்பரத்திற்காக அல்ல. இந்தத் திட்டத்தின் மூலமாக 14 கோடி ரூபாய் செலவழித்தாலும்கூட எத்தனை கிலோ மீட்டர் அந்தக் கல்வாய் போகிறது, எத்தனை ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது என்று பார்க்கிறபோது, அந்தத் திட்டத்தை நாம் மேற்கொண்டாகவேண்டும். இருக்கிற நீரை எவ்வளவு சிக்கனமாக சேமித்து வைத்துக்கொள்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் சிறந்த முறையில் நாம் நம்முடைய காரியங்களைச் செய்து கொள்ள முடியும். அதனாலே தான் தற்போதுள்ள நீர் வளத்தைக் கொண்டு, நீர் சுழற்சி முறையில் நாம் பாசன வேலைகளைச் செய்துகொண்டு இருக்கிறோம். சிக்கனப்படுத்துவதன் மூலம் ஆயக்கட்டுகளை அதிகப்படுத்திக்கொள்வது என்கிற அளவிற்கு பி.ஏ.பி. எக்ஸ்டென்ஷன் போன்ற திட்டங்களையும் அந்த அடிப்படையில் நாம் செய்து கொண்டு வருகிறோம்.

அதிலே மிகவும் முக்கியமான சாதனைகள் என்று நாம் அதிகமாக பட்டியல் போட்டுக்கொண்டிருப்பதற்கு நேரம் இல்லை என்றாலும் கூட 1.15 லட்சம் ஏக்கர் கூடுதல் நிலங்கள் பயன் பெறும் என்பதோடு இன்றைக்கு பி.ஏ.பி. திட்ட ஆயக்கட்டு மூலமாக பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், மற்றும் பல்லடம் பகுதிகளில் விரிவுபடுத்த நாம் அந்தக் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம்.

உலக வங்கி நிதி உதவியோடு பெரியார்—வைகை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக 1980-81-ல் 9.39 கோடி ரூபாய் இன்றைக்கு ஒதுக்கி நாம் அந்தக் காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறோம். நாகவதி ஆற்றின் குறுக்கே 124 மில்லியன் கன அடி கொள்திறன் கொண்ட நீர்த்தேக்கத் திட்டம் ஒன்றுக்கு ரூ. 178 லட்சம் செலவில் இன்றைக்கு ஒப்புதல் அளித்து இருக்கிறோம். 6,250 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன் அடையும். ஈச்சம்பாடி கிராமத்தில் பொன்னியாற்றின் குறுக்கே 217லட்சம் செலவில் ஒரு அணைக்கட்டு அமைக்க அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

இதிலே நாம் குறிப்பிட்டது போல் குறிப்புகள் வந்து இருக்கின்றன. 1-2 திட்டங்கள் இடைக்காலத்தில் நாம் ஒப்புதல் அளித்து இருக்கும் திட்டங்கள் இந்த மானியக் கோரிக்கை தயாரிக்கப்பட்ட பிறகு கூட அரசின் ஆய்வற்கு வந்து, முடிவிற்கு வருகின்ற முறையில் நாங்கள் அவ்வப்போது அதை ஏற்று அதையும் செயல் படுத்த வேண்டும் என்று விரைவுபடுத்திக் கொண்டு இருக்கிற காரணத்தாலே இப்போது சேர்க்கப்பட்டு

இருக்கிறது. இதிலே 5,330 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுவதற்காக 332 லட்ச ரூபாய் மதிப்பீடு செலவில் தொப்பையாறின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக நாம் இன்றைக்கு ஒப்புதல் அளித்து இருக்கிறோம்.

மதுரை மாவட்டத்தில் பி. டி. ராஜன் வாய்க்கால் வரத்துக் கால்வாய் ரூ. 44.12 லட்சம் செலவில் அமைப்பதற்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்து இருக்கிறது.

இப்படி பல்வேறு பகுதிகளில் நாம் புதிய திட்டங்களை மேற்கொண்டு அந்த நீர் வளத்தை பெருக்குவது, பாதுகாப்பது, முறையாகப் பயன்படுத்துவது, கூடுதலான அளவிற்கு பாசன வசதியைக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்கிற முறையின் மூலம் தமிழகம் தன்னிறைவு பெறுவதற்கான சூழ்நிலையை உண்டாக்குவது என்றுதான் அரசு இன்றைக்கு திட்டங்களை முறையாகச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது.

இதிலே முக்கியமான ஒன்று, இந்த நதி நீர் பிரச்சனையில் 'இன்டர்-ஸ்டேட் வாட்டர் ப்ராப்ளம்'—அதில் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் அதை நாம் பேசிப்பேசி அதை ஒரு சாத்தியக் கூறுகள் இல்லாமல் ஆக்குவதற்கு முயற்சி செய்வதைவிட அமைதியாக இருந்து கூடுதலான முயற்சிகளை மேற்கொண்டு பேச்சு வார்த்தைகளில் முழு அளவிற்கு நம்பிக்கை வைத்து நல்ல எண்ணங்களை மாநிலங்களிடையே உருவாக்கி, இந்திய நாட்டில் உள்ள அனைவருமே ஒன்றாக வாழ்கிறோம் என்றாலும் கூட அனைவருக்குமே சில விஷயங்களில் சம பங்கு இருக்கிறது, உரிமை இருக்கிறது என்பதை மெல்ல, மெல்ல அவர்களுக்கு உணர்த்தி நாம் அதைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

[பிற்பகல் 2-10]

இந்தக் காரியத்தை இன்று புரட்சித் தலைவரவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்கொண்டிருக்கிறார்கள். அப்போது என்ன சொன்னீர்கள், இப்போது என்ன செய்கிறீர்கள், நாளை என்ன செய்யப்போகிறீர்கள் என்று இந்த அவையிலே பேசி அதன் காரணமாக ஒவ்வொரு காரியமும் அரசியல் நோக்கு இருக்கிறதோ என்ற சந்தேகம் ஏற்பட நாம் இடமளிக்காமல் செயல்பட வேண்டும். ஒகனேக்கல் திட்டத்தைப்பற்றி கூட இங்கே பேசினார்கள். அதை நாங்கள் மனதிலே வைத்துக்கொண்டிருக்கிறோம். பேச வேண்டிய இடத்தில் பேசி, திட்டங்களை நிறைவேற்ற காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

அடுத்து, ஒரு முக்கியமான கருத்து. சென்னையைப் பொறுத்த மட்டில் குடிநீர் கொடுக்க வேண்டிய ஒரு திட்டம் இருக்கிறது. அதுதான் கிருஷ்ணா நதி நீரை கொண்டுவரும் திட்டம், அது பற்றி பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் சம்மந்தமாக தமிழ்நாட்டு எல்லைக்குள் நடக்க வேண்டியவேலைகள் கிட்டத்தட்டமுடிவடைந்துவிட்டன. தேவையானமதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். அதிகாரிகள் தொடர்ந்து எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். ஆந்திர மாநிலத்தில் அவர்களுடைய எல்லைக்குள் நடக்க வேண்டிய வேலை 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த இரண்டும் முடிந்த பிறகு கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டு வரும் சாத்தியக் கூறு அதிகமாகும் திட்டத்தை விரைவுப்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலமும் கருத்துக்களைத் தெரிவித்ததன் மூலமும் வலியுறுத்தியிருப்பவைகளை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து பார்த்து, என்னென்ன திட்டங்களைக் கேட்டிருக்கிறீர்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து, இன்னின்ன திட்டங்களை இன்னின்ன காலத்தில் எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது; இன்னிட்ட திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன என்பதை எல்லாம் பார்த்து, அவைகளை விரைவுபடுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் சாத்தனூர் விஷயத்தைப் பற்றி சொன்னார்கள். 20,000 ஏக்கர் பாசனம் பெறும் வாய்ப்பு இருக்கிற திட்டம், அதை நிறைவேற்ற வாய்ப்பு இருக்கிறது, விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் போது கூட அதுபற்றிய விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். நிறைய திட்டங்கள் இருக்கின்றன. எதை எடுத்துக்கொள்வது, எதை விடுவது என்று சொல்லக்கூடிய அந்த அளவுக்கு நம்முடைய நீர் வளம் இல்லை. எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற முயற்சி செய்வோம்.

திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்யும்போது 'பெனிஃபிட் காஸ்ட் ரேஷியோ' பார்க்க வேண்டியிருக்கிறது. சில நேரங்களில் பிற்பட்ட பகுதிகளில் பயனளிக்கக்கூடிய ஒரு திட்டமாக இருந்தால் அதற்கு இந்த ரேஷியோவை கூட விட்டு விடுகிறோம். மக்கள் நலன் கருதி இருக்கின்ற விதிமுறைகளை தளர்த்தி, திட்டங்களை எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக அனைத்துத் திட்டங்களையும் படிப்படியாக இந்த அரசு நிறைவேற்ற முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். இதற்கு ஒதுக்கியிருக்கிற நிதி இப்போது போதாது என்றாலும், இந்த கருத்து பரிமாற்றங்கள் எல்லாம் முடிந்தபிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, இன்னும் கூடுதல் நிதியை இந்த பாசனத் துறைக்கு ஒதுக்க வேண்டிய முயற்சிகளை எடுப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு (கன்சல்டேடிவ் கமிட்டி) இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே இந்தக் குழு இருந்தது. சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு இருந்தது. யாரையும் கலந்து ஆலோசிக்காமல் இடையிலே அதை கலைத்துவிட்டார்கள். இப்போது நாம் அதை அமைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசித்து, அந்தந்த மாவட்டத்திலுள்ள முக்கியமானவர்களையும் சேர்த்துக்கொள்ளலாமா என்பதை எல்லாம் கேட்டறிந்து, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாக, யார் யாரை குழுவில் சேர்க்க வேண்டுமோ அவர்களுடைய பெயர்களை எல்லாம் கேட்டு, குழுவை அமைக்க முயற்சி செய்கிறோம். அது ஏற்கெனவே இருந்த ஒன்றுதான். மீண்டும் அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்; அது வரவேற்கத்தக்கதுதான்.

அதையெல்லாம் எப்படி சாத்தியப்படுத்துவது என்பது பற்றி முதல்வர் அவர்களோடு கலந்து பேசி துறைப் பொறியாளர்களிடமும் மற்றவர்களிடமும் கலந்து பேசி இவற்றை விரைவாக அமைப்பதன் மூலமாக பெரிய நன்மைகள் ஏற்படுவது உறுதியாகும் என்றால் நிச்சயமாக அதைச் செய்வதற்கு இந்த அரசு தயங்காது என்பதைக் கூறிக்கொள்கிறேன். எனவே உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பதிலை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேராவூரணி தொகுதியிலுள்ள சேதுபாவா சத்திரம், மரக்காவலசை, உடைய நாடு மகிழங்கோட்டை, இராஜாமடம், பட்டங்காடு ஆகிய கிராமங்கள் கடைமடைப் பகுதிகளாகும். அங்கு பாசனத்திற்கு தண்ணீர் போதிய அளவு வரவில்லை. ஆகவே அந்த கடைமடைப்பகுதிகளுக்கும் போதிய அளவு பாசனம் கிடைக்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1980 ஜூலை 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடைமடைப் பகுதிகள் பற்றியும் கவனிக்கப்படும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள் அவை என்பதை ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு மகிழ்ச்சி. ஆனால் அதே நேரத்தில் சாத்தனூர் அணையிலிருந்து 20 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் என்று சொல்கிறார்கள். அது செஞ்சிப் பகுதிக்கும் வருமா என்பது குறித்து அமைச்சரவர்கள் சரியான முறையில் பதிலளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இங்கே குறிப்பிலே கள்ளக்குறிச்சி வட்டத்திலே பல்வேறு பகுதிகளுக்குப் பாசனவசதி கிடைக்கும் என்று இருக்கிறதே தவிர செஞ்சிப் பகுதிக்கு வருகின்றதா இல்லையா என்பது தெரியவில்லை. ஒருவேளை அங்கு வந்து பார்த்தால்தான் தெரியும் என்று நினைக்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் முதலில் 9 ஆயிரம் ஏக்கர் என்று இருந்தது பின்னர் 20 ஆயிரம் ஏக்கர் என்று மாற்றி புன்செய் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கொடுக்கலாம் என்பதுபற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறேனேயல்லாமல் வேறொன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் தலைவரவர்களே, குளித்தலை தாலுக்காவில் அரியாற்றில் அணை கட்டுகின்ற உத்தேசம் புனராலோசனை செய்யப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அது சம்பந்தமாக அமைச்சரவர்களுடைய கருத்து என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக அந்த கோரிக்கையை அரசு கவனிக்கும்.

திரு. ஆனூர் ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் முழுக்க முழுக்க ஏரிப்பாசனத்தைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறோம். அந்த ஏரியில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலே ஆக்கிரமிப்பு செய்வது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகின்றது. அதனால் நீர்ப்பாசனம் பெற வேண்டிய நிலங்கள் கூட நீர்ப்பாசனம் பெற முடியாத நிலைமை இருக்கின்றது. ஆகவே பாசனத்துறையும், வருவாய்த்துறையும் சேர்ந்து அந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற சீரான திட்டம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்பதிலே அரசுக்கு வேறுபட்ட கருத்து இல்லை. ஆனால் சில இடங்களிலே ஒரு குறிப்பிட்ட காலத்திலே நீர் வந்ததற்குப் பிறகு அந்த இடங்கள் வெற்றிடங்களாக இருக்கும்போது நிலமற்றவர்கள் சிலர் விவசாயம் செய்கின்றார்கள். ஆகவே அதைக்கூட நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும் என்ற வகையிலே டிப்பார்ட்மென்ட் மூலம் அவர்களை மரங்கள் வளர்க்கச் சொல்லி அந்த இடங்களைப் பாதுகாக்கலாமா என்ற முயற்சி நடந்து வருகின்றது. பொதுவாக ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கான திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே தனித்தனியாக மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கெங்கு ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றது என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, வைகைத் திட்டம் கொஞ்சம் சுறுசுறுப்பு இல்லாமல் இருக்கின்றதே, அதைக் கொஞ்சம் சுறுசுறுப்பாக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுமா? அதோடு தாமிரபரணி திட்டத்தையும் உடனடியாக அமலுக்குக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வைகைத் திட்டம் பற்றியெல்லாம் முன்பே அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

கோரிக்கை எண்—36.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. கல்லன், டி. மணி, மு. அப்பாதுரை, பொ. விஜயராகவன், எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,33,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[பிற்பகல் 2-20]

கோரிக்கை எண்—50.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் செ. சிவசாமி, பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

1980 ஜூலை 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

''மானியக் கோரிக்கை எண்—50. பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 37,69,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (29—7—1980) 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

65. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 26—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 533 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ்] பேரவை முன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*115. பாசனம் மீதான மானியக் கோரிக்கை 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

*116. 1979–80 ஆம் ஆண்டிற்கான பாசனம் மீதான மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துரைகள் மற்றும் குறிப்புரைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை குறித்த விவர அறிக்கை (ஆங்கிலம்).

*117. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும். (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 29/1980).

* 26-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

ஒழுங்காகத் தயாரித்துக் கொடுப்பார். ஆகவே, அப்படிப் பட்ட தனி அதிகாரியை அங்கே நியமித்து, பல ஆண்டு கால மாக நீர்ப்பாசன வசதியில்லாத அந்தப் பகுதிகளுக்கு நீர்ப் பாசன வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலசந்தூர் கால்வாய்க்கு கரை இல்லை. 1965ஆம் வருஷம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 900 அடி அக்வயர் செய்து, அந்தக் கண்மாயை நீட்டித்துக் கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மழைக் காலங்களில் அந்த கிராமத்து மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான பைல் இருக்கிறது; ஆனால் அந்த பைல் திடீரென்று காணாமல் போகின்றது. அதற்கு துரித நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். தரக்குடி கண்மாய்க்கு வேண்டிய நிலம் இருக்கிறது. ஆகவே அதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

2. ஒழுங்குப் பிரச்னைகள் (தொடர்ச்சி.)

(ஆ.) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது (தொடர்ச்சி)

திரு. வெ. இராஜசேகரன்: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

* **

(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள் யார் பாஸ் கொடுத்தார்கள், யார் எல்லாம் இதற்குப் பொறுப்பு என்று கேட்கச் சொல்லி யிருக்கிறேன். (கூச்சல்—குழப்பம்) இந்த அவையை அவமதிக் கிறார் என்று சொன்னால், உங்களையும் அவமதித்ததாகத் தான் அர்த்தம். அதைப் பற்றி நான் விசாரிக்கச் சொல்கி றேன். (கூச்சல்—குழப்பம்).

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1980 ஜூலை 28]

திரு. இரா. தாமரைக்கனி: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே * * (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது வரை இந்தப் பிரச்சினை குறித்துப் பேசிய அனைத்தையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கி விடும்படி உத்திரவிடுகிறேன். கூச்சல்—குழப்பம்)

[முற்பகல் 11.50]

திரு. துரைமுருகன்: தீர்ப்பை நான் ''சேலஞ்ச்'' பண்ண வில்லை. உங்களுடைய தீர்ப்பின்மீது கருத்துச் சொல்ல விழையவில்லை. இந்த அவையில் நோட்டீஸ் வீசியது இந்த அவையை அவமதித்தது என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது. இவ்வாறு பல்வேறு முறை நடைபெற்று நோட்டீஸ் வீசியவர்களுக்குத் தண்டனை கொடுக் கப்பட்டிருக்கிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அறிவார் கள். இந்த அவையில் நோட்டீஸ் வீசியதால் அந்த நபர் தண்டிக்கப்பட வேண்டியவர்தான் என்பதிலே மாறுபாடான கருத்து கிடையாது. * * * *

திரு. சேலம் மு. ஆறுமுகம்: * *

திரு. இரெ. இராசமாணிக்கம்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்க னவே உத்தரவிட்டபடி இதுவரை இந்தப் பிரச்சினை குறித்து பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(6) வரவு—செலவுத் திட்டம் 1980-81— வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனக் கோரிக்கை சம்பந்தமாக கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்தை நான் இந்தச் சபையின் முன்பாக தெரிவிக்க விரும்புகிறேன். நீர்ப்பாசனத்தில் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது என்பதை அனைவரும் அறி வோம். தமிழகத்திலே விவசாயம் நவீன முறைகளில் செய்யப் படுகிறது என்பதும், அதற்கு அதிகப்படியான மூலதனம் போடப் படுகிறது என்பதும் அனைவரும் அறிந்திருக்கக்கூடிய உண்மை. ஆகவே, இம்மாதிரி விவசாயத்தில் அதிக மூலதனத்தைக்கொண்டு நவீன முறைகளில் செய்யப்படக்கூடிய விவசாயத்திற்கு உத்தர வாதத்துடன் தண்ணீர் கிடைக்கக்கூடிய முறையில் அரசு பொறுப் புடனே நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1980 ஜூலை 28] [திரு. வே. இரா. ஜெயராமன்]

எங்களது தேனித் தொகுதியிலுள்ள புலிகுத்தி, மார்க்கயன் கோட்டை, குச்சனூர், ஐயம்பட்டி ஆகிய மேடான வறண்ட பகுதிகளும் பயனடையும் வகையில் தற்சமயம் ஆய்விலுள்ள மேலப்பெரியாறு திட்டத்தை பெரியகுளம் வரை மேற்குமலை அடிவாரத்தையொட்டி பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் போல ஏற்படுத்தித் தரும்படி மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

அன்னஞ்சி கிராமத்தில் சிகு ஓடையின் குறுக்கே ஒரு அணை யினை ஏற்படுத்தி பாசன வசதி செய்து தர வேண்டுகிறேன். இதன் மூலம் வறண்டுபோன கிணறுகளில் நீரூற்றுக்கள் ஏற்படு வதற்கும் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைப்பதன் மூலம் நிரந்தர வேளாண்மை வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சாத்தியக்கூறுகள் அதிகமிருப்பதால் இந்தத் திட்டத்தை 'ஸ்பெ ஷல் மைனர் இரிகேஷன்' திட்டத்தில் சேர்த்து அரசு ஆணையிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித்துறையில் தினக் கூலிகளாகப் பணியாற்று கின்ற சுமார் 300 பேர்களுக்கு மேற்பட்ட டிப்ளமோ படித்தவர் களை தொழில் நுட்ப உதவியாளர்களாக நிரந்தரப்பணியில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கை மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில் நூறாண்டுக் காலமாக பரிசீலனையில் இருந்துவரும் எடமச்சி கால்வாய், பாலேஸ்வரம் நீர்த்தேக்கத்திட்டம் ஆகியவைகளை உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் 12,000 ஏக்கர் பாசன வசதி பெறும். பல்லாண்டு காலமாக கேட்கப்பட்டு வருகிற தேனி தொகுதியிலுள்ள திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, எனக்கு பேச வாய்ப் பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

7. அறிவிப்பு.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை (28-7-80) சுமார் 11-40 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டு அறிக்கை வீசி, கோஷங்கள் எழுப்பிய திரு. ராஜு என்பவர் மகன் திரு. ஆர். பி. வேலன்; துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்து கோஷங் களை எழுப்பிய திரு பாலுசாமி என்பவர் மகன் திரு. பி. நந்த குமார் ஆகியவர்களுடைய செயல் கண்டிக்கத்தக்கதும் பேரவையை அவமதிக்கும் செயலும் ஆகும்.

அவர்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு. து. இராசரத்தினம் ஆவார்.

இது குறித்த தீர்மானத்தை மொழியும்படி மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''இன்று (28–7–1980) பகல் சுமார் 11-40 மணிக்கு சட்ட மன்றப பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்க உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை பழையவண்ணாரப்பேட்டை இராதாகிருஷ்ணன் நகர், கிழக்கு சிமெட்ரி சாலை, 21-வது எண் வீட்டிலிருக்கும் திரு. ராஜு என்பவரின் மகன் ஆர்.பி. வேலன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்; பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்துக் கோஷங்களை எழுப்பிய சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, இராதா கிருஷ்ணன் நகர், வரதராஜப்பெருமாள் செட்டித் தெருவில், 5-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. பாலுசாமி என்பவரின் மகன் பி. நந்தகுமார் என்று சொல்லிக்கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மாணிக்கின்றது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, முன்பு இந்தத் தண்டனை 3 நாள் என்று குறைக்கப்பட்டிருக்கின்றது. அதுபோல இன்றும் அந்தத் தண்டனை காலத்தை 3 நாளாகக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: தண்டனையை 3 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்று நானும் எனது கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஜூலை 28]

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அவர்களுக்கு தண்டனை கொடுப்பது சபாநாயகர் அவர்களுடைய பொறுப்பு. நான் அதிலே குறுக்கிட விரும்பவில்லை.

* * * * *

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். (கூச்சல்-குழப்பம்)

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, திரு. சங்கரய்யா அவர்களுடைய கோரிக்கைக்கிணங்க என்று அமைச்சர் சொல்கிறார். மதிப்பிற்குரிய திரு.சங்கரய்யா அவர்களுடைய பெயரைச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே போன்று எங்கள் பக்கத்திலே இருந்தும் தண்டனைக் காலத்தைக் குறைக்கவேண்டும் என்று சொல்கிறோம்.

[பிற்பகல் 12-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையில் துண்டறிக்கை வீசியது இந்தப் பேரவையை அவமதிக்கும் செயல். இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கும் செயல்.... (கூச்சல்-குழப்பம்).

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்களின் பெயரைச் சொல்வதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் தண்டனை குறைக்கப்பெற வேண்டும் என்று நாங்களும் தான் சொல்லியிருக்கிறோம். ஆகவே பொதுவாகவே சொல்லட்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி விடலாம். பிரச்னை இல்லை.

மாண்புமிகு திரு.கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது பேரவை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

''தீர்மானத்தில் உள்ள '7 நாட்கள் என்பது 3 நாட்கள்' என்பதாகத் திருத்தப் பெற வேண்டும்''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''இன்று 28–7–1980 பகல் சுமார் 11-40 மணிக்கு சட்டமன்றப்பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை, பழைய வண்ணாரப் பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், கிழக்கு சிமெட்ரி சாலை 21வது எண் வீட்டிலிருக்கும் திரு ராஜூ என்பவரின் மகன் ஆர். பி. வேலன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீச முயற்சித்து கோஷங்களை எழுப்பிய சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, இராதாகிருஷ்ணன் நகர், வரதராஜப்பெருமாள் செட்டித்தெருவில் 5ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. பாலுசாமி என்பவரின் மகன் பி. நந்தகுமார் என்று சொல்லிக் கொள்ளும் நபரும்,

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் மூன்று நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசின் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

* * * * *

6. வரவு-செலவுத் திட்டம் 1980–81 வாக்டுெக்ப்பு— தொடர்ச்சி.

[பிற்பகல் 12-40]

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத தலைவர் அவர்களே, தமிழக அரசு தாக்கல் செய்திருக்கின்ற நீர்ப்பாசன கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்கள் தெரிவிக்க விழைகிறேன். குறிப்பாக, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிலே வந்தபிறகு, புதிய திட்டங்களை அறிவிப்போம், ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்வோம் என்று சொன்னார்கள். அத்தகைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

''மானியக் கோரிக்கை எண்—50. பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 37,69,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (29—7—1980) 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

65. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 26–2–1980 ஆம் தேதியிடப்பெற்ற 533 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ்] பேரவை முன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*115. பாசனம் மீதான மானியக் கோரிக்கை 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

*116. 1979–80 ஆம் ஆண்டிற்கான பாசனம் மீதான மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துரைகள் மற்றும் குறிப்புரை களின் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை குறித்த விவர அறிக்கை (ஆங்கிலம்).

*117. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும். (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 29/1980).

* 26-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

இணைப்பு

[239-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

பாசனம் மீதான மானியக் கோரிக்கை, 1980—81.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் பேரில் இவ்வரசுக்கு கோரிக்கை 36—பாசனம் என்பதன் கீழ் ரூ. 28,33,22,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 50—பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன் கீழ் ரூ. 37,69,58,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கு ஏற்படும் செலவும், அவற்றை பராமரிப்பதற்கான வழக்கமான செலவும், வெள்ளம், புயல், காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும், ''கோரிக்கை 36—பாசனம்'' என்பதன் கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு ''கோரிக்கை 50—பாசனம்'' மீதான மூலதனச்செலவு என்பதன் கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

பெரிய மற்றும் நடுத்தர பாசனத்திற்கான ஒதுக்கீடு.

2. பெரிய, நடுத்தரப்பாசன திட்டங்களுக்கு 1980-81-ல் 24.38 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

பெரிய நீர்ப்பாசனத்திட்டம்:

3. 1979-80-ல், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் (கோயம்புத்தூர் மாவட்டம்) மற்றும் பெரியாறு-வைகை நவீனப்படுத்தும் திட்டம் (மதுரை மாவட்டம்) ஆகிய இவ்விரண்டு திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வந்தன.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பணிகள் யாவும், அநேகமாக முடிவடைந்துவிட்டன, தற்போது 2.53 லட்சம் ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தின் ஆயக்கட்டில் உள்ளன. இந்த நிலங்கள் யாவற்றிற்கும் சுற்றுமுறையில் (Rot tional basis) கால்வாய்களின் மூலம் நீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின், ஆயக்கட்டை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் மற்றும் பல்லடம் ஆகிய வட்டங்களில் உள்ள 1.15 லட்ச ஏக்கர் கூடுதல் நிலங்கள் பயன் பெறும்படி, விரிவாக்கும் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

1980 ஜூலை 28]

உலக வங்கியின் உதவியுடன் ரூ. 41.04 கோடி செலவில் நிறைவேற்றப்படும் பெரியாறு-வைகை நவீனப்படுத்தும் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. 1979-80-ல் இத்திட்டத்திற்காக ரூ. 686 இலட்சம் செலவு செய்யப்பட்டது. 1980-81-ல் இத்திட்டத்திற்காக ரூ. 9.39 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடுத்தர பாசனத் திட்டங்கள்.

4. சென்ற ஆண்டுகளில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள எட்டு நடுத்தர பாசனத் திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன. வறட்சிப்பகுதியில் அமைந்துள்ள தர்மபுரி மாவட்டத்தில் மூன்று நடுத்தர பாசன திட்டங்களுக்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. நாகவதி ஆற்றில் 164 மி.கன அடி கொள்திறன் கொண்ட நீர்த்தேக்கத்திட்டம் ஒன்று ரூ. 178 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினால் 1,993 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன்பெறும். 6,250 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயனடையும் வண்ணம் ஈச்சம்பாடி கிராமத்தில் பொன்னியாற்றில் ரூ. 217 இலட்சம் செலவில் ஒரு அணைக்கட்டு அமைக்க அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 5,330 ஏக்கர் நிலங்கள் பயன்பெறுவதற்காக ரூ. 332 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொப்பையாற்றின் குறுக்கே 299 மி.கன அடி கொள்திறன் கொண்ட ஓர் நீர்த்தேக்கம் அமைப்பதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் பி. டி. இராஜன் வாய்க்காலிலிருந்து வரப்பு கால்வாய் (Contour canal) ரூ. 44.12 இலட்சம் செலவில் அமைப்பதற்காக அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில் 1,341 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு பயன்படும். 1980—81-ல் இந்நான்கு திட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. சாத்தனூர் வலதுகரை கால்வாய்த்திட்டம் 9,005 ஏக்கர் புதிய நன்செய் நிலங்களுக்கு பாசன வசதியும், மற்றும் 3,085 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு பாசன உறுதியும் அளிக்கும் நோக்கத்துடன், அமைப்பதற்கு முதலில் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அதிக பரப்புள்ள 20,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் நோக்கத்துடன் இதன் ஆயக்கட்டை நன்செய்யிலிருந்து புன்செய்யாக மாற்றுவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்கான வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

6. வெள்ளக்காலங்களில் வைகை நதியில் வரும் உபரிநீரை வைகையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கிருதமால் மற்றும் குண்டார் நதிப்படுகைகளுக்கு திருப்பிவிடுவதற்கு ரூ. 95 இலட்ச மதிப்பிட்டுச் செலவில் ஓர் திட்டத்திற்கு சமீபத்தில், அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம், வைகை நதியை

கிருதமால் மற்றும் பரலியாற்றுடன் இணைப்புக் கால்வாய்கள் மூலமாக இணைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டபின் கிருதமால் நதிப்படுகையில் உள்ள 10,424 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்கு பயன்படும் 35 ஏரிகளிலும் மற்றும் குண்டார் நதிப்படுகையின் கீழ் உள்ள 14,902 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்கு பயன்படும், 64 ஏரிகளிலும், ஒரு முறை நீர் நிரம்பும்.

7. நடப்பு ஆண்டு 1980—81-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உப்பார் நீர்த்தேக்கத்திட்டம் மற்றும் சித்தமல்லி நீர்த்தேக்கத்திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் நொய்யல் அணைத்திட்டம், தர்மபுரி மாவட்டத்தில் சூலகிரி-சின்னார் திட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அனந்தனார் வாய்க்கால் நவீனப்படுத்தும் திட்டம் ஆகிய மேலும் ஐந்து திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான சாத்தியம் உள்ளது. இவ்வைந்து திட்டங்களினால் 18,783 ஏக்கர் புதிய நிலங்கள் பயன்பெறும். 4,446 ஏக்கர் பரப்பளவு நிலங்களுக்கு பாசன உறுதி கிடைக்கும்.

நீர்ப்பாசனம் வளம் :

8. 1979-80 ஆம் ஆண்டில் சாத்தனூர் வலதுகரை கால்வாயின் பெரும்பகுதி முடிக்கப்பட்டு 7,420 ஏக்கர் புதிய ஆயக்கட்டுகள் பயன்பெறுவதற்கான பாசன வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு 1980-81-ல் சாத்தனூர் வலதுகரை கால்வாயின் ஒரு பகுதி (4,940 ஏக்கர்) பரம்பிக்குளம்-ஆளியாறுதிட்டத்தில் அடங்கிய கீழ் நீரார் அணைக்கட்டின் ஒரு பகுதி (16,100 ஏக்கர்) மற்றும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் அடங்கிய ஆயக்கட்டு விரிவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதி (9,000 ஏக்கர்) வேலைகள் முடிக்கப்பட்டு 30,040 ஏக்கர் புதிய நிலங்கள் பயன்பெறும்படி பாசன வசதியை உருவாக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

சிறுபாசனம் :

9. சிறப்புச் சிறுபாசன திட்டங்களும் மற்றும் தூர்வாரி மேம்படுத்தும் திட்டங்களும் :—

சிறுபாசனத் திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, இத்திட்டத்தை பொறுப்பேற்று செயல்படுத்த தனியாக ஓர் தலைமைப் பொறியாளரை அரசு நியமித்துள்ளது.

1979—80-ம் ஆண்டு, பல்வேறு காரணங்களால் பல ஆண்டுகளாக முடிக்கப்பெறாத திட்டங்களை முடிப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. மூன்றுமுதல் ஏழு ஆண்டுகளாக முடிக்கப்பெறாத அத்தகைய 45 திட்டங்கள் 1979-80ல் முடிக்கப்பட்டன.

1980 ஜூலை 25]

1979-80-ம் ஆண்டில் சிறப்புச் சிறுபாசனத் திட்டம் மற்றும் தூர்வாரி மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 45 புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ.270.05 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1980-81-ம் ஆண்டில் ரூ. 200 லட்சம் சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்காகவும், ரூ. 9.95 லட்சம் தூர்வாரி மேம்படுத்தும் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிறைவு பெறாதிருக்கும் எல்லா திட்டங்களையும் நிறைவேற்றி முடிப்பதற்காக 1980-81-ல் சீரிய முயற்சி எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

தீவ்ரப்படுத்தப்பட்ட சிறுபாசனத்திட்டங்கள் :

10. தீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசன திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் உள்ள சிறுபாசன நீர் நிலைகளை சீர்படுத்தி தரத்திற்கு கொண்டு வருவதற்காக 1979-80-ல் ரூ. 81.07 லட்சங்கள் செலவிடப்பட்டது. மேற்கூறிய சிறுபாசனத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1980-81-ம் ஆண்டிலும் ரூ. 75 லட்சங்கள் பொதுப்பணித்துறையின் கீழுள்ள நீர் நிலைகளுக்கும் ரூ. 50 லட்சங்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் உள்ள நீர்நிலைகளுக்கும் ரூ. 10 லட்சங்கள் முன்னாள் ஜமீன் நீர் நிலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது.

முன்னாள் ஜமீன் குளங்களை தரத்திற்குக் கொண்டுவருவதற்கான சிறப்புத்திட்டம்.

11. தரத்திற்குக் கொண்டுவர வேண்டிய பெரும்பான்மையான முன்னாள் ஜமீன் குளங்கள் ராமநாதபுரம் செங்கற்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் அமைந்துள்ளன. இந்த மூன்று மாவட்டங்களில் மட்டும் தரத்திற்குக் கொண்டு வர வேண்டிய குளங்களின் எண்ணிக்கை சுமார் 4,790 ஆகும். குறைவான நிதி ஒதுக்கீட்டின் காரணமாக விரைவுப்படுத்தப்பட்ட சிறுபாசனத்தின் கீழ் இம்மூன்று மாவட்டங்களில் உள்ள பெருவாரியான முன்னாள் ஜமீன் குளங்களை தரத்திற்கு கொண்டுவரும் பணியில் அதிக முன்னேற்றம் காண இயலவில்லை. ஆகவே இந்த மூன்று மாவட்டங்களில் உள்ள முன்னாள் ஜமீன் குளங்களை தரத்திற்கு கொண்டுவருவதற்காக தேவையான நிதி ஒதுக்கீடு அளித்து மற்றும் சிறப்பு பணியாளர்களையும் நியமித்து ஒரு திட்டத்தை குறிப்பிட்ட காலவரம்பில் செயல்படுத்துவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம்.

12. 500 ஏக்கர் அல்லது அதற்கும் மேற்பட்ட ஆயக்கட்டுகளுக்கு பாசனவசதி தரக்கூடிய 500 கண்மாய்களை உலக வங்கியின் உதவியுடன் நவீனப்படுத்தும் பெருந்திட்டத்தைப்பற்றி உலக வங்கி அதிகாரிகளுடனும் மற்றும் மத்திய அரசு அதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. உலக வங்கியின் ஆலோசனைக்கிணங்க 1979-80-ல் மூன்று குளங்களில் முன்னோடி ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. பல்வேறு மாவட்டங்களில் இன்னும் சில குளங்களை முன்னோடித் திட்டங்களாக எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடி ஆய்வுகளின் மீதான முடிவுகள் தெரிந்த பிறகு இப்பெருந்திட்டம் உலக வங்கிக்கு அனுப்பப்படும்.

நிலநீர் :

13. இந்த மாநிலத்தில் மேல் பரப்பு நீர் பெருமளவுக்கு பயன்படுத்தப்பட்டுவிட்டதால் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு மிகச் சிறிய அளவு நீரே எஞ்சியுள்ளது. ஆகவே இந்த மாநிலத்தின் நிலத்தடி நீரை எதிர்காலத் தேவைகளுக்காக முறைப்படுத்தி உபயோகிக்கும் நோக்கத்துடன் நிலத்தடிநீர் வளத்தின் சரியான புள்ளி விவரங்களை சேகரிக்கும் பணிக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. பொதுப்பணித் துறையின் நிலநீர்ப்பிரிவு ஏற்கனவே ஒவ்வொரு வட்டாரத்தினையும் ஒரு பகுதியாகக் கொண்டு நிலத்தடி நீர் வளத்தினை ஆய்வு செய்துள்ளது. இந்த ஆய்விலிருந்து இம்மாநிலத்தில் பாதிக்கு மேல் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மிக அதிக அளவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. ஆதலின் நிலநீர்ப்பிரிவு நிலத்தடி நீர் வளத்தினை அளவிடுவதற்காக கிராம வாரியாக விரிவான ஆய்வு செய்யும் பணியினை தொடங்கியுள்ளது. இவ்வாறு ஆய்வு செய்வதன் மூலம் மிக அதிகமாக நிலத்தடி நீர் பயன்படுத்தப்பட்டுள்ள கிராமங்கள் எவை என்பதை நிர்ணயம் செய்ய முடியும். இந்த ஆய்வுப்பணி நடைபெற்று வருகிறது. இந்த மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலநீர்ப்பிரிவு செய்து வரும் நிலத்தடி நீர் பற்றிய ஆய்வுகளின் முடிவுகளை தொகுத்து நிலநீர் வரைப்படம் (Atlas) தயாரிக்கப்பட்டு வருகிறது.

14. மாநில அரசு நிறுவனங்கள் அமைத்துள்ள தொழில்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் அரசு துறைகள் ஆகியவற்றிற்கு நிலத்தடி நீர் பற்றிய புலனாய்விற்கும் அது சம்பந்தப்பட்ட வேலைகளுக்கும் அவசியமான ஆலோசனை

களை, வழங்கும் பணியையும் நிலநீர்ப்பிரிவு மேற்கொண்டுள்ளது. சோதனை நடவடிக்கையாக, பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் நிலத்தடி நீர் சம்பந்தமாக ஆலோசனைக் கூறுவதற்கு நிலநீர்ப் பிரிவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

15. நீர்வளத்தினைப் பற்றிய பிரச்சனைகளை முழுமையாக ஆய்வு செய்வதற்கென இந்த மாநிலம், இந்த நாட்டிலேயே முதன் முதலாக ஒரு நீர் ஆய்வு நிலையத்தினை நிறுவியுள்ளது. 1975–ம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நிலையம் தற்போது சிறிய அளவில் பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. அடையாறில், இந்த ஆய்வு நிலையத்திற்காக ரூ 10 லட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடம் பூர்த்தியாகும் தருவாயில் உள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் (UNDB) நிதி உதவி பெற்று இந்த நீர் ஆய்வு நிலையத்தினை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு இந்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. புதிய கட்டிடம் பூர்த்தியானதும், இந்த நீர் ஆய்வு நிலையத்தின் நடவடிக்கைகள் 1980–81ம் ஆண்டில் விரிவுபடுத்தப்படும்.

16. மாநில சட்டப்பேரவையில், நிலத்தடி நீரை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் உரிய வழிவகைகளை மேற்கொள்வதற்கான ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட்டு, சட்டமன்ற பேரவையுடன் இணைந்த தேர்வுக் குழுவின் (Joint Select Committee) பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. ஆனால், கடந்த பிப்ரவரி மாதம் சட்டப் பேரவை கலைக்கப்பட்டதன் காரணமாக இந்த மசோதா காலாவதியாயிற்று. நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதை கட்டுப்பாடு செய்யவும், முறைப்படுத்தவும் ஒரு புதிய மசோதாவினைக் கொண்டு வருவதற்கான கருத்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது,

1979-80-ல் பாசனம் :

17. 1979-80-ல் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழைகள் நன்றாக இருந்தன. இம்மாநிலத்திலுள்ள எல்லா நீர்த்தேக்கங்களுக்கும், ஏரிகளுக்கும், நீர்வரத்து நன்றாக இருந்தது. சில நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிந்தன. அநேகமாக மாநிலத்திலுள்ள எல்லா பாசன அமைப்புகளிலிருந்தும் குறித்தபடி

தண்ணீர் விடப்பட்டது. பயிர்கள் அறுவடையாகும் வரையில் போதுமான நீர் வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் கீழ், இரண்டாவது பயிருக்கும், கீழ் பவானி பிரதானக் கால்வாயில் பாசனப் பகுதியிலுள்ள எள்ளு பயிருக்கும் கல்லணை மற்றும் மேட்டூர் கால்வாய்ப் பகுதியிலுள்ள புஞ்செய் பயிருக்கும், பிரத்தியேகமாக நீர் வழங்கப்பட்டது. மேட்டூர் நீர்த்தேக்கம் மூடப்பட்டபொழுது, போதுமான நீர் இருப்பில் இருந்தது.

வெள்ளமும், வெள்ள நிவாரணமும்:

18. 1979 ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் முதல் வாரத்தில் தொடங்கிய வடகிழக்கு பருவக்காற்றினால் தமிழகமெங்கும் பரவலாக பெருமழை பெய்தது. மதுரை திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மிகஅதிக மழை பெய்தது. தாம்பிரபரணி ஆற்றிலும் அதன் உப நதி களிலும் மற்றும் வைகை ஆற்றிலும் பெருவெள்ளம் இருந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் சற்றேறக்குறைய 380 உடைப்புகள் ஏற்பட்டன. வைகை நதியின் அபரிமிதமான வெள்ளப் போக்கினால் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகளும் வெள்ளநீரில் மூழ்கின. வைகையின் வெள்ளத்தால் வைகை கால்வாய்களுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது. பரம்பிக் குளம்—ஆளியார் திட்டத்தில் மலைச் சரிவுகளில் செல்லும் உயர் மட்டக் கால்வாய்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் உடைப்புகளை அடைப்பதற்கும், மீட்பு பணிகளுக் காகவும் மொத்தமாக ரூ. 150 இலட்சம் அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டுக்கு மீட்புப்பணி களுக்காக ரூபாய் 75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர்:

19. சென்னை மாநகருக்குக் குடிதண்ணீர் வழங்குவதை அதிகப்படுத்தும் பொருட்டு சிரிசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு 15 டி.எம்.சி. (T.M.C.) கிருஷ்ணா நீரை கொண்டு வருவதற்கான ஆய்வுகள் முன்னேற்றத்திலுள்ளன. 1981 ஆம் ஆண்டின் நடுவில் ஆந்திரப்பிரதேச எல்லைக்குள் நடக்கும் ஆய்வுப்பணிகள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாட்டு எல்லைக்குள் நடைபெறும் ஆய்வு வேலைகள் முடிவுறும் தருவாயிலுள்ளன. இரு மாநிலங்களையும் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய ஒரு தொடர்பு குழு (Liasion Committee) ஆய்வின் முன்னேற்றத்தை அவ்வப்போது மறு ஆய்வு செய்கிறது.

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 28]

காவேரி நீர்ப்பிரச்சனை :

20. காவேரி நீரை பயன்படுத்தும் மாநிலங்களுக்கிடையே அதனைப் பங்கிட்டுக்கொள்ளும் பிரச்சனை குறித்து மத்திய அரசு தலையிட்டு நியாயமான முடிவு எடுக்க, 1979 ஆம் ஆண்டில் மேற்கொண்டு ஒரு முயற்சி செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் நீர்ப்பாசன மேம்பாட்டை பாதிக்கும் எந்தவிதமான ஒரு ஒப்பந்தத்திற்கோ அல்லது ஒரு ஏற்பாட்டிற்கோ தமிழ்நாடு உடந்தையாக இருக்காது என்ற தனது முந்தைய கருத்தை மாநில அரசு வலியுறுத்தியது. நியாயமான முறையில் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும்பொருட்டு முதலமைச்சர்களிடையே மேலும் ஒரு முறை பேச்சு வார்த்தை நடத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசை அணுக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாசன திட்டங்களை நவீனப்படுத்துதல் :

21. புதிதாக எந்தப் பெரிய பாசனத்திட்டத்தையும் மேற்கொள்ள இயலாத அளவிற்கு, தமிழ்நாட்டில் கிடைக்கும் மேற்பரப்பு நீர் அனைத்தும் அநேகமாக பயன்படுத்தப்பட்டுவிட்டது. மாநிலத்தில் உள்ள பெரும்பாலான பாசனத் திட்டங்கள் நவீனதரங்களை ஒத்து இல்லை. திறன் குறைந்த நீர் பராமரிப்பு முறைகள் ஒழுங்கான பங்கீடு இல்லாமை. பூசப்படாத கால்வாய்கள் இவற்றால் நீர் வீணாவதுடன் நீர் இழப்பும் ஏற்படுகின்றது. பயன்படுத்தப்படாத மேற்பரப்பு நீர் மிகச் சிறிதளவே கிடைப்பதால் தற்போதுள்ள பாசன திட்டங்களில் கிடைக்கும் நீரின் உபயோகத்தை சிக்கனப்படுத்தி பாசனத்தை விரிவுபடுத்துவதை நோக்கமாகக்கொண்டு நவீனப் படுத்தும் திட்டங்களை மேற்கொள்வது மிகவும் அவசரமாகும். பெரியார்—வைகை பாசனத் திட்டத்தை நவீனப்படுத்தும் வேலையை அரசு ஏற்கெனவே மேற்கொண்டிருக்கிறது. பழைய பாசனத் திட்டங்களில் ஒன்றான காவிரி டெல்டாவை நவீனப் படுத்தும் பணியும் குறிப்பிட்ட அளவில் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நவீனப்படுத்துவதற்காக அரசு அலுவலர்களைக் கொண்ட குழு ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து இறுதியாக்கி வருகிறது. கீழ்பவானி பாசன திட்டத்தை நவீனப்படுத்துவதற்கான திட்ட அறிக்கையும் விரைவில் இறுதியாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோதையாறு திட்டம், மணிமுத்தாறு பெரிய கால்வாய், கீழ் பொன்னியாறு திட்டம் மற்றும் தாம்பிரபரணி திட்டம் ஆகிய நான்கு திட்டங்களையும் நவீனப்படுத்துவதற்கான ஆரம்ப ஆய்வுப் பணிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

[1980 ஜூலை 28

பெரியாறு அணை :

22. கேரள எல்லைக்குள் உள்ள தமிழ்நாட்டிற்கு சொந்தமான பெரியாறு அணை தமிழ்நாட்டினால் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பெரியாறு அணையின் நிலைமைப்பற்றி மத்திய நீர்வளக்குழுவும் இந்த அரசும் கவனம் செலுத்தி வந்தன. மத்திய நீர்வளக் குழுவின் தலைவரின் ஆலோசனையைப்பெற அவ்வணையை மேற்பார்வையிட அரசு அவரை அழைத்தது. அணையைப் பார்வையிட்ட பின், தலைவர்; மத்திய நீர்வளக்குழு, மற்றும் கேரள, தமிழக அதிகாரிகளுக்கிடையே நடைபெற்ற கூட்டத்தில் அணையைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி முடிவெடுக்கப் பட்டது. இந்த முடிவின்படி அணையைப் பலப்படுத்துவதற்கான திட்ட வேலைகளை அங்கீகரிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

நீண்ட காலத்திட்டமாக ஏற்கனவே இருக்கும் அணையின் கீழ் பகுதியில் மற்றொரு புதிய அணை கட்டுவதற்கான சாத்யக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பி விடுவது :

23. மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரித் தண்ணீரை கிழக்கு நோக்கி தமிழ்நாட்டில் வறட்சி பகுதிகள் பயனடையும் வகையில் திருப்பிவிடுவது பற்றி ஆராய்ந்து அதற்கான திட்டங்களை சமர்ப்பிக்கும்பொருட்டு மத்திய அரசால் அமைக்கப் பட்ட வல்லுநர் குழு பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றது. கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஓடும் நதிகளின் உபரித் தண்ணீரை நதிகளின் படுகைக்கு இடையே திருப்பி விடுவதற்கான கருத்துரு பற்றி பரிசீலனை செய்ய மாநில அதிகாரிகளுக்கிடையேயான கூட்டம் ஒன்றை மத்திய அரசு சமீபத்தில் கூட்டியது.

24. 1979-80 ஆம் ஆண்டு பாசனத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் யோசனைகளையும் அரசு கவனத்தில்கொண்டுள்ளது. அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

123067
123067

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Co., Mylapore, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachari & Co., Madras-1.
5 C. Subbiah Chetty & Sons, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitaraman & Co., Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sungurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MUFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore, North Arcot District.
2 Bharatha matha Book Depot, Thanjavur, Thanjavur District.
3 P. N Nathan & Co., Kumbakonam, Thanjavur District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. V. Swaminathan & Co., Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli District.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction, Tirunelveli.
8 B. Aruldass, Villupuram Town, South Arcot District.
9 Vasantham Stores, Book-sellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book-House and Publishers, 35, Nandhikoil Street, Trichi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin Book-Sellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil, Kanyakumari District.
19 Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot District.
20 Dinamani Stores, 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajanta Book Centre, Salem-1.
25 Vidya, 63, Tennure High Road, Tiruchi-2.
26 Rama Vilas Book Shop, 90, Amman Sannadhi Street, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agencies, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Lahour Law Publications, Hyderabad.
5 Puthakalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Hariyana.
7 K.P. Bagchi and Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LESGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS-2.

6B
2-452

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS